# Padasalai's
# Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

M. VENKATESAN M.A., M.PHIL ., B.ED., PG ASST ( HISTORY ) GHSS AYAPPAKKAM

பாடம் - 1

1. (அ) 1915
2. (ஆ) 1835
3. (ஈ) அரவிந்தகோஷ்
4. (அ) பாலகங்காதர திலகர்
5. (ஆ) 3 1 4 2
6. (இ) சென்னை வாசிகள் சங்கம் - 1852
7. (இ) iii, iv, i, ii
8. (இ) A.O.ஹியூம்
9. (ஈ) W.C. பானர்ஜி
10. (இ) தாதாபாய் நௌரோஜி
11. (இ) தாதாபாய் நௌரோஜி
12. (இ) கூற்று சரி காரணம் தவறு
13. (ஈ) இவை அனைத்தும்
14. (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

பாடம் - 2

15. (ஈ) லாலாலஜபதி ராய்
16. (ஈ) மேற்கண்ட அனைத்தும்
17. (இ) 3 4 1 2
18. (அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்தமடம்
19. (இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர்குமார் கோஷ்
20. (அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
21. (அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
22. (இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்.

பாடம் - 3

23. (ஆ) அன்னிபெசண்ட்
24. (ஈ) 1, 2 மற்றும் 3
25. (ஆ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான விளக்கம்.
26. (ஆ) மதன்மோகன் மாளவியா
27. (இ) முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது.
28. அ) ii, iv, i, iii
29. (ஆ) வேலண்டைன் சிரோலி
30. (இ) லாலாஹர்தயாள்
31. (இ) லாலாலஜபதிராய்

பாடம் - 4

32. (ஆ) கோகலே
33. (இ) சம்பரான்
34. (இ) அக்குழுவில் இந்தியர்கள் இடம்பெறவில்லை.
35. (அ) டிசம்பர் 31, 1929
36. (அ) சுயராஜ்யகட்சி
37. (அ) 3 1 4 2
38. (அ) 2 1 4 3
39. (அ) பஞ்சாப் துணைஆளுநர் - 1. ரெஜினால்டு டையர்
40. (ஆ) iii, ii, i, iv
41. (ஈ) iii மட்டும்
42. (அ) அ மற்றும் ஆ
43. (இ) கூற்று சரி, காரணம் தவறு.
44. அ) கூற்று மற்றும் காரணம்சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
45. (அ) இராஜாஜி
46. (அ) ஏப்ரல் 6, 1930

பாடம் - 5

47. (ஆ) 1925
48. (ஈ) இந்தியக் குடியரசு இராணுவம்
49. (ஈ) 4, 3, 2, 1
50. (இ) ஜதீந்திரநாத் தாஸ்
51. (அ) i மற்றும் ii
52. (ஆ) 1854
53. (ஈ) அனைத்தும்
54. (இ) பம்பாய் – தானே
55. (அ) 1855
56. (இ) எஸ்.ஏ. டாங்கே
57. (அ) i, ii மற்றும் iii

பாடம் - 6

58. (அ) உருது
59. (ஆ) 2, 1, 4, 3
60. (இ) சையது அமீர்அலி
61. (ஆ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது.
62. (ஆ) I மற்றும் III
63. (ஈ) சர் வாசிர்ஹசன்
64. (ஆ) 7 மாகாணங்கள்
65. (ஈ) 22 டிசம்பர், 1939
66. (அ) 3 1 4 2
67. (அ) கூற்று (i) மற்றும் (ii) சரி
68. (ஆ) 16 ஆகஸ்ட், 1946
69. (இ) மௌண்ட்பேட்டன்
70. அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
71. (ஈ) 2 3 4 1

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

M. VENKATESAN M.A., M.PHIL ., B.ED., PG ASST ( HISTORY ) GHSS AYAPPAKKAM

பாடம் - 7

72. (இ) அக்டோபர் 17, 1940
73. (இ) 4 3 2 1
74. ஆ) லின்லித்கோபிரபு
75. (இ) 4 3 2 1
76. (ஆ) 1939
77. (இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம்
78. (அ) உஷாமேத்தா
79. (அ) ஜவஹர்லால் நேரு
80. (ஆ) லின்லித்கோ பிரபு
81. (அ) கூற்று மற்றும் காரணம் சரி காரணம் கூற்றை விளக்குகிறது
82. (ஆ) ஜப்பான்
83. (ஈ) ஜான்ஸி ராணி படைப்பிரிவு
84. (ஈ) சிங்கப்பூர்
85. (அ) செங்கோட்டை, புதுடெல்லி
86. (அ) வேவல் பிரபு
87. (அ) ஜவஹர்லால் நேரு
88. (ஆ) i, iv, iii, ii
89. (இ) iii, iv, i, ii
90. (இ) கிளமண்ட் அட்லி
91. (இ) ஜூன், 1948.

பாடம் - 8

92. (ஆ) 3 4 2 1
93. (அ) ii, i, iii
94. (இ) 4 3 2 1
95. (ஆ) iii, i , v, iv, ii
96. (அ) ஜனவரி 30, 1948
97. (ஆ) பட்டாபி சீத்தாராமையா
98. (ஆ) ஜவகர்லால்நேரு
99. (ஆ) பம்பாய்
100. (ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.
101. (இ) டிசம்பர் 9, 1946
102. (ஈ) நவம்பர் 26, 1949
103. (இ) ஆந்திரா

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# XII – VOL –II- ONE MARK ANSWERS

## பாடம் -9

1. (ஆ) i, iii, ii
2. (ஆ) சமதர்ம
3. (அ) 1951
4. (இ) 4 3 2 1
5. (ஆ) 1972
6. (இ) வினோபா பாவே
7. (அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
8. (அ) 1951
9. (அ) 2005
10. (ஆ) 1991
11. (இ) 100
12. (இ) 1945
13. (அ) 5

## பாடம் - 10

1. (ஈ) செயின்ட் பீட்டர்ஸ்பர்க்
2. (அ) மறுமலர்ச்சி
3. (ஈ) மூன்றாம் பால்
4. (இ) கொலம்பஸ்
5. (ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
6. (இ) அரசில்லா நிலை
7. (இ) ரோஜர் பேக்கன்
8. (இ) ரோஜர் பேக்கன்
9. (ஆ) மேனுவல் கிரைசாலொராஸ்
10. (அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
11. (ஆ) II மற்றும் III
12. (ஈ) மடோனாவும் குழந்தையும்
13. (ஈ) மைக்கேல் ஆஞ்சிலோ
14. (ஈ) ரோஜர் பேக்கன் – டெக்கமரான்
15. (அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
16. (ஈ) விட்டோரியா
17. (இ) ஹெர்னன் கார்ட்ஸ்
18. (ஈ) 1534
19. (ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
20. (ஆ) எட்டாம் ஹென்றி

## பாடம் - 11

1. (ஈ) ஆங்கிலேயர்
2. (ஆ) நியூயார்க்
3. (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
4. அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
5. (ஆ) 1773
6. (ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
7. (ஈ) இரண்டும் சரி
8. (இ) வில்லியம் ஹோரவே
9. (இ) I மற்றும் II
10. (ஈ) மிராபு
11. (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
12. (ஆ) 4 3 1 2
13. (ஆ) 1789, ஜூலை 14
14. (அ) ஒலிம்பேடி கோஜெஸ்
15. (ஈ) டியூலெர்ஸ்
16. (இ) ஹைட்டி
17. (ஈ) மிகுவல் ஹிடல் கோ
18. (அ) சான் மா ர்ட்டின்
19. (அ) மான்செ ஸ்டர்
20. (இ) 3 4 1 2

## பாடம் -12

1. (அ) எல்பா
2. (இ) பெல்ஜியம்
3. (அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
4. (இ) 1824
5. (ஆ) 3, 4, 2, 1
6. (ஆ) 1848
7. (இ) கூற்று சரி. காரணம் தவறு.
8. (இ) வடக்கத்திய நட்சத்திரம்
9. (ஆ) மூன்றாம் நெப்போலியன்
10. (ஆ) எட்டியன்-கேப்ரியல் மோராலி
11. (அ) கூற்றும், காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
12. (அ) பாரிஸ்
13. (இ) 1831
14. (அ) பொதுவாக்கெடுப்பு
15. (ஈ) கரிபால்டி
16. (ஈ) ஆஸ்திரியா, பிரஷ்யா
17. (ஆ) எம்ஸ்தந்தி
18. (இ) J.G. ஃபிக்ட்
19. (இ) கூற்று சரி. காரணம் தவறு.
20. (ஈ) 4, 3, 2, 1

## பாடம் - 13

1. அ) மார்னே போர்
2. ஈ) கௌர்னே
3. அ) ஆடம் ஸ்மித்

M. VENKATESAN M.A., M.PHIL., B.ED., PG ASST ( HISTORY ) GHSS AYAPPAKKAM

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

# XII – VOL –II- ONE MARK ANSWERS

4. அ) 1833
5. ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
6. அ) ஜெர்மனி
7. ஈ) சீன- ஜப்பானியப்போர்
8. இ) அமெரிக்க ஐக்கியநாடு
9. இ) ஜப்பான்
10. இ) லண்டன் உடன்படிக்கை, 1913
11. ஈ) மான்டிநீக்ரோ
12. ஆ) போர்டியாக்ஸ்
13. ஈ) டான்சிக்போலந்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லப்பட வேண்டும்
14. ஈ) பிரெஸ்ட்-லிடோவ்ஸ்க்உடன்படிக்கை – மூன்றாம் அலெக்ஸாண்டர்
15. அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது
16. அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது
17. இ) பிரிட்டன்
18. ஈ) 1946
19. ஆ) வான் ஹிண்டன்பர்க்
20. அ) அவந்தி

## பாடம் - 14

1. (ஈ) காலனிய நாடுகளில் ஏற்பட்ட தேசிய விடுதலை இயக்கங்கள்
2. (ஆ) 1 9 2 8
3. (அ) கூற்றும், காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது
4. (அ) 1 9 3 1
5. (இ) ஜெர்மனி
6. (இ) சார்
7. (அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
8. (இ) ரஷ்யா
9. (அ) யாமமோடோ
10. (அ) பாசிச சக்திகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு கூடுதல் வீரர்களை அனுப்புதல்
11. (அ) மெக்ஆர்தர்
12. (ஈ) மிட்வே
13. (ஆ) எல் அலாமின்
14. (ஈ) ட்ரிஸ்டியை A மண்டலம் என்றும் B மண்டலம் என்றும் பிரிப்பதென்றானது. A மண்டலம் இத்தாலிக்கு கொடுக்கப்படவும், B மண்டலம் யுகோஸ்லோவியாவிற்கு வழங்கப்படவும் முடிவு செய்யப்பட்டது.
15. (இ) பாசிசவாதத்திற்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு வெற்றியை வழங்கியது.
16. (அ) (1) மற்றும் (2)
17. (இ) சமய செயல்பாடுகளுக்கு அனுமதிகோரும் பொருட்டு
18. (இ) 1912
19. (அ) கியூபா
20. (ஆ) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

## பாடம் - 15

1. ஆ. செக்கோஸ்லோவாக்கியா
2. அ. கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம். கூற்றை விளக் குகிறது.
3. ஆ. ஜார்ஜ் ஆர்வெல்
4. அ. கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
5. அ. ஐரோப்பியப் பொருளாதாரத்தை மறுகட்டுமானம் செய்வது
6. அ. கம்யூனிசம் பரவுவதை த் தடுப்பதற்கா ன நிதியுதவி
7. இ) 4 3 2 1
8. இ. கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கைத் தடுப்பது
9. ஆ. ஈராக்
10. அ. ஆல்பிரட் சாவே
11. அ. 5 3 4 2 1
12. அ. பெல்கிரேடு
13. ஆ. கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
14. இ. 51 உறுப்பினர்களுடன்
15. ஈ. மேற்கூறப்பட்ட அனைத்தும்
16. இ. மத்திய தரைக்கடலுடன்
17. ஈ. நார்வே
18. ஆ. கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
19. அ. ஒளிவுமறைவற்ற வெளிப்படைத் தன்மையை
20. ஆ. டிசம்பர் 8, 1991

M. VENKATESAN M.A., M.PHIL., B.ED., PG ASST ( HISTORY ) GHSS AYAPPAKKAM

# XII – VOL –II- ONE MARK ANSWERS

Padasalai

M. VENKATESAN M.A., M.PHIL., B.ED., PG ASST ( HISTORY ) GHSS AYAPPAKKAM

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பாடம் - 1

2 - மதிப்பெண்கள்

1. தேசியம் என்றால் என்ன?
- தேசியம் என்றால் ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல் ஆகும்.
- தனது நாட்டை ஏனைய நாடுகளைக் காட்டிலும் உயர்வான இடத்தில் வைத்துப் பார்த்தல்.
- தனது நாட்டின் பண்பாடு மற்றும் விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துதல்

2. புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுதுக.
- நிலம் விற்பனைச் சரக்காக மாற்றப்பட்டது.
- வேளாண்மை வணிக மயமாக்கப்பட்டது.
- சந்தைக்குத் தேவையான பொருட்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது.

3. அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.
- அவுரி சாகுபடி செய்த குடியானவனுக்கு பண்ணையாளர்கள் சந்தை விலையை விடக் குறைவாகவே கொடுத்தனர்.
- 1859 – 60 களில் இதனை எதிர்த்து விவசாயிகள் கலகத்தில் ஈடுபட்டனர்.
- இப்புரட்சியின் மூலம் பண்ணையார்கள் வடக்கு வங்காளத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

4. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தைவிவாதி.
- இல்பர்ட் மசோதாவின் மூலம் இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க அதிகாரம் பெ ற்றனர் .
- ஐரோப்பியர் எதிர்ப்பால் இம்மசோதாவில் திருத்தம் செய்யப்பட்டது.
- இல்பர்ட் மசோதா சர்ச்சை இந்திய தேசியத்திற்கு ஒரு காரணமாய் அமைந்தது.

5. நவீன கல்வியில் சமயப்பரப்புக் குழுக்களின் பங்கினை விளக்குக.
- இந்தியர்களுக்கு நவீனக் கல்வியை சமயப்பரப்புக் குழுக்கள் கற்றுத் தந்தன.
- நவீன மதச்சார்பற்ற கல்வியை போதித்தனர்.
- உரிமைகள் மறுக்கப்பட்ட அடித்தட்டு மக்களுக்கும், விளிம்பு நிலை மக்களுக்கும் கல்வி வாய்ப்பை வழங்கினர்.

6. ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குச் சென்னைவாசிகள் சங்கத்தினர் அளித்த கோரிக்கைகள் என்ன?
- ரயத்துவாரி, ஜமீன்தாரி முறைகள் வேளாண் வர்க்கத்தினரைக் கடும் துன்பங்களுக்கு உள்ளாக்கியதைச் சுட்டிக் காட்டியது.
- நீதித்துறையானது தாமதமாக செயல்படுவதாகவும், சிக்கல்கள் நிறைந்ததாகவும் உள்ளது என குறிப்பிட்டனர்.
- விவசாயிகளை பாதுகாக்க பண்டைய கிராமமுறை மீட்டெடுக்கப்பட வேண்டுமென இவ்வமைப்பு வற்புறுத்தியது.

7. இந்திய தேசிய காங்கிரசுக்கு முன்னர் தொடங்கப்பட்ட அமைப்புகளின் பட்டியலை தயார் செய்க.
- கிழக்கிந்தியக் கழகம் ,
- சென்னை மகாஜன சங்கம்
- சென்னைவாசிகள் சங்கம்
- , இந்தியச் சங்கம்

8. தொடக்ககால முக்கிய தேசியவாதிகளைக் கண்டறிக.
- சுரேந்திரநாத் பானர்ஜி , பத்ருதீன் தியாப்ஜி , W.C. பானர்ஜி ,
- கோபாலகிருஷ்ண கோகலே, தாதாபாய்நௌரோஜி, ஃபெரோஸ்ஷா மேத்தா
- பாலகங்காதர திலகர், பிபின்சந்திர பால், லாலாலஜபதி ராய், அரவிந்தகோஷ்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

M. VENKATESAN M.A.,M.PHIL.,B.ED., PG ASST 9 HISTORY ) GHSS AYAPPAKKAM

3 - மதிப்பெண்கள்

1. மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை' ஆய்க.
   - ❖ மெக்காலே ஆங்கில மரபுக் குழுவின் கருத்துக்கு ஆதரவாக இருந்தார்.
   - ❖ 1835இல் அவர் தனது புகழ்பெற்ற "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை வெளியிட்டார்.
   - ❖ ஆங்கில வழியில் மேற்கத்தியக் கல்வி கற்பிக்கப்படுவதற்கு ஆதரவாக வாதிட்டார்.
   - ❖ இந்தியர்கள் விருப்பத்தில், ஒழுக்க நெறிகளில், அறிவில் ஆங்கிலேயராய் இருக்க விரும்பினார்.

2. 1853இல் இந்தியச் சீர்திருத்தக் கழக தலைவரின் சென்னை வருகையைக் குறித்து நீ அறிந்தது என்ன?
   - ❖ சென்னைவாசிகள் சங்கம் தனது குறைகளை இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் முன் வைத்தது.
   - ❖ இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் இந்த மனு குறித்து விவாதிக்கப்பட்டது.
   - ❖ இந்த மனு குறித்து ஆராய இந்தியச் சீர்திருத்தக் கழகத்தின் தலைவரான H.D செய்மோர் சென்னை வந்தார்.
   - ❖ குண்டூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களைப் பார்வையிட்டார்.

3. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.
   - ❖ தன்னாட்சி, மக்களாட்சி, குடிமை உரிமைகள், போன்ற நவீன சிந்தனைகளை மக்களுக்கு பரப்பியது.
   - ❖ பத்திரிக்கைகள் அரசியலை விமர்சனம் செய்யத் தொடங்கின.
   - ❖ நாட்டினைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து மக்களிடம் பேசின.
   - ❖ மக்கள் நலன் சார்ந்த முக்கியப் பொது விஷயங்களை மக்களுக்குக் கற்றுக் கொடுத்தன.

4. பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலி தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?
   - ❖ வறுமையில் வாடிய ஏழைத் தொழிலாளர்களைச் சூழ்ச்சியின் மூலமோ அல்லது கடத்தியோ கொண்டு வர அரசு தனது முகவர்களை அனுமதித்தது.
   - ❖ வறுமையில் உழன்ற பல விவசாயிகளும் நெசவாளர்களும் ஓரளவுப் பணம் சம்பாதிக்கும் நம்பிக்கையுடன் சென்றனர்.
   - ❖ இம்முறையின் கீழ் தொழிலாளர்கள் ஐந்து வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.
   - ❖ இம்முறையின் கீழ் இலங்கையின் காபி, தேயிலை தோட்டங்களில் இந்தியர்கள் கூலிகளாக வேலை செய்யச் சென்றனர்.

5. 1884இல் நடைபெற்ற சென்னை மகாஜன சங்கத்தின் தொடக்க விழாவில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களின் பெயர்களை எழுதுக.
   - ❖ G. சுப்ரமணியம், வீரராகவாச்சாரி ,
   - ❖ அனந்தாசார்லு, ரங்கையா,
   - ❖ பாலாஜிராவ், சேலம் ராமசாமி

6. தொடக்ககாலத்தில் இலங்கைக்குத் தொழிலாளர்களை அனுப்பி வைக்கப்பட்டது குறித்து எழுதுக.
   - ❖ 1815இல் சிலோன் ஆளுநர் சிலோன் பெருந்தோட்டங்களில் வேலை செய்யக் "கூலிகளை" அனுப்பி வைக்க மதராஸ் ஆளுநரை கேட்டுக் கொண்டார்.
   - ❖ மதராஸ் ஆளுநர் இக்கடிதத்தை மேல் நடவடிக்கைக்காகத் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைத்தார்.
   - ❖ ஊக்கத் தொகை ஏதேனும் வழங்காமல் அம்மக்களை அவர்களின் சொந்த மண்ணிலிருந்து நகரச் செய்வது சிரமமெனத் தஞ்சை மாவட்டஆட்சியர் தெரிவித்தார்.
   - ❖ ஆனால் 1833, 1843- ல் ஏற்பட்ட பஞ்சங்கள் அரசாங்கத்தின் தூண்டுதல் இல்லாமலேயே மக்களைப் புலம் பெயர்ந்து செல்லக் கட்டாயப்படுத்தின.

7. இந்திய நிர்வாகச் செலவின விவரங்களைக் கூறுக.

- கம்பெனியின் பங்குதாரர்களுக்கு லாபத்தில் வழங்கப்பட வேண்டிய பங்கு.
- இருப்புப்பாதைத் துறையில் முதலீடு செய்தவர்களுக்கு தரப்பட வேண்டிய வட்டி,.
- பணி நிறைவு பெற்றுவிட்ட அதிகாரிகளுக்கும் தளபதிகளுக்கும் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியம்.
- போர்களுக்காக இங்கிலாந்திடமிருந்து பெற்ற கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டி

## 5 - மதிப்பெண்கள்

1. இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கத்தையும் பின்னர் அது இந்தியச் சமூகத்தைச் சீர்திருத்தவும் மற்றும் மீட்டுருவாக்கம் செய்திட ஆற்றிய பங்கினை விவாதிக்கவும்

- இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கத்தால் ஒரு நவீன இந்திய கற்றறிந்தோர் பிரிவு உருவானது.
- நில பிரபுக்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், வணிக வர்த்தகர்கள் ஆகியோர் இப்புதிய பிரிவில் இடம் பெற்றனர்.
- இவர்கள் தொடக்ககாலத்தில் ஆங்கிலேய நிர்வாகத்துடன் இணக்கமான அணுகுமுறையைக் கொண்டிருந்தனர்.
- ஆனால் சுதந்திர இந்தியாவில் மட்டுமே தங்களது விருப்பங்களை நிறைவேறும் என்பதை விரைவிலேயே உணர்ந்தனர்.
- ஏனைய மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்ப்பதில் இவர்கள் சிறப்பான பங்காற்றினர்.
- ராஜாராம்மோகன் ராய், சுவாமி விவேகானந்தர், அரவிந்தகோஷ், கோகலே போன்றோர் இந்திய அரசியல், சமுதாய, மத இயக்கங்களுக்குத் தலைமையேற்றனர்.
- தேசியம், மக்களாட்சி, சோஷலிசம் போன்ற தத்துவக் கருத்துக்களைக் கற்றறிந்த இந்தியர்கள் அறிந்து கொண்டனர்.
- சுதந்திரமான பத்திரிகை உரிமை, பொதுக் கூட்டங்களில் சுதந்திரமாகப் பேசும் உரிமை போன்றவற்றை பெற பல அமைப்புகளை நிறுவினர்.

2) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூக பொருளாதாரக் காரணிகளை ஆய்க.

- இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர் சிதைத்தனர் .
- வறட்சி ,பஞ்சம் விலையில் ஏற்படும் வீழ்ச்சி போன்ற நேரங்களிலும் நிலவரியை பணமாக வசூலித்தனர்.
- நிலம் விற்பனை சரக்காக மாற்றப்பட்டதும், வேளாண்மை வணிக மயமாக்கப்பட்டதும் விவசாயிகளின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை.
- ஆங்கில அரசு தடையில்லா வாணிபக் கொள்கையை பின்பற்றியது.
- இதன் மூலம் இங்கிலாந்துப் பொருட்கள் தடையின்றி இறக்குமதி செய்யப்பட்டதால் இந்தியாவில் நெசவாளர் , தச்சர் , கொல்லர் போன்ற கைவினைஞர்கள் வேலையற்றோர் ஆயினர்.
- பருத்தி, சணல், பட்டு போன்ற கச்சாப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கென இடமாக இந்தியா மாறியது.
- இந்தியாவில் பஞ்சங்கள் ஏற்பட்ட கால கட்டங்களில் ஆங்கிலேயர் தலையிடாக் கொள்கையை பின்பற்றினர். இதனால் லட்சக்கணக்கான மக்கள் பட்டிணியால் உயிரிழந்தனர்.
- பிரிட்டிஷாரின் இத்தகைய கொள்கைகள் விவசாயிகளிடையே மனநிறைவின்மையை ஏற்படுத்தி அவர்களை பிரிட்டிஷாருக்கு எதிராக திருப்பியது.

3) இந்தியாவில் தேசிய விழிப்புணர்ச்சிக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறி கொள்கைகள் , எந்த அளவிற்கு காரணமாய் இருந்தன.

- அரசு உயர் பதவிகளில் இந்தியர்களை பணியமர்த்தாமல் திட்டமிட்டு விலக்கி வைக்கப்பட்டதை , இந்திய எதிர்ப்பு நடவடிக்கையாக மக்கள் கருதினர்.
- குடிமைப் பணிக்கான தேர்வுகள் அறிமுகமான போது வயது 21 என நிர்ணயம் செய்யப்பட்டது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

- இத்தேர்வுகளில் இந்தியர்கள் வெற்றி பெற்றதை தொடர்ந்து , இந்தியர்கள் இத்தேர்வை எழுத தடுக்கும் வகையில் வயது வரம்பு 19 ஆக குறைக்கப்பட்டது.
- அரசுக்கெதிராக வெறுப்புணர்வைத் தூண்டும் முயற்சிகளை தடுக்கும் நோக்குடன் புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.
- இந்திய தண்டனைச் சட்டம் (1870) பிரிவு 124 A பிராந்திய மொழிச்சட்டம் (1878) ஆகியன எதிர்ப்புகளை தூண்டின.
- இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தியிழைத் துணிகளின் மீதான சுங்கவரி குறைக்கப்பட்டது.
- அதே சமயம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பருத்தியிழைத் துணிகளின் மீதான உள்நாட்டுத் தீர்வை உயர்த்தப்பட்டது.
- இல்பர்ட் மசோதாவின் மூலம் இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க அதிகாரம் பெற்றனர்.
- ஆனால் ஐரோப்பியரின் எதிர்ப்பால் ஐரோப்பியரின் விருப்பங்களை நிறைவு செய்யும் திருத்தம் செய்யப்பட்டது.
- பிரிட்டிஷாரின் மேற்கண்ட நடவடிக்கைகள் உயர் வகுப்பாரிடையே வெறுப்பினை ஏற்படுத்தி அவர்களை புரட்சி செய்ய இட்டுச் சென்றது.

4) இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆரம்ப கால தேசியவாதிகள் அளித்த பங்கினையும் விளக்குக.

<u>இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்கள்:</u>

- அரசில் இந்தியப் பிரதிநிதிகள் இடம் பெற வேண்டுமென்பது காங்கிரசின் முக்கிய கோரிக்கையாகும்.
- நிலவரியை குறைத்து ஜமின்தார்களிடமிருந்து விவசாயிகளை பாதுகாக்க வேண்டும்.
- சுதேசிப் பொருட்களை பாதுகாக்க இறக்குமதிப் பொருட்கள் மீது அதிக வரிவிதிக்க வற்புறுத்தியது.
- இந்திய குடிமைப்பணித் தேர்வுகளை இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டுமென்றனர்.
- நிர்வாகத்துறையும், நீதித்துறையையும் தனித்தனியே பிரிக்க வலியுறுத்தினர் .

<u>ஆரம்ப கால தேசியவாதிகள் அளித்த பங்களிப்புகள்</u>

- தொடக்ககால மிதவாத தலைவர்கள் மனுகொடுப்பது, மன்றாடுவது, விண்ணப்பம் செய்வது போன்ற முறைகளை மேற்கொண்டனர்.
- மேற்கண்ட வழிமுறைகளுக்கு மாற்றாக பிபன் சந்திரபால், பாலகங்காதார திலகர் ,லாலா லஜபதிராய் போன்ற தலைவர்கள் தீவிரமான அணுகுமுறைகைளைப் பின்பற்றினர்.
- பெருமளவிலான மக்களை திரட்டுவது, பிரிட்டிஷ் பொருட்களை புறக்கணித்தல் முதலான பல்வேறு வழிகளில் தேசிய உணர்வை வளர்த்தனர்.

## பாடம் - 2

1. மிதவாத தேசியவாதிகளின் 'இறைஞ்சுதல் கொள்கை' என்றால் என்ன?

- கவனமான அணுகுமுறை,
- ஆங்கிலேயரிடம் மன்றாடுதல்,
- மனுச் சமர்ப்பித்தல் போன்றவை மிதவாத தேசியவாதிகளின் 'இறைஞ்சுதல் கொள்கை' ஆகும்.

2.மகாதேவ் கோவிந்த் ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார்?

- சுதேசி என்பதன் பொருள் ஒருவரது சொந்தநாடு' என்பதாகும்.
- ரானடேயின் கருத்துப்படி ஒருவரது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.
- அப்பொருட்களின் பயன்பாடு குறைவான மனநிறைவைக் கொடுத்த போதிலும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் என்றார்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



3. பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.

- பாலகங்காதர திலகர்,
- பிபின்சந்திர பால்,
- லாலாலஜபதி ராய்.

4. தீவிர தேசியவாதம் 1908க்குப் பின்னர் ஏன் குறைந்தது?

- இந்து மத நம்பிக்கைகளால் முலாம் பூசப்பட்டு வலியுறுத்திச் சொல்லப்பட்ட தேசப்பற்றை முஸ்லீம்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.
- சுதேசி இயக்கத் தலைவர்கள் சமூகத்தின் பெரும் பகுதி மக்களை ஊடுருவத் தவறினர்.
- 1907இல் ஏற்பட்ட சூரத் பிளவு தீவிர தேசியவாதத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

5 .தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனிய அரசு மேற்கொண்ட அடக்குமுறைகள் யாவை?

- பொதுக்கூட்டங்கள்சட்டம் (1907),
- வெடி மருந்துச் சட்டம் (1908),
- செய்தித்தாள்சட்டம், தூண்டுதல் குற்றச் சட்டம் (1908),
- இந்தியப் பத்திரிகைச் சட்டம் (1910)

## 3 - மதிப்பெண்கள்

1. காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடக் காரணமான சூரத் மாநாட்டின் செயல்முறைகள் குறித்து எழுதுக.

- கல்கத்தா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட நான்கு தீர்மானங்களைப் பின்பற்றுவதா? இல்லையா என்ற பிரச்சினை தீவிரமடைந்தது.
- பெரோஸ்ஷா மேத்தாவின் குழு இந்த தீர்மானங்களை நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கப்பட வேண்டுமெனக் கோரியது.
- இத்திட்டத்தை எதிர்கொள்ளத் தீவிர தேசியவாதிகள் ராஷ் பிகாரி கோஷ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுவதை எதிர்க்க முடிவு செய்தனர்.
- இக்குழப்பத்தால் சூரத் மாநாட்டில் காங்கிரஸ் மிதவாத தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகளென இரு குழுக்களாகப் பிரிந்தது.

2.சுதேசி இயக்கத்தின் போது அதிகரித்த தனி நபர் வன்முறைகளுக்கான காரணங்களை எழுதுக.

- இளைஞர்கள் அரசியலற்ற ஆக்கசார் செயல்பாடுகளை ஓரளவே ஏற்றுக் கொண்டனர்.
- இளம் வயது மக்களை ஒரு நீண்டகால வெகுஜனப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதில் தீவிர தேசியவாதிகளின் தோல்வி.
- புரட்சிகர செயல்பாடானது இந்திய வீரத்தை மீட்டெடுக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக கருதப்பட்டது.
- இதனை ஆங்கிலேயர் அடிக்கடி எதிர்ப்பதாயும் இகழ்வதாகவும் புரட்சிகர தேசியவாதிகள் நம்பினர்.

3. பெருவாரியான மக்களை ஒன்று திரட்ட சமிதிகளால் பயன்படுத்தப்பட்ட பணிகளின் சிறப்பம்சங்கள் யாவை?

- உறுப்பினர்களுக்கு உடற்பயிற்சியையும், அறநெறிகளையும் கற்றுக் கொடுத்தன.
- பஞ்சங்களின் போதும் நோய்களின் தாக்கத்தின் போதும் சேவையாற்றின.
- உள்ளூரளவில் பள்ளிகளையும் நடுவர் நீதிமன்றங்களையும் உருவாக்கின.
- அமைதிவழிப் போராட்டத்தின் மூலம் ஆங்கில அரசிற்கு ஒத்துழைப்புத் தர மறுத்தது.

4.1908இல் நடைபெற்ற கோரல் நூற்பாலை வேலை நிறுத்தம் பற்றி நீவீர் அறிவது யாது?

- கோரல்மில் தொழிலாளர்களின் படுமோசமான வேலை, வாழ்க்கைச் சூழல்கள் வ.உ.சி., சிவா ஆகியோரின் கவனத்தைக் கவர்ந்தது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

- இருவரின் உரைகளால் தூண்டப்பெற்ற தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
- வேலை நிறுத்தத்தை ஒடுக்க நினைத்த அரசு ஆலை நிர்வாகத்திற்கு ஆதரவாக இருந்தது.
- முடிவில் ஆலை முதலாளிகள் தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடிவு செய்தனர்.

5.அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

- அரவிந்தகோஷ், அவரின் சகோதரர் ஆகியோருடன் மேலும் 35 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.
- சித்தரஞ்சன்தாஸ் இவ்வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளுக்காக வாதாடினார்.
- சதியில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் இல்லாததால் அரவிந்தகோஷ் விடுவிக்கப்பட்டார், சிலர் நாடு கடத்தப்பட்டனர்.
- ஒரு வருடகாலம் நடைபெற்ற இவ்வழக்கு புரட்சிகர தேசியவாதிகளை கதாநாயகர்களாகச் சித்தரித்தது.

6. பிபின் சந்திரபாலின் விடுதலை தினத்தை திருநெல்வேலியில் சுயராஜ்ய தினமாக சுதேசி இயக்கத் தலைவர்கள் கொண்டாட திட்டமிட்டதின் விளைவு யாது?

- வ.உ.சி., சுப்ரமணிய சிவா, பத்மநாபர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.
- இதற்கு எதிர்ப்பைத்தெரிவிக்கும் வகையில் கடையடைப்பு நடத்தப்பட்டது.
- திருநெல்வேலியில் நகரசபைக் கட்டடமும் காவல் நிலையமும் தீ வைக்கப்பட்டன.
- காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் நால்வர் கொல்லப்பட்டனர்.

7. வ.உ. சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.

- ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராகச் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்தும் கருத்தை வெளியிட்டார்.
- சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி எனும் கூட்டு ப்பங் கு நிறுவனத்தைப் பதிவு செய்தார்.
- S.S.கலியா, S.S.லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.
- சுதேச இயக்கத்திற்கு ஆதரவாக இந்தியாவின் பண்டையகால கடற்பயணப் பெருமைகளை துணையாகக் கொண்டார்.

8. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?

- ஆங்கிலேயரின்அடக்குமுறை.
- தூத்துக்குடியில் சுதேசி முயற்சிகள் அ டக்கப்பட்டது .
- சுதேசி இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு அவமானப் படுத்தப்பட்டது.
- திருநெல்வேலி நிகழ்வுக்குப் பழி வாங்குதல்.

## 5 - மதிப்பெண்கள்

1. இந்திய தேசிய இயக்கத்தில் லால்-பால்-பால் ஆகிய மூவரின் பங்களிப்பினை மதிப்பிடுக.

<u>லாலா லஜபதிராய்:</u>

- திலகருடன் இணைந்து சமய அடையாளங்கள் திருவிழாக்கள் ஆகிய தளங்களை பயன்படுத்தி பிரிட்டிஷ் எதிர்ப்புணர்வை மக்களிடம் வளர்த்தார்.
- வகுப்புவாதம் அதிகரித்தபோது பஞ்சாப் மாகாணத்தை இரண்டாக பிரிக்க வேண்டுமென்றார்.
- சைமன் குழு எதிர்ப்பு போராட்டத்தில் தீவிரமாக பங்கெடுத்தபோது நடத்தப்பட்ட தடியடியில் காயம்பட்டு இறந்தார்.

<u>பாலகங்காதர திலகர்:</u>

- "சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்" என்று முழங்கினார்.
- கேசரி, மராட்டா ஆகியப் பத்திரிகைகளின் வாயிலாக தேசியத்தை வளர்த்தார்.
- தன்னாட்சி குறித்த கோரிக்கைகளை தனது உரைகள் மூலம் பரப்பினார் .

M. VENKATESAN M.A.,M.PHIL.,B.ED., PG ASST 9 HISTORY ) GHSS AYAPPAKKAM

பிபின்சந்திரபால் :

- சுயராஜ்ஜியம் என்பது அந்நியர் ஆட்சியிலிருந்து முற்றிலுமாக விடுதலையடைதல் என்றார்.
- வங்காளத்தில் சுதேசி இயக்கத்தில் தீவிரமாக பங்கெடுத்தார்.
- சென்னை கடற்கரையில் இவர் ஆற்றிய உரைகள் மக்களிடையே உத்வேகத்தை ஏற்படுத்தியது

2. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.

- தமிழ்நாட்டில் நடைபெற்ற சுதேசி இயக்கம் அனைத்திந்திய பண்புகளைப் பெற்றிருந்தது.
- தொடக்கத்தில் இவ்வியக்கம் பெருமளவில் வங்கப் பிரிவினைக்கு எதிரான எதிர்வினையாகவே இருந்தது.
- வட்டார மொழியில் சொற்பொழிவாற்றியது தமிழ்நாட்டின் வெகுஜன அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- பொது இடங்களில் ஐரோப்பியர்கள் மாணவர்களால் "வந்தேமாதரம்" எனும் முழக்கத்துடன் வாழ்த்தப்பட்டனர்.
- வ.உ.சி. S.S.கலியா, S.S.லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கியபோது தமிழ்நாட்டின் சுதேசி இயக்கம் தேசத்தின் கவனத்தைப் பெற்றது.
- பிபின் சந்திரபாலின் விடுதலையை சுதேசி தினமாக திருநெல்வேலியில் தடையை மீறி கொண்டாடினர்.
- தமிழ் மற்றும் ஆங்கில ப த்தி ரி க்கைகள் தமிழகத்தில் சுதேசி இயக்கத்திற்குத் துணை நின்றன.
- சுதேசி இயக்க தலைவர்கள் கைது செய்யப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதால் திருநெல்வேலி ஆட்சியர் ஆஷ் வாஞ்சிநாதனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

Padasalai

பாடம் - 3

2 - மதிப்பெண்கள்

1. 1903 - 1914 ஆகிய கால கட்டங்களில் தேசிய இயக்கம் வளர்ந்து வருவதைக் கட்டுப்படுத்த ஆங்கில அரசு மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் என்ன?

- குற்றஉளவுத்துறை CID) உருவாக்கம் - 1903.
- பத்திரிக்கைகள் (குற்றங்களுக்குத்தூண்டும்) சட்டம் (1908).
- வெடிபொருட்கள் சட்டம் (1908), இந்திய பத்திரிகைகள் சட்டம் (1910),
- தேசத்துரோக கூட்டங்கள் தடுப்புச்சட்டம் (1911)
- வெளிநாட்டினர் அவசரச்சட்டம் - 1914

2. கிலாஃபத் இயக்கம் து வங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?

- முதல் உலகப்போரின் முடிவில் கலீபாவின் ஆளுமையை முடிவுக்குக் கொண்டு வர கூட்டணிப் படைகள் முடிவு செய்தன.
- கலீபாவின் அதிகாரத்தைத் துண்டாடுவது இசுலாம் மீதான பெரும் தாக்குதலாகக் கருதப்பட்டது.
- ஆட்டோமன் அரசை ஆதரிப்பதையும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்ப்பதும் நோக்கங்களாக இருந்தது.

3.அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.

- புத்தகம் - *"How India Wrought for Freedom"*
- வாரந்திரி - தி காமன்வீல்
- தினசரி - நியு இந்தியா

4.1915ஆம் ஆண்டு இந்தியப் பாதுகாப்புக்கான சட்டம் பற்றி விவரிக்கவும்.

- முதல் உலகப்போரின் போது அவசர கிரிமினல் சட்டமாக இயற்றப்பட்டது.
- இச்சட்டம், இந்தியப் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் சட்டம் என்று குறிப்பிடப்பட்டது.
- மூன்று ஆணையர்கள் அடங்கிய சிறப்புத் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டது.
- சந்தேகத்துக்கு இடமானவர்கள் மீது வழக்குத் தொடர இச்சட்டம் அனுமதித்தது.

5. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.

- 1. பிரிட்டிஷ்ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது .
- 2. தாய்நாடு பற்றிய பெருமையுணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவது .
- திலகர் தலைமையிலும், பெசண்ட் அம்மையார் தலைமையிலும் என இரண்டு தன்னாட்சி இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- இரு இயக்கங்களின் வரையறைகளும் தெளிவாக வகுக்கப்பட்டிருந்தன.

6. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அத்தியாயமாக கதார் இயக்கம் கருதப்படுவது ஏன்?

- கோமகடமரு என்ற கப்பல் இந்திய வம்சாவளியினருடன் கனடாவில் இருந்து இந்தியா திரும்பியது.
- இந்தியா திரும்பியவுடன் பிரிட்டிஷ் போலிசாருடன் மோதல் ஏற்பட்டது.
- இம்மோதலில் அந்தக் கப்பலில் இருந்த பல பயணிகள் கொல்லப்பட்டனர்.
- இந்நிகழ்வு இந்திய தேசிய இயக்கத்திற்கு ஆழமான வடுவை ஏற்படுத்தியது.

7. 1920 மார்ச்சில் நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டில் கிலா஁பத் இயக்கத்தின் சார்பாக முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்ன?

- துருக்கியின் சுல்தான் கலீபாவாக இடையூறின்றித் தொடரவேண்டும்.
- இசுலாமியப் புனிதத்தலங்கள் சுல்தானிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
- சுல்தானிடம் போதுமானப் பகுதிகள் தரப்பட வேண்டும்.
- அராபியா, சிரியா, ஈராக், பாலஸ்தீனம் ஆகியன இவரின் இறையாண்மையின் கீழிருக்க வேண்டும்

Padasalai

8. சென்னை தொழிற்சங்கத்தின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம் என்ன?

- தொழிலாளர்கள் மோசமாக நடத்தப்பட்டது, போதுமான ஊதியம் வழங்காதது ஆகியன இத்தொழிற்சங்கம் அமையக் காரணமாக அமைந்தன.
- இச்சங்கம் ஒட்டு மொத்தமாக பேரம் பேசுவதைப் பின்பற்றியது.
- வகுப்புப் போராட்டத்துக்குத் தொழிற்சங்கம் சார்ந்த கொள்கைகளை ஒரு ஆயுதமாக பயன்படுத்த முனைந்தது.
- இந்த அலை இந்தியாவின் இதரப்பகுதிகளுக்கும் பரவி பல தொழிற்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

## 5 - மதிப்பெண்கள்

1. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

- நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மத்திய கட்டுப்பாட்டில் இருந்து மாகாணங்கள் சுதந்திரமாகச் செயல்படவேண்டும்.
- மத்திய மற்றும் மாகாண சட்டமேலவைகளின் உறுப்பினர்களில் 4/5 பங்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், 1/5 பங்கு நபர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.
- மாகாண மற்றும் மத்திய சட்டப் பேரவைகளின் 4/5 உறுப்பினர்கள் வாக்குப்பதிவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- மத்திய நிர்வாக சபை உறுப்பினர்களில் 1/2 பங்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்களாக இருக்க வேண்டும்.
- மாகாணசபைத் தேர்தல்களில் முஸ்லிம்களுக்கு தனித்தொகுதிகள் வழங்க காங்கிரசும் ஒப்புக்கொண்டது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- தங்களது சபைகள் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு ஏற்ப மாகாண மற்றும் மத்திய அரசுகள் நடக்க கடமைப்பட்டுள்ளன.
- கவர்னர் ஜெனரல் அல்லது ஆளுநர் சபைகளின் தடுப்பாணை அதிகாரம் பெறும் பட்சத்தில் அத்தீர்மானம் ஓராண்டுக்கும் குறைவான இடைவெளியில் மீண்டும் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அது செயல்பாட்டுக்கு வரும்.
- ஏகாதிபத்திய அரசு அலுவல்களுடன் தொடர்புடைய எவரும் சமநிலை பெற்றிருக்க வேண்டும்

2. திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

திலகர் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கம்:

- ஏப்ரல் 1916இல் பெல்காமில் நடந்த பம்பாய் மாகாண மாநாட்டில் இது நிறுவப்பட்டது.
- திலகரின் இயக்கத்துக்கு ஆறு கிளைகள் ஒதுக்கப்பட்டன.
- தன்னாட்சி குறித்த கோரிக்கைகளை தமது உரைகள் மூலம் திலகர் பிரபலப்படுத்தினார்.
- தன்னாட்சி பற்றிய கொள்கைகளை பரப்பியதற்காக திலகர் கைது செய்யப்பட்டார்.

அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கம்:

- இந்தியா முழுவதும் தீவிரப்பயணம் மேற்கொண்டு தன்னாட்சி கருத்துக்களை பரப்பினார். இந்தியாவின் விசுவாசத்தின் விலை இந்தியாவின் விடுதலை என்று அவர் அறிவித்தார்.
- மதராஸில் அன்னிபெசண்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம் மிகவும் பிரபலம் அடைந்ததால் மதராஸ் அரசு அதனை அடக்க நினைத்தது.
- தன்னாட்சி கூட்டங்களில் கலந்து கொள்ள மாணவர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டதுடன் அன்னிபெசண்ட்டும் கைது செய்யப்பட்டார்.

3. மலபார் மாப்பிள்ளை கிளர்ச்சியின் காரணங்கள் மற்றும் துயர விளைவுகளைப் பற்றி விவாதிக்கவும்.

காரணங்கள்:

- கிலாபத் மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தின் எழுச்சியால் இக்கிளர்ச்சி ஏற்பட்டது
- பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மற்றும் இந்து நிலப்பிரபுக்களுக்கு எதிராக இக்கிளர்ச்சி நடைப்பெற்றது.
- மலபார் முஸ்லீம் குடியானவர்கள் நிலவுரிமை கோரியது இக்கிளர்ச்சியின் அடிப்படை காரணமாகும்.
- அடிப்படையில் இது விவசாய கிளர்ச்சியாக இருந்தாலும் மத உணர்வுகள் கோலோச்சின.

விளைவுகள்:

- காவல்நிலையம், அரசு அலுவலகங்கள், இந்துக்களின் வீடுகள், அரசுக் கருவூலங்கள் ஆகியன தாக்கப்பட்டன.
- இந்து முஸ்லீம் ஒற்றுமை சீர்குலைந்தது.
- மலபார் சிறப்புக் காவல்படை உருவாக்கப்பட்டு கிளர்ச்சி கடுமையாக ஒடுக்கப்பட்டது.
- கைது செய்யப்பட்ட மாப்ளாக்கள் சரக்குப் பெட்டிக்குள் அடைக்கப்பட்டு கோயம்புத்தூரிலுள்ள போத்தனூருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
- அதில் பலர் மூச்சுத்திணறி பரிதாபமாக இறந்தனர்

## பாடம் - 4

## 2 - மதிப்பெண்கள்

1. இந்தியா வந்த வேல்ஸ் இளவரசர் எவ்வாறு வரவேற்கப்பட்டார்?

- இந்தியாவின் பல நகரங்களுக்கு வேல்ஸ் இளவரசர் மேற்கொண்ட பயணம் புறக்கணிக்கப்பட்டது.
- இந்திய மக்களின் விசுவாச உணர்வை வேல்ஸ் இளவரசரின் பயணம் தூண்டும் என்று பிரிட்டிஷ் அரசின் கணக்கு தவறாகப் போனது.
- நாடு முழுவதும் தொழிலாளர்களும் விவசாயிகளும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



2. காந்தியடிகளின் சம்பரான் சத்தியாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யாவர்?
- ராஜேந்திர பிரசாத், மஜாருல் ஹக்,
- ஆச்சார்யகிருபாளினி, மஹாதேவ தேசாய்

3. இந்தியப் பணியாளர் சங்கம்ஏன் தோற்றுவிக்கப்பட்டது?
- இந்தியர்களுக்கு நலப்பணிகளில் பயிற்சி அளிக்க இச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- பின்தங்கிய, ஊரக மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்காக இது பாடுபட்டது.
- நிவாரணப்பணி, கல்வியறிவூட்டல் மற்றும் இதர சமூக கடமைகளில் இதன் உறுப்பினர்கள் ஈடுபட்டனர்.

4. பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா குறித்து எழுதுக.
- தீண்டாமை கொடுமைக்கு எதிராக Dr. அம்பேத்கர் இச்சபையை நிறுவினார்.
- இதன் பொருள் தனித்து விடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு ஆகும்.
- இச்சபையின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் திறன் குறைபாடுகளை களைய முயன்றார்.

5. தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது?
- மத்திய சட்டப் பேரவையின் ஒவ்வொரு உறுப்பினரும் இம்மசோதாவை எதிர்த்த நிலையில் இச்சட்டத்தை அரசு நிறைவேற்றியது.
- விசாரணையின்றி எவரையும் சிறையில் அடைக்க அரசுக்கு இச்சட்டம் அதிகாரமளித்தது.
- எனவே காந்தியடிகள் நிறுவிய சத்தியாகிரக சபை, இந்தச்சட்டத்தை மீறுவது என்று முதன்முதலாக உறுதி ஏற்றது.

6. பி.ஆர். அம்பேத்கரால் வழி நடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் பற்றி அறிவது என்ன?
- ஊருணிகள் மற்றும் கிணறுகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர இதனை தொடங்கினார்.
- அம்பேத்கரின் அறிவாற்றல் மற்றும் பொது நடவடிக்கைகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன.
- இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் பிரிட்டிஷ் அதிகாரிகளை அவர் சாடினார்.

7. காந்தி-இர்வின் ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது எது?
- உப்பைச் சுய பயன்பாட்டுக்குப் பயன்படுத்த மக்களை அனுமதிப்பது.
- வன்முறையில் ஈடுபடாத அரசியல் கைதிகளை விடுதலை செய்வது.
- சாராயம் மற்றும் அந்நியத் துணிகளை விற்கும் கடைகளின் முன் ஆர்ப்பாட்டங்களை நடத்த அனுமதிப்பது.

## 3 - மதிப்பெண்கள்

1. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.
- சத்தியபால், சாய்புதீன்கிச்லு ஆகியோரைக் கைது செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாலியன் வாலாபாக் மைதானத்தில் மக்கள் கூடியிருந்தனர்.
- இம்மைதானத்தில் ஒரே ஒரு குறுகிய வாயில் மட்டுமே இருந்தது.
- அங்கு சிக்கிக் கொண்ட மக்களைக் குறி வைத்து எந்திரத் துப்பாக்கிகளில் குண்டுகள் தீரும் வரை சுடுமாறு ஜெனரல் டையர் உத்தரவிட்டார்.
- அரசு தகவல்களின்படி உயிரிழப்புகள் 379 என்ற எண்ணிக்கையில் இருந்தது.

2. மாகாணங்களில் இரட்டையாட்சி முறை பற்றி எழுதுக.
- இரட்டை ஆட்சியின் கீழ் மாகாணங்களுக்கு நிர்வாகத்தில் அதிக பங்கு வழங்கப்பட்டது.
- இச்சட்டத்தின்படி சட்டம் ஒழுங்கு, நிதி போன்ற துறைகள் ஆங்கிலேயருக்கு ஒதுக்கப்பட்டன.
- சுகாதாரம், கல்வி, உள்ளாட்சி போன்ற துறைகள் இந்திய பிரதிநிதிகளுக்கு மாற்றப்பட்டன.
- மாற்றப்பட்ட துறைகளுக்கு பொறுப்பேற்ற அமைச்சர்கள் சட்டப்பேரவைக்கு கடமைப்பட்டவர்கள் ஆவர்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

3. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?

- வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீடு திருத்தப்பட்டது.
- தனித் தொகுதிகளைப் பறித்துக் கொண்டது.
- இடங்களின் ஒதுக்கீடு குறித்து உத்தரவாதமளிக்கப்பட்டது.
- இடஒதுக்கீடு பெற்ற தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டன

4. பிராமணரல்லாதார் இயக்க தலைவர்கள் காலனி அரசாங்கத்தைக் கையாள்வதில் தொடக்ககால தேசியவாதிகள் கடைப்பிடித்த அதே யுக்தியினை கையாண்டனர். விவரி.

- பிராமணர் அல்லாத தலைவர்களால் நடத்தப்பட்ட இயக்கங்கள் பிராமணர்கள் மற்றும் இதர உயர் வகுப்பினரின் மேன்மைகள் குறித்து கேள்வி எழுப்பின.
- எனவே இவை தங்கள் அமைப்புகள் மூலம் நீதி வேண்டி அரசிடம் கோரிக்கை வைத்தன.
- இந்தியாவைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் பிராமணரல்லாதோரின் உண்மையான குறைகளை காலனி அரசு பயன்படுத்திக் கொண்டது.
- எனவேதான் பிரிட்டிஷார், தேசவிரோத சக்திகள் போன்றவற்றுக்குக் கைத்தடிகள் என்று இந்த இயக்கங்களைச் சிலர் குறிப்பிட்டனர்.

5. மாற்றத்தைவிரும்புவர்கள் – மாற்றத்தை விரும்பாதவர்கள் - வேறுபடுத்துக.

| மாற்றத்தைவிரும்புவர்கள் | மாற்றத்தை விரும்பாதவர்கள் |
|---|---|
| புதிய வழியில் செயல்பாட்டை அறிவித்தனர். | காந்திய வழியைப் பின்பற்றி மக்களை ஒன்று திரட்டினர். |
| தீவிர அரசியலுக்குத் திரும்பி தேர்தல் அரசியலில் ஈடுபட விரும்பினார்கள். | தேர்தல் அரசியல் மக்களை ஒன்று திரட்டும் பணிகளில் இருந்து தங்களை விலகிச் செல்லவைத்து விடும் என்றனர். |
| சட்டப்பேர வை நுழைவை ஆதரித்தனர். | சட்டப்பேரவை நுழைவை எதிர்த்தனர். |
| சித்தரஞ்சன்தாஸ், மோதிலால் நேரு, சத்தியமூர்த்தி, ஆகியோர் தலைமை ஏற்றனர். | இராஜாஜி, வல்லபாய்பட்டேல், இராஜேந்திர பிரசாத் ஆகியோர் தலைமை ஏற்றனர். |

6. பிரதம அமைச்சர் ராம்சே மக்டோனால்டின் வகுப்புவாத அறிக்கையைப் பற்றி எழுதுக.

- காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் இடையே தனித்தொகுதிகள் பற்றி நடந்த பேச்சுகள் தோல்வி அடைந்தன.
- வட்டமேசை மாநாட்டின் போதும் இதே கருத்துக் குறித்து விவாதம் நடந்தது. ஆனால் முடிவு எட்டப்படாமல் இருந்தது.
- எனவே 1932இல் வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீடுகள் குறித்து பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.
- இடஒதுக்கீட்டுடன் கூடிய தனித்தொகுதிகள் பற்றிய அம்பேத்கரின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டன.

7. மூன்று வட்டமேசை மாநாடுகளின் முடிவின் தோல்விக்குப் பிறகு ஏன் காங்கிரஸ் தடை செய்யப்பட்டது?

- சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் கையில் எடுப்பது என்று காங்கிரஸ் தீர்மானித்தது.
- நாடு முழுவதும் விவசாயிகள், தொழிலாளர்கள் போராட்டங்கள் நடைபெற்றன.
- போராட்டங்களுக்கு தலைமை தாங்கிய நேரு, கான் அப்துல் கபார்கான், காந்தியடிகள் என அனைத்து முக்கியத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.
- மேலும் தேசியவாதம் தொடர்பான பிரசுரங்கள் அனைத்தும் சட்டத்துக்குப் புறம்பானவை என அறிவிக்கப்பட்டு காங்கிரசும் தடை செய்யப்பட்டது.

M. VENKATESAN M.A.,M.PHIL.,B.ED., PG ASST 9 HISTORY ) GHSS AYAPPAKKAM

5 - மதிப்பெண்கள்

1. ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி.

நடைமுறைப் படுத்திய சூழல்:

- கிலாபத் மாநாட்டில், காந்தியடிகளின் வற்புறுத்தலின் பேரில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது.
- கிலாபத் மற்றும் பஞ்சாப் குறைகள் சரி செய்யப்பட்டு தன்னாட்சி அரசு நிறுவப்படும் வரை இந்த ஒத்துழையாமையைக் கடைபிடிக்க உறுதி ஏற்கப்பட்டது.
- அரசு வழங்கிய பட்டங்களையும் விருதுகளையும் திரும்ப ஒப்படைப்பது ஆகியன ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்க்கப்பட்டன.
- வரிகொடா இயக்கம், சட்டமறுப்பு இயக்கம் போன்றவற்றை பின்னர் இப்போராட்டத்தில் இணைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

விளைவுகள்:

- உள்ளூர் மக்களால் ஆயிரக்கணக்கான பள்ளிகள், நூற்றுக்கணக்கான கல்லூரிகள் மற்றும் வித்யாபீடங்கள் நிறுவப்பட்டன.
- பலமுன்னணி வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலைக் கைவிட்டனர்.
- 1921இல் வேல்ஸ் இளவரசர் மேற்கொண்ட இந்தியப் பயணம் புறக்கணிக்கப்பட்டது.
- நாடு முழுவதும் தொழிலாளர்களும் விவசாயிகளும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
- அரசு வழக்கம் போல் அடக்குமுறையைக் கையாண்டது

2. ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து சட்டமறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டிருந்தது?

| ஒத்துழையாமை இயக்கம் | சட்டமறுப்பு இயக்கம் |
|---|---|
| தன்னாட்சி அரசு நிறுவப்படுவதை குறிக்கோளாக கொண்டு தொடங்கப்பட்டது. | முழுமையான சுதந்திரம் அடைவதை குறிக்கோளாக கொண்டு தொடங்கப்பட்டது. |
| ஒத்துழையாமை இயக்கம் நேர்மறை மற்றும் எதிர்மறை திட்டம் என இரண்டையும் கொண்டது | உப்பு மீதான வரியை அறவழியில் எதிர்க்கும் திட்டமிட்ட போராட்டமாக இருந்தது. |
| நேர்மறைத்திட்டத்தில் சுதேசி, கதர் நூற்றல், தீண்டாமை நீக்கம், இந்து முஸ்லீம் ஒற்றுமை ஆகியன அடங்கியிருந்தது. | உப்பை உற்பத்தி செய்வதற்கு விதித்த தடையை மீறி தண்டி யாத்திரைக்கு காந்தியுடன் இந்தியர்கள் பெருமளவில் இணைந்தனர். |
| எதிர்மறைத் திட்டத்தில் சட்டமன்ற, நீதிமன்ற, அந்நிய பொருள் புறக்கணிப்பு, வரிகொடாமை ஆகியன அடங்கும். | அரசின் அநியாய சட்டங்களுக்கு எதிராக இந்தியர்கள் ஒன்று திரண்டு அவற்றை ஏற்க மறுப்பதன் அடையாளமாக இந்நிகழ்வு அமைந்தது. |
| கலவரங்கள் மற்றும் மோசமான வன்முறைகள் நிகழ்ந்தன. | வன்முறையற்ற அறப்போர் என்ற போராட்டமாக திகழ்ந்தது. |
| சௌரி சௌரா சம்பவத்தின் விளைவாக இப்போராட்டம் நிறுத்தப்பட்டது. | அரசின் அடக்குமுறைகளால் இப்போராட்டம் முடிவுக்கு வந்தது. |

3. இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

- சம்பரான் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இந்திய மக்களை ஒன்றிணைக்கும் முதல் முயற்சியை மேற்கொண்டார்.
- ரௌலட் சட்டத்துக்கு எதிராக வேலை நிறுத்தத்தை கடைபிடிக்குமாறு அழைப்பு விடுத்தார்.
- இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஒன்றிணைந்த கிலாபத் இயக்கத்தை இத்துடன் இணைத்தார்.
- கிலாபத் மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்க வலியுறுத்தினார்.
- வன்முறையற்ற வகையில் ஒத்துழையாமை இயக்கத்தை பின்பற்றினால் ஓராண்டுக்குள் சுயராஜ்யத்தை பெற்று தருவேன் என்றார்.

- சட்ட மறுப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக தண்டி யாத்திரையை மேற்கொண்டார்.
- பிரிட்டிஷார் அளித்த வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்துக் காந்தியடிகள் சாகும்வரை உண்ணாவிரதம், மேற்கொண்டார்.
- பின்னர், காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் இடையே பூனாஒப்பந்தம் கையெழுத்தானது.
- இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் தனிநபர் சாத்தியகிரகத்தை தொடங்கினார்.
- கிரிப்ஸ் தூதுக்குழுவின் அறிக்கையை ஏற்க மறுத்து வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தொடங்கினார்.

4. டாக்டர். அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.

- ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பற்றி அம்பேத்கர் எப்போதும் அக்கறை கொண்டிருந்தார்.
- ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கல்வி மிக முக்கியமான வழி என்று நம்பினார்.
- சாதி பாலின பாகுபாடின்றி வெகுஜனங்களின் கல்விக்காகப் போராடினார்.
- "கற்பி, ஒன்றுசேர், புரட்சி செய்" என்பது அம்பேத்கரின் புகழ் பெற்ற வாசகமாக இருந்தது.
- சமூகத்தில் நீதி சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவற்றை நிலைநாட்ட கல்வியை பயன்படுத்த விரும்பினார்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் முன்னேறிய கல்வியினால் தாழ்த்தப்பட்டவர்கள் அதிகம் பயனடைவர் என்றார்.
- தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு கல்வி நிலையங்களில் சில இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றார்.
- தாழ்த்தப்பட்டோரின் நலனுக்காக பகிஷ்கிரித் ஹிடகாரினி சபா என்ற அமைப்பையும் தனது கருத்துக்களை பரப்ப மூக்நாயக் என்ற பத்திரிக்கையையும் தொடங்கினார்.

பாடம் - 5

2 - மதிப்பெண்கள்

1. இந்தியாவில் கம்யூனிஸ்ட்கட்சியை உருவாக்க கிரேட் பிரிட்டனால் அனுப்பப்பட்ட மூன்று ஆங்கில கம்யூனிசவாதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

- பிலிப்ஸ்ப்ராட்,
- பான் ப்ராட்லி,
- லெஸ்டர் ஹட்சின்சன்

2. மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞரை அடையாளப்படுத்துக

- கே.எஃப். நாரிமன்,
- எம்.சி. சக்லா

3. புகழ்பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E. ஹோம்ஸ் பற்றி நீவிர் அறிவது யாது?

- கான்பூர் சதிவழக்கினை விசாரித்த. நீதிபதி ஆவார்.
- இவர் கோரக்பூர் அமர்வு நீதிபதியாகப் பணியாற்றிய போது சௌரிசௌரா வழக்கினை விசாரித்தார்.
- இவ்வழக்கில்172 விவசாயிகளுக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

4. இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது?

- சாண்டர்ஸ் கொலை வழக்கில ராஜகுரு, சுகதேவ், ஜதீந்திரநாத் தாஸ், பகத்சிங் ஆகியோர் கைது செய்யப்பட்டனர் .
- இவ்வழக்கு இரண்டாவது லாகூர் சதி வழக்கு என்று அறியப்படுகிறது.
- இவ்வழக்கில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

5. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா அழைக்கப்பட காரணம் என்ன?

- இந்தியாவின் முதல் வெற்றிகரமான தொழிலதிபர் என்பதால், இவர் அவ்வாறு அழைக்கப்படுகிறார்.
- 1868இல் நிறுவப்பட்ட அவருடைய வர்த்தக நிறுவனம் டாடா குழுமம் என்றானது.
- பம்பாயில் உருவாக்கிய தனது நிறுவனம் ஒன்றிற்கு "சுதேசி" எனப் பெயரிட்டார்.

## 3 - மதிப்பெண்கள்

1. சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?

- சிட்டகாங்கைக் கைப்பற்றுவதற்காக மறைந்திருந்து தாக்கும் கொரில்லா பாணி தாக்குதலை நடத்த அவர்கள் திட்டமிட்டனர்.
- மாகாணத்தின் பிற பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தும் முகமாக அனைத்துத் தகவல்தொடர்பு வலைப்பின்னல்களையும் துண்டித்தனர்.
- 1930 ஏப்ரல் 18 அன்று இரவில் சிட்டகாங் படைத்தளம் தகர்க்கப்பட்டது.
- காலனிய நிர்வாகத்திற்கு நேரடியாகச் சவால் விடுக்கும் நோக்குடன் அது நடந்தேறியது.

2. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.

- பீகாரிலுள்ள சாகி நகரில் டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் அமைக்கப்பட்டது.
- சுதேசி இயக்கத்தின் ஒரு நிகழ்வாகஇ நிறுவனம் அமைக்கப்பட்டது.
- இதன் உற்பத்தி 1912-13இல் 31,000 டன்னாக இருந்தது
- 1917-18இல் இது 1,81,000 டன்னாக அதிகரித்து.

3. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.

- திரு. வி. கல்யாணசுந்தரத்துடன் இணைந்து தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை தோற்றுவித்தார்.
- 1923ஆம் ஆண்டு முதன்முறையாக நாட்டில் மே தினத்தைக் கொண்டாடினார்.
- 1925இல் கம்யூனிஸ்ட் குழுக்களின் மாநாட்டில் கலந்து கொண்டார்.
- 1928ஆம் ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்ததில் இவர் முக்கியப் பங்கு வகித்தார் .

## 5 - மதிப்பெண்கள்

1. பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது?

- பகத்சிங் தனது இளமைக் காலம் முதலாகவே, நவ்ஜவான் பாரத் சபா, ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் ஆகிய அமைப்புகளில் தன்னை இணைத்துக் கொண்டார்.
- ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷனின் தலைவர்களில் ஒருவராக பகத்சிங் விளங்கினார்.
- தொழிற்தகராறுகள் மசோதாவை அறிமுகப்படுத்திய நாளன்று மத்திய சட்டமன்றத்தின் மீது பகத்சிங்க்கும் அவரது நண்பர்களும் குண்டு வீசினர்.
- பின்னர் இரண்டாவது லாகூர் சதி வழக்கு எனப்பட்ட சாண்டர்ஸ் கொலை வழக்கில் பகத்சிங் தனது நண்பர்களுடன் கைது செய்யப்பட்டார்.
- "முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் நாட்கள் எண்ணப்பட்டு வருகின்றன என்றார்.
- புரட்சி என்பது மனித குலத்தின் பிரிக்கமுடியாத உரிமை என்றார்.
- சுதந்திரம் என்பது அனைவரின் அழியாத பிறப்புரிமை என்றார்.
- லாகூர் சிறைச்சாலையில் 1931 மார்ச் 23 அன்று பகத்சிங், தூக்கிலிடப்பட்டார்.
- தனது இறுதிமூச்சு அடங்கும் வரை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் 'புரட்சி ஓங்குக' என்று முழங்கினார்.

2. 1919-1939ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.

- போர்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உலக சராசரியை விட இந்தியத் தொழில்களின் வளர்ச்சி சிறப்பாக இருந்தது.
- 1923-24இல் ஒரு சிறிய தடுமாற்றத்திற்குப் பிறகு, நெசவுத் தொழில் சிறப்பாக செயல்படத் தொடங்கியது.
- தறிகள் மற்றும் சுழல் அச்சுக்கள் எண்ணிக்கையில் கணிசமாய் உயர்ந்தன.
- இந்தியாவால் வெளியில் இருந்து நுகர்வு செய்யப்பட்ட பருத்திப் பொருட்கள் 44 சதவிகிதத்திலிருந்து, 20.5 சதவிகிதமாகக் குறைந்தது.
- சர்க்கரை உற்பத்தியும் சிமெண்ட் உற்பத்தியும் இக்காலக்கட்டத்தில் வளர்ச்சி பெற்றன.
- கப்பல் தொழிலில் சிந்தியா நீராவிக் கப்பல் கம்பெனி ஏனையவற்றிற்கு முன்னோடியாக விளங்கியது .
- 1939இல், அவர்கள் பிரிட்டிஷாரின் பம்பாய் நீராவிக் கப்பல் நிறுவனத்தையும் வாங்கினர்.
- இயந்திர உற்பத்தி, விமானப் போக்குவரத்து, ரயில்பெட்டி, ரயில் எஞ்சின் உற்பத்தி ஆகியன மேற்கொள்ளப்பட்டன.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் மதுக்கரை என்ற இடத்தில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

3. பொருளாதாரப் பெரும் மந்தம் ஏற்பட்டபோது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் லட்சியங்கள் வெளிப்படுத்துவதில் இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாட்டின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்க.

- உலக அளவிலான பொருளாதார பெருமந்த நிலையால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்ட்டனர்.
- எனவே காங்கிரஸ் தனது சட்டமறுப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக குத்தகை செலுத்தா மற்றும் வரிசெலுத்தாப் போராட்டத்தைக் கடைபிடித்தது.
- பெருமந்த அழுத்தத்தினால் ஏற்பட்ட சமூக-பொருளாதாரத் தேவைகள் கராச்சியின் காங்கிரஸ் அமர்வில் தீவிரமாய் பேசப்பட்டது.
- விவசாயிகள் கிசான் சபா எனப்படும் விவசாயிகள் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டு போராடினர்.
- தொழிலாளர்கள் தங்களை தொழிற்சங்கங்களில் இணைத்துக் கொண்டு போராடினர்
- இச்சூழ்நிலையில் நேருவின் தலைமையின் கீழ் வந்த காங்கிரஸ் சமூக மற்றும் பொருளாதார நீதி அடிப்படையில் ஒரு சமத்துவ சமூகத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தது.
- 1931இல் நடந்த கராச்சி அமர்வு சர்தார் வல்லபாய் படேல் தலைமையில் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- மேலும் இம்மாநாடு சுதந்திர இந்தியாவின் பொருளாதார கொள்கை பற்றிய ஒரு பார்வையை வழங்கியது.
- பின்னர் இதுவே சுதந்திர இந்தியாவிற்கான இந்திய தேசிய காங்கிரசின் கொள்கை அறிவிப்பு விளக்கமானது.

பாடம் - 6

2 - மதிப்பெண்கள்

1. கௌராக் ஷினி சபைபற்றி குறிப்பு வரைக?

- கௌராக் ஷினி சபைகள் என்றால் பசு பாதுகாப்பு சங்கங்கள் என்று பொருள் ஆகும்.
- 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வட இந்தியாவின் பல பகுதிகளில் இவை தோன்றின.
- இந்து வகுப்புவாதம் வளர்வதற்கு இச்சபைகள் ஊக்கமளித்தன.

2. இந்து-முஸ்லிம்களிடையே பிரிவினை ஏற்படக் காரணமான ஆரிய சமாஜத்தின் இரண்டு இயக்கங்கள் யாவை?.

- சுத்தி,
- சங்கதன்

3. ஆகாகான் தலைமையிலான முஸ்லிம் லீக் முன்வைத்த கோரிக்கைகள் என்ன?.

- அரசுப் பணிகளில் முஸ்லிம்களின் சதவீதத்தை உயர்த்துதல்.
- உயர்நீதி மன்றங்களில் முஸ்லிம் நீதிபதிகளின் நியமனம்.
- அரசபிரதிநிதியின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராதல்.

4. 1923இல் வாரணாசியில் நடைபெற்ற ஆறாவது இந்து மகாசபை மாநாட்டைப் பற்றி குறிப்பு எழுதுக.

- இம்மாநாட்டில் 968 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
- ஐக்கியமாகாணம், பஞ்சாப், டெல்லி, பீகார் ஆகியவை தங்கள் பிரதிநிதிகளை இம்மாநாட்டிற்கு அனுப்பி வைத்தன.
- இவர்களில் 56.7 விழுக்காட்டினர் ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

5. 1921இல் நடைபெற்ற மலபார் கலகத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து என்ன?

- இது ஒரு விவசாயக் கிளர்ச்சியாக இருப்பினும் தீவிர மத உணர்வுகள் கோலோச்சின.
- எனவே காந்தியடிகள் இந்நிகழ்வை இந்து முஸ்லிம் மோதலாகவே மதிப்பிட்டார்.
- இந்நிகழ்வுகளுக்கு முஸ்லிம் தலைவர்கள் பொது மன்னிப்பு கேட்க வேண்டுமென்றார்.

## 3 - மதிப்பெண்கள்

1. இஸ்லாமியர்களுக்காக மத்தியில் முதலில் அமைக்கப்பட்ட அரசியல் கட்சியின் நோக்கங்களை எழுதுக.

- இந்திய முஸ்லிம்கள், பிரிட்டிஷ் அரசிடம் உண்மையுடனும், நன்றியுடனும் நடந்து கொள்ளுதல்.
- இந்த அமைப்பின் செயல்பாடுகள் குறித்து அரசுக்கு எழும் தவறான கருத்துக்களை நீக்குதல்.
- இந்திய முஸ்லிம்களின் விருப்பங்கள் மற்றும் அரசியல் உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்,
- தங்களது தேவைகள், உயர்ந்த லட்சியங்களை கண்ணியமான முறையில் அரசுக்குத் தெரிவித்தல்.

.

2.1909ஆம் ஆண்டின் மின்டோ-மார்லி சீர்த்திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் கூறுக.

- முஸ்லிம்களுக்கு தனித்தொகுதியை வழங்கியது.
- முஸ்லிம்களுக்கு அரசமைப்பு சார்ந்த அடையாளத்தை வழங்கியது.
- தனித்தொகுதி அறிவிப்பு மூலம் ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற கோட்பாடு அரசமைப்பு சட்டத்தில் முறையாக நுழைந்து.
- இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களை முழுமையாக அந்நியப்படுத்தியது

3. வகுப்புவாதம் ஒரு கருத்தியலாக எவ்வாறு வரையறுக்கப்படுகிறது?

- பிற மதத்தாரோடு பொருள் சார்ந்த பிரச்சனைகளிலும் கூட விரோதப் போக்கோடு சண்டையிடுவது.
- பிற்போக்குவாதிகள் நவீன உலகத்திற்குப் பொருந்தாத, காலாவதியான ஒரு கருத்தை விடாப்பிடியாகக் பிடித்துக் கொண்டிருப்பது :- நேரு.
- "வகுப்புவாதம் என்பது தேசியவாதம் என்ற கருத்தாக்கத்திற்கு முற்றிலும் எதிரானது" - நேரு.
- அரசாங்கத்திடமிருந்து வரும் எதிர்ப்பை மடைமாற்றம் செய்யும் திட்டமிட்ட முயற்சியே ஆகும்".

4. 1927ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டின் முன்மொழிவுகள் யாவை?

- பம்பாயிலிருந்து சிந்துப் பகுதியைத்தனியாகப் பிரிப்பது
- பலுச்சிஸ்தானையும் அதன் எல்லைகளையும் சீர்திருத்துவது

- பஞ்சாபிலும் வங்காளத்திலும் மக்கள் தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவம்.
- மத்திய சட்டமன்றத்தில் முஸ்லிம்களுக்கு 33%இடஒதுக்கீடு.

5 - மதிப்பெண்கள்

1. பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க.
   - ஆரிய சமாஜத்தின் மூலம் அரசியலில் இந்து மறுமலர்ச்சிக்கான குரல் ஒலிக்கத் தொடங்கியது.
   - வட இந்தியாவில் தோன்றிய பசு பாதுகாப்புக் கழகங்கள் இந்து வகுப்புவாதம் வளர்வதற்கு ஊக்கமளித்தன.
   - இஸ்லாம் அலிகார் இயக்கத்தின் வழியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.
   - வாஹாபிகள் இஸ்லாமை அதன் ஆதித் தூய்மைக்கு அழைத்துச் செல்ல முயன்றனர். இது இந்து-முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்தியது.
   - பிரிட்டிஷ் அரசாங்கம், வகுப்புவாதக் கருத்தியல் சார்ந்த அரசியலுக்கு சட்டபூர்வ அங்கீகாரத்தையும், கௌரவத்தையும் வழங்கினர்.
   - ஆரிய சமாஜத்தின் 'சுத்தி' மற்றும் 'சங்கதன்' நடவடிக்கைகளில் காங்கிரசாரின் பங்கேற்பு இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களை மேலும் பிரிவுபடுத்தியது.
   - பிரிட்டிஷார் காங்கிரஸ்காரர்களை இந்து வகுப்புவாதம் மற்றும் மறுமலர்ச்சியாளர்களோடு அடையாளப்படுத்தினர்.
   - உள்ளாட்சி அமைப்புகள் வகுப்புவாத அரசியல் வளர்வதற்கு உதவின.
   - கணபதி விழா மூலம் இந்துக்களை திரட்டுவதற்கு திலகர் மேற்கொண்ட முயற்சி வகுப்புவாதத்தை மேலும் தீவிரப்படுத்தியது.

2. ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?
   - கூட்டு இந்திய அடையாளம் ஒன்று உருவாவது தடுக்கப்பட்டது.
   - இந்தியர்களின் ஒருங்கிணைப்பு முயற்சிகள் முறியடிக்கப்பட்டது.
   - பிரித்தாளும் கொள்கையின் ஒரு பகுதியாக தனித்தொகுதிகள் அறிவிக்கப்பட்டன.
   - தனித்தொகுதிகள் என்ற அறிவிப்பின் மூலம் ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற கோட்பாடு அரசமைப்பு சட்டத்தில் முறையாக நுழைந்தது.
   - அனைத்துக்கட்சிகளும் இத்தகைய குறுங்குழுவாத அணுகுமுறையைப் பின்பற்றியதால் வட இந்தியாவில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையேப் பகைமை வளர்ந்தது.
   - 19ஆம் நூற்றாண்டின் கடைசி பகுதியில் ஏராளமான இந்து-முஸ்லிம் கலவரங்கள் வெடித்தன.
   - 1882 ஜூலை-ஆகஸ்டில் தென்னிந்தியாவில் கூட ஒரு பெருங்கலகம் சேலத்தில் நடைபெற்றது.
   - ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை முஸ்லீம் லீக் உருவாவதற்கு வழிவகுத்தது. இறுதியில் அது இந்திய பிரிவினைக்கு வழிவகுத்தது.

3. இந்து தேசியம், இஸ்லாமிய தேசியம் மற்றும் இந்திய தேசியம் ஆகியவை இந்தியப் பிரிவினைக்கு சமபங்காற்றியது எவ்வாறு?

<u>இந்தியப் பிரிவினைக்கு இந்து தேசியத்தின் பங்கு</u>

- பஞ்சாப் மாகாணம் இந்து, முஸ்லிம் மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென லாலா லஜபதி ராய் வெளிப்படையாகக் கூறினார்.
- அரசியல் களத்தில் இந்துமகாசபை 'அகண்ட இந்துஸ்தான்' என்னும் முழக்கத்தை முன் வைத்தது.
- "இந்துஸ்தானிலுள்ள இந்துக்கள் அல்லாத மக்கள் இந்து பண்பாட்டையும் மொழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று ( R.S.S ) கூறினர்.

<u>இந்தியப் பிரிவினைக்கு இஸ்லாமிய தேசியத்தின் பங்கு</u>

- சுதேசி இயக்கம் தொடங்கப்பட்ட போது, அதை ஆதரித்த முஸ்லிம்கள் காங்கிரஸின் தரகர்கள் என்ற கண்டனத்திற்கு உள்ளாயினர்.
- கிலாபத் இயக்கத்தின்போது மத அடிப்படையில் மக்களைத் திரட்டும் பணியில் முஸ்லிம்கள் ஈடுபட்டனர்

- தேசியவாத முஸ்லீம்களின் செயல்பாடுகள் இஸ்லாமுக்கு எதிரானதென பெயரிடப்பட்டு சிறுமைப்படுத்தப்பட்டன.

**இந்தியப் பிரிவினைக்கு இந்திய தேசியத்தின் பங்கு**

- காங்கிரஸ், சமயச்சார்பின்மையில் உறுதியாக இருந்த போதிலும் அதனுடைய உறுப்பினர்கள் இந்து வகுப்புவாத அமைப்புகளில் செயல்படுவதைத் தடுக்க இயலவில்லை.
- ஆரிய சமாஜத்தின் 'சுத்தி' மற்றும் 'சங்கதன்' நடவடிக்கைகளில் காங்கிரசாரின் பங்கேற்பு இந்து, முஸ்லிம்களை பிரிவுபடுத்தியது.
- திலகர், அரவிந்தகோஷ் மற்றும் லாலாலஜபதி ராய் ஆகியோர் சமய அடையாளங்கள் மூலம் இந்திய தேசியத்தை வளர்த்தனர், இது இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களை மேலும் பிரிவுபடுத்தியது .

பாடம் - 7

2 - மதிப்பெண்கள்

1. லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன?
   - லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் இஸ்லாமியர்களுக்கான தனிநாடு கோரிக்கையாகும்.
   - இக்கோரிக்கையை முஸ்லிம் லீக் கட்சியும் அதன் ஆதரவாளர்களும் முன் வைத்தனர்.
   - இத்தீர்மானம் காங்கிரசோடு பேச்சுவார்த்தையை நிராகரிக்க பிரிட்டிஷாருக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது

2. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக?.
   - வரையறுக்கப்படாத ஒரு தேதியில் டொமினியன் அந்தஸ்து வழங்குதல்.
   - சிறுபான்மையினரின் உரிமைகளை அங்கீகரித்தல்,
   - இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர் ஆலோசனைக் குழுவை உருவாக்குதல்.

3. கிரிப்ஸ் முன்மொழிவைக் காங்கிரஸ் ஏன் நிராகரித்தது?
   - டொமினியன் அந்தஸ்து வழங்குவதென்பது ஏமாற்றமளிக்கக் கூடிய குறுகிய நடவடிக்கையாக கருதப்பட்டது.
   - அரசியல் சாசன வரைவுக்குழுவில் சுதேசி மாகாணங்களைச் சேர்ந்தோர் நியமிக்கப்படும் முறையை காங்கிரஸ் நிராகரித்தது.
   - இந்தியப் பிரிவினை பற்றிய குழப்பம்.

4. சிம்லா மாநாட்டின் பேச்சுவார்த்தைகள் ஏன் முறிந்தன?
   - அரசபிரதிநிதியின் குழுவிற்கு உறுப்பினர்களை அனுப்புவதில் காங்கிரசிற்கும், முஸ்லிம் லீக்கிற்கும் இடையே சிக்கல் எழுந்தது.
   - முஸ்லிம் லீக் தனக்கு மட்டுமே இஸ்லாமியப் பிரதிநிதிகளை நியமிக்க உரிமை உள்ளது என்று வாதிட்டது.
   - காங்கிரஸ் உயர்வகுப்பு இந்துக்களை மட்டுமே நியமிக்க முடியும் என்ற முஸ்லிம் லீக்கின் வாதத்தை காங்கிரஸ் ஏற்க மறுத்தது.

5. கேப்டன் மோகன் சிங் எவ்வாறு இந்திய தேசிய இராணுவத்தை ஏற்படுத்தினார்?
   - இரண்டாம் உலகபப்போரின் போது ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்த போர்க்கைதிகள் மோகன் சிங்கின் தலைமையின் கீழ் விடப்பட்டனர்.
   - சிங்கப்பூரும் ஜப்பானிடம் வீழ்ந்ததால் மோகன் சிங்கின் கட்டுப்பாட்டில் இருந்த வீரர்களின் எண்ணிக்கை கூடியது.
   - இவர்களில் இருந்து 40,000 பேரைத் தேர்ந்தெடுத்து 1942இன் இறுதியில் இந்திய தேசிய இராணுவத்தை மோகன் சிங் பலப்படுத்தினார்.

M. VENKATESAN M.A.,M.PHIL.,B.ED., PG ASST 9 HISTORY ) GHSS AYAPPAKKAM

3 - மதிப்பெண்கள்

1. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காத அமைப்புகளின் பெயரை எழுதுக.
- முஸ்லிம் லீக்,
- சிரோமணி அகாலிதளம்,
- இந்துமகாசபை.

2. சர் ஸ்டா:.போர்டு கிரிப்ஸ் அவர்களின் முன்மொழிவுகளை விவாதிக்கவும்.
- டொமினியன் அந்தஸ்து வழங்குதல்.
- போருக்குப்பின் அரசியல் சாசன வ ரைவு க்குழுவை உருவாக்குதல்.
- இவ்வரைவுக்குழு மாகாண சபைகளில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களைக் கொண்டிருக்கும்.
- சுதேசஅரசுகளை பொறுத்த வகையில் நியமிக்கப்பட்டவர்களைக் கொண்டிருக்கும்.
- புதிய அரசியல் சாசனத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்கும் மாகாணத்திற்கு பிரிட்டிஷ் அரசோடு தனிப்பட்டஒப்பந்தம் ஏற்படுத்தஉரிமை உண்டு.

3. இந்திய தேசிய காங்கிரசிலிருந்து சுபாஷ் சந்திர போஸ் நீக்கப்பட்டதற்கானக் காரணங்களை விளக்குக.
- காங்கிரசின் முக்கிய தலைவர்கள் அவரோடு ஒத்துழைக்க மறுத்தனர்.
- எனவே போஸ் பதவித் துறப்பு செய்யவே, இராஜேந்திரப்பிரசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- போஸ் காங்கிரசிற்குள் செயலாற்ற விரும்பி :.பார்வர்டு பிளாக் கட்சியை உருவாக்கினார்.
- காங்கிரஸ் இயக்கத்திலிருந்து தனித்து புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

4. 1946இல் ஏற்படுத்தப்பட்டஇடைக்கால அரசாங்கத்தில் இடம்பெற்றமுஸ்லீம் லீக்பிரதிநிதிகள் யாவர்?
- லியாகத் அலி கான், I.I. சுந்துரிகர்,
- A.R. நிஷ்தர், கஸன்பர் அலி கான்,
- ஜோகேந்திர நாத் மண்டல்

5. எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் வெள்ளையனேவெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்தார்?
- கிரிப்ஸ் தூதுக்குழுவோடு ஏற்பட்டிருந்த கசப்பான அனுபவம் காந்தியடிகளை பிரிட்டிஷார் மீது நம்பிக்கை இழக்க வைத்தது.
- விடுதலைக்கான எந்த உறுதியும் கொடுக்காமல் காலனிய அரசு இழுத்தடித்தது.
- சுபாஷ் சந்திர போஸ் அச்சு நாடுகளோடு கைக்கோர்த்து சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல நெருக்கடி கொடுத்தார்.
- ஜெர்மனியில் இருந்து ஆசாத் ஹிந்து ரேடியோ மூலம் போஸ் இந்திய மக்களைத் தொடர்பு கொண்டு உரை நிகழ்த்தினார்.

5 - மதிப்பெண்கள்

1. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.
- காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை அறிவித்ததை தொடர்ந்து காந்தியடிகளும் காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.
- இதற்கு பதிலடியாக அனைத்து மாகாணங்களிலும் கடையடைப்புகளும் காவல்துறையினரோடு வன்முறை மோதலும் தரப்பட்டது.
- இந்தியா முழுமையிலும் தொழிலாளிகள் வேலைநிறுத்த போராட்டத்தில் இறங்கினர்.
- எதிர்ப்பின் ஆரம்பகட்டம் நகர்ப்புறங்களை மையமாகக் கொண்டு நடைபெற்றது.
- இரண்டாம் நிலையில் அது கிராமப்புறங்களில் பரவியது.
- காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 1060 ஆனது.
- குறைந்தபட்சம் 205 காவல்துறை வீரர்களாவது தங்கள் பணியை விடுத்துப் புரட்சியாளர்களோடு கைக்கோர்த்தார்கள்.

- பிரிட்டிஷார் 'வெள்ளை பயங்கரத்தை' அரங்கேற்றி அடக்குமுறையே ஆட்சிமுறை என்ற அளவுக்கு நடந்து கொண்டனர்'.
- பத்திரிகைச் சுதந்திரம் முற்றிலுமாகப் பறிக்கப்பட்ட நிலையில் புரட்சியாளர்கள் பம்பாய் நகரில் இரகசியமாக வானொலி ஒலிபரப்பை ஏற்படுத்தினர்.
- வெள்ளையனே வெளியேறு இயக்கம் காலனிய அரசுக்குப் பேரிடியாக இருந்தது.

2. சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய இராணுவ விசாரணை எவ்வாறு தீவிரப்படுத்தியது?

- காங்கிரஸ் தனது சிறந்த சட்ட நிபுணர்களைக் கொண்டு இந்திய தேசிய ராணுவத்தினர் சார்பாக வாதாடியது.
- இந்திய தேசிய ராணுவ வீரர்களின் சார்பில் ஜவஹர்லால் நேரு வாதாடினார்.
- இவர்கள் மீது நடத்தப்பட்ட விசாரணை பொதுமக்களை பெரிதும் கவர்ந்ததோடு ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியது.
- பிரிட்டிஷ் அரசின் பிடிவாதமான முரட்டுப்போக்கு மற்றொரு பேரியக்கத்திற்கு மேடையமைத்துக் கொடுத்தது.
- தேர்தல் கூட்டங்களில் ஓட்டு கேட்பதை விட பெரும்பாலும் இந்திய தேசிய ராணுவ விசாரணையை பற்றியே பேசப்பட்டது.
- இந்திய பத்திரிக்கைகள் யாவும் இவ்விசாரணையை உணர்ச்சிகரமாக பிரசுரித்ததோடு அவர்களின் விடுதலையை வலியுறுத்தின.
- இந்திய தேசிய ராணுவ வாரம் கடைபிடிக்கப்பட்டு வீரர்களின் விடுதலை வலியுறுத்தப்பட்டது.
- சிறைப்பட்ட வீரர்களின் வழக்கு செலவிற்காக நிதி திரட்டப்பட்டது.
- விசாரணை நீதிமன்றம் ஷெகல் தில்லான், ஷா நவாஸ்கான் ஆகியோரின் குற்றத்தை உறுதி செய்து தண்டனை வழங்கியது பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்

3. இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.

- போருக்குப் பின்பு ஒரு ஆணையத்தின் மூலம் இஸ்லாமியர்கள் முழுப் பெரும்பான்மையில் வாழும் தொடர் மாவட்டங்களைப் பிரித்தல்.
- அம்மாவட்டங்களில் வயதுத் தகுதி அடைந்தோரைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்தி பாகிஸ்தான் உருவாக்கம் பற்றிய முடிவை எடுத்தல் வேண்டும்.
- ஒருவேளை ஓட்டெடுப்பின் முடிவில் பிரிவினை உறுதிசெய்யப்பட்டால் பொதுவான ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும்.
- அவ்வொப்பந்தத்தில் பாதுகாப்பு, தொலைத்தொடர்பு போன்றவை இடம்பெற வேண்டும்.
- எல்லையில் அமையப் பெற்ற மாவட்டங்களுக்கு இரு இறையாண்மை கொண்ட நாடுகளில் ஏதோ ஒன்றில் சேர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.
- முழுமையான அதிகார மாற்றம் ஏற்பட்டபின் இத்திட்டங்கள் செயல்முறைக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும்.
- 'இராஜாஜி திட்டத்தை' அடிப்படையாகக் கொண்டு காந்தியடிகள் ஜின்னாவோடு பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தார்.
- ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையில் எந்தமுடிவும் எட்டப்படவில்லை.

4. இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படைகலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் என ஏன் கருதப்படுகிறது?

- HMIS என்ற போர்க்கப்பலில் மாலுமியாக பணியாற்றிய B.C தத் என்பவர் அக்கப்பலின் பக்கவாட்டில் வெள்ளையனே வெளியேறு என்று எழுதினார்.
- இதனையடுத்து அக்கப்பலில் பணியாற்றிய 1100 மாலுமிகள் உடனடியாக போராட்டத்தில் இறங்கினர்.
- ஆங்கிலேய அதிகாரிகளின் நிறவெறியையும், தரக்குறைவான செயல்பாடுகளையும் கண்டனம் செய்தனர்.

- மாலுமிகள் போராட்டத்திற்கு ஆதரவாக பம்பாய், பூனா, கல்கத்தா, ஜெசூர், அம்பாலா நகரங்களிலிருந்த ராயல் விமானப்படை ஊழியர்களும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.
- போராட்டத்தில் ஈடுபட்ட மாலுமிகள் கப்பலின் முகட்டில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், முஸ்லீம் லீக் கொடிகளை ஒருங்கே கட்டியிருந்தனர்.
- இவையனைத்தையும் பிரிட்டிஷ் அரசு அரசு அடக்குமுறையை வெளிப்படுத்தியே எதிர்கொண்டது.
- சர்தார் வல்லபாய் படேல் இக்கலகத்தை முடிவிற்கு கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டார்.
- இப்போராட்டம் இந்திய தேசிய இயக்க வரலாற்றில் ஒரு நீண்ட விடுதலைப் போராட்டத்தின் கடைசி அத்தியாயமாக திகழ்கிறது.

## பாடம் - 8

### 2 - மதிப்பெண்கள்

1. இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது?
   - இந்திய அரசாங்கச் சட்டம் 1935 கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான ஆவணம் ஆகும்.
   - இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் போது இந்த ஆவணம் பயன்படுத்தப்பட்டது.
   - இதன்படி சுதேசஅரசர்கள், இந்தியா அல்லது பாகிஸ்தான் ஆகிய ஏதேனும் ஒரு நாட்டுடன் இணைவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

2. அரசமைப்பு நிர்ணய சபையின் அமைப்பினை விளக்குக?
   - இந்திய அரசமைப்பு நிர்ணய சபை 1946 இல் ஏற்படுத்தப்பட்டது.
   - ஜவகர்லால்நேரு இந்திய அரசமைப்புக்கான கு றிக்கோள் தீர்மானத்தை அரசமைப்பு நிர்ணயசபையி ல் அறிமுகப்படுத்தினார்.
   - அரசமைப்பு நிர்ணய சபையின் தலைவராக இராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

3. அரசமைப்பின் ஷரத்து 370 ன் முக்கியத்துவம் என்ன?
   - இந்திய அரசமைப்பின் உறுப்பு 370 இன் படி ஜம்மு காஷ்மீருக்கு தனி சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
   - இந்திய பிரிவினையின் போது இந்திய தலைவர்கள் காஷ்மீர் மக்களுக்கு அளித்த உறுதிமொழியின் படி இந்த அந்தஸ்து வழங்கப்பட்டது.
   - இதன்படி இந்திய அரசின் சட்டங்கள் காஷ்மீர் சட்டமன்றத்தின் அனுமதியின்றி செல்லுபடியாகாது.

4. ஹைதராபாத் சமஸ்தானத்தை இந்திய யூனியனுடன் சேர்க்க எடுக்கப்பட்ட காவல்துறை நடவடிக்கையினை எது நியாயப்படுத்தியது?
   - ஹைதராபாத் நிஜாம் விடுதலைப் பிரகடனம் செய்த 48 மணி நேரத்திற்குள் இந்தியா அங்கு காவல்துறை நடவடிக்கைகளைத் தொடர்ந்தது.
   - இதனைத் தொடர்ந்து தெலுங்கானா மக்கள் இயக்கத்தை கம்யூனிஸ்டுகள் வழி நடத்தினர்.
   - இப்போராட்டம் ஹைதராபாத் மீது காவல்துறை நடவடிக்கை எடுத்ததை நியாயப்படுத்தியது.

5. ஜே.வி.பி. குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?
   - ஜே.வி.பி. குழு மொழிவாரி மாகாண கோரிக்கையை நிராகரித்தது.
   - மொழிவாரி மாகாண ங்கள் "குறுகிய பிராந்தியவாதத்தை" வலியுறுத்துகின்றன என்று இக்குழு கூறியது.
   - "மொழியானது பிணைக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதோடு பிரிக்கும் ஆற்றலும் உடையது" என்று இக்குழு குறிப்பிட்டது.

Padasalai

## 3 - மதிப்பெண்கள்

1. காஷ்மீர் அரசர் எவ்வாறு இணைப்புறுதி ஆவணத்தில் கைையெழுத்திட்டார்? .
   - காஷ்மீர் அரசர் ஹரிசிங் இந்தியாவோடு இணைய மறுத்து வந்தார்.
   - பாகிஸ்தானியர்கள் சிலர் காஷ்மீரைச் சூறையாடிய போது மகாராஜா ஹரிசிங்கால் அந்த நடவடிக்கையைத் தடுக்கமுடியவில்லை.
   - ஹரிசிங் இந்தியாவின் உதவியை நாடிய போது படேல் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட வேண்டும் என்றார்.
   - இதன்படி காஷ்மீர் அரசர் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டார் .

2. இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
   - குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகள்.
   - அரசு கொள்கைகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்.
   - சுதந்திரமான தேர்தல்ஆணையம்.
   - வயது வந்தோர் அனைவருக்குமான வாக்குரிமை.
   - நீதித்துறையின் சுதந்திரத் தன்மை.

3. பிரிவினையால் ஏற்பட்டகடுமையான விளைவுகளைச் சுட்டிக் காட்டுக.
   - வகுப்புவாதக் கலவரங்கள் இந்தியாவெங்கும் நடைபெற்றன.
   - இரண்டு நாடுகளிலும் குடிபெயர்ந்த குடும்பங்கள் விட்டுச் சென்ற சொத்துகள் ஆக்கிரமிக்கப்பட்டன.
   - பஞ்சாப்பின் புதிய எல்லையின் இருபுறத்திலும் ஓடிய இரயில்களில் பயணம் செய்தோர் கொல்லப்பட்டனர்.
   - இரு பக்கமும் வாழ்ந்த சிறுபான்மையின மக்களை பயமும் பாதுகாப்பின்மையும் ஆட்கொண்டிருந்தன.

4. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.
   - இரு நாடுகள் ஒன்றுக்கொன்று அவற்றின் நில எல்லை மற்றும் இறையாண்மையை மதித்து நடத்தல்.
   - இரு நாடுகளும் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்.
   - ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள் நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல்.
   - இரு நாடுகளுக்கு இடையேயான சமத்துவம் மற்றும் கூட்டுறவு.
   - சமாதான சகவாழ்வு

## 5 - மதிப்பெண்கள்

1. சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.

<u>சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள்</u>

- ஹைதராபாத் நிஜாம் இந்திய ஆளுகைக்கு கீழ்ப்படிய மறுத்து, அவர் ஹைதராபாத் அரசை சுதந்திர அரசு என்று அறிவித்தார்.
- ஜுனாகத் அரசர் மக்கள் விருப்பத்திற்கு எதிராக பாகிஸ்தானுடன் சேர விரும்பினார்.
- காஷ்மீரின் மகாராஜா ஹரிசிங் காஷ்மீரை சுதந்திர அரசாக அறிவித்தார்.
- மேற்கண்ட அரசுகளின் நிலைப்பாடுகள் இந்திய ஒன்றியம் முழுமையடைவதை தாமதப்படுத்தின

M. VENKATESAN M.A.,M.PHIL.,B.ED., PG ASST 9 HISTORY ) GHSS AYAPPAKKAM

**சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் , இணைத்ததில் படேல் மற்றும் நேருவின் பங்களிப்பு**

- இந்திய ஒன்றியத்தோடு இணையும் சுதேச மன்னர்களுக்குத் தாராளமாக மன்னர் மானியங்கள் வழங்கப்பட்டன.
- ஹைதராபாத் நிஜாம் விடுதலைப் பிரகடனம் செய்த 48 மணி நேரத்திற்குள் இந்தியா அங்கு காவல்துறை நடவடிக்கைகளைத் தொடர்ந்தது.
- ஜூனாகாத் மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தி அதனை இந்திய யூனியனுடன் இணைத்தார்.
- பாகிஸ்தானியர்கள் சிலர் காஷ்மீரை தாக்கியபோது அதன் அரசர் இந்தியாவின் உதவியை நாடினார்.
- எனவே படேல் காஷ்மீர் அரசரிடம் இணைப்புறுதி பத்திரத்தில் கையொப்பம் பெற்று அதனை இந்திய யூனியனுடன் இணைத்தார்

2. 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளைக் கண்டறிக.

- 1920ஆம் ஆண்டு முதலே இந்திய விடுதலை இயக்கத்தோடு, மொழிவாரி மாநிலக் கோரிக்கை ஒன்றிணைந்திருந்தது.
- 1928இல் வெளியான நேரு அறிக்கை மாநிலங்களை மொழிவாரி கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்றது.
- 1945ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் போது காங்கிரஸ் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மொழிவாரி மாகாணங்கள் பற்றிய கருத்து ஆணித்தரமாக இடம் பெற்றிருந்தது.
- 1946 இல் பட்டாபி சீதாராமையா ஆந்திரா ஆந்திரா மாகாணத்திற்கான கோரிக்கையை அரசமைப்பு நிர்ணயசபையின் முன் வைத்தார்.
- 1948, இல் இராஜேந்திர பிரசாத் மூவர் ஆணையம் ஒன்றை அமைத்தார்.
- மூவர் ஆணையமும் ஜே. வி. பி. கமிட்டியும் (1949) மொழிவாரி மாகாண கோரிக்கையை நிராகரித்தன.
- முதல் பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் மீண்டும் மொழிவாரி மாநில கருத்தாக்கம் எழுச்சி பெற்றது.
- பசல்அலியைத் தலைவராக கொண்ட மாநில மறுசீரமைப்பு ஆணையத்தின் அறிக்கையின் அடிப்படையில் மாநில மறுசீரமைப்புச் சட்டம் 1956இல் நிறைவேற்றப்பட்டது.

3. இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை? அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கினை விளக்குக.

**இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள்:**

- காலனிய எதிர்ப்பு (அ) ஏகாதிபத்திய எதிர்ப்பு.
- இன ஒதுக்கலை எதிர்த்தல், இனவெறியைஎதிர்த்தல்.
- வல்லரசு நாடுகளுடன் அணி சேராமை.
- ஆப்பிரிக்க- ஆசிய ஒற்றுமை.
- பிற நாடுகளை ஆக்கிரமிக்காமல் இருத்தல்.
- உலக அமைதி மற்றும் பாதுகாப்பைமேம்படுத்துதல்.

**அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேருவின் பங்கு:**

- ஆசிய மற்றும் ஆப்பிரிக்காவின் புதிய நாடுகளை பனிப்போருக்குள் தள்ளும் முயற்சிகளை எதிர்த்தார்.
- 1955 இல் பாண்டுங் நகரில் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் மாநாடு நடைபெற்றது.
- அணி சேரா இயக்கத்தைத் தோற்றுவிப்பதற்கான அடித்தளத்தை பாண்டுங்மாநாடு ஏற்படுத்திக் கொடுத்தது.
- அணிசேராமையின் முக்கியத்துவம் மற்றும் உலகத்துக்கு அதன் தேவை குறித்து நேரு விளக்கினார்.
- 1961 இல்அணுசக்தி ஆயுதக்குறைப்பு மற்றும் சமாதானத்திற்கான அழைப்பு விடுத்தார்.

M.VENKATESAN. M.A., M.PHIL., B.ED., PG ASST (HISTORY ) GHSS AYAPPAKKAM

இரண்டு மதிப்பெண்கள் - பாடம் - 9

1. நாடு விடுதலை அடைந்த போது இந்திய பொருளாதாரத்தின் நிலைகள் குறித்து ஒரு குறிப்பு வரைக..

- ❖ வறுமையின் அளவு மிக அதிகமாக இருந்தது.
- ❖ கைவினைஞர்கள் பலர் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்திருந்தனர்.
- ❖ வேளாண்மையிலிருந்து பெறப்படும் தனிநபரின் தலா வருமானமும் குறைந்திருந்தது.

2. ஜவஹர்லால் நேரு தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முன்னிருந்த முக்கிய கடமைகள் யாவை?

- ❖ பொருளாதாரத்தை வளர்த்தல்.
- ❖ வேளாண்துறை நிலைமைகளை மேம்படுத்துதல்.
- ❖ உற்பத்தித் துறையை விரிவாக்கம் செய்தல்.
- ❖ வேலைவாய்ப்புகளைப் பெருக்குதல்,
- ❖ வறுமையைக் குறைத்தல்.

3. சமதர்ம சமூக அமைப்பு என்பதைப் பற்றி நீ அறிந்ததென்ன?

- ❖ ஏற்றதாழ்வுகளைக் குறைத்துதல்,
- ❖ சுரண்டலை ஒழித்தல்.
- ❖ செல்வம் ஓரிடத்தில் குவிக்கப்படுவதைத் தடுத்தல்.
- ❖ அனைவரும் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சமவாய்ப்பைப் பெறுதல்.

4. இந்தியா விடுதலை அடைந்ததைத் தொடர்ந்து பொதுத்துறை நிறுவனங்களை அமைப்பது தொடர்பாக வைக்கப்பட்ட இரண்டு முக்கிய கருத்துக்களை சுட்டிக் காட்டுக.

- ❖ 1. கருத்தியல் நிலை. 2. நடைமுறை சார்ந்தது,
- ❖ கருத்தியல் நிலையில், சமதர்ம வளர்ச்சிக்கு பொருளாதாரத்தின் மீது அரசின் அதிகளவிலான கட்டுப்பாட்டை ஏற்படுத்துதல்.
- ❖ நடைமுறை நிலையில் கனரகத் தொழில்களை உருவாக்க வேண்டிய பொறுப்பை அரசே ஏற்றல்.

5. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.

- ❖ பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர் வினோபா பாவே ஆவார்.
- ❖ பெரும் நிலவுடைமையாளர்கள் தங்களிடம் உபரியாக உள்ள நிலங்களைத் தாங்களாவே முன்வந்து வழங்க வேண்டுமென்றார் .
- ❖ வினோபா பாவேவின் முயற்சிகள் மக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

பாடம் - 10

1. கிறித்தவ சீர்திருத்த இயக்கத்துக்கு எராஸ்மஸ் எவ்வாறு வழியமைத்தார்?

- ❖ எராஸ்மஸ், தேவாலய வழக்கங்கள் மற்றும் போதனைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினார்.
- ❖ மடமையின் புகழ்ச்சி அவரது சிறந்தபடைப்பு ஆகும்.
- ❖ கிறித்தவ துறவிகள் மற்றும் இறையியல் போதகர்களை இந்நூல் கேலி செய்தது.

2. பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.

- ❖ பிளாரன்ஸின் சக்திவாய்ந்த வர்த்தகக் குடும்பமாக மெடிசி குடும்பம் விளங்கியது.
- ❖ காசிமோ டி மெடிசி என்பவர் இத்தாலி முழுவதும் வங்கிக் கிளைகளை நடத்தி கொடி கட்டிப்பறந்தார்.
- ❖ மைக்கேல் ஆஞ்சிலோ , லியானர்டோ டாவின்சி உள்ளிட்ட பல ஓவியக் கலைஞர்களுக்கு மெடிசி குடும்பம் ஆதரவு அளித்தது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

M.VENKATESAN. M.A., M.PHIL., B.ED., PG ASST (HISTORY ) GHSS AYAPPAKKAM

3. 1493ஆம் ஆண்டின் போப்பின் ஆணை பற்றி நீவிர் அறிந்ததென்ன?

- வெர்டி முனை தீவுகளுக்கு மேற்கே 320 மைல்கள் தொலைவில் வடக்கு-தெற்கான ஒரு கோட்டினை வரைய இவ்வாணை வகைசெய்தது.
- இப்பிரகடனம் மேற்கில் செய்யப்படும் புதிய கண்டுபிடிப்புகள் ஸ்பெயினுக்குச் சொந்தம் என்று கூறியது.
- போர்த்துகல் இந்த திட்டத்தால் மகிழ்ச்சி அடையவில்லை.

4. ஸ்பெயின் நாட்டு கப்பற்படையின் குறிப்பிடத்தகுந்த விளைவு என்ன?

- ஸ்பெயினின் அரசர் இரண்டாம் பிலிப் தனது கப்பல் படையை இங்கிலாந்து மீது போர் தொடுக்க அனுப்பினார்.
- எனினும் ஆங்கிலேயர்கள் எளிதாக ஸ்பெயின் நாட்டுப் படையை வீழ்த்தினார்கள்.
- நவீன உலகில் ஒரு வலுவான சக்தியாக பிரிட்டிஷார் உருவெடுக்க இது காரணமாக அமைந்தது.

5. வோர்ம்ஸ் சபையின் வெளிப்பாடு என்ன என்று தெரிவிக்கவும்.

- போப்பாண்டவர் லூதர் இடையேயான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.
- லூதரின் புத்தகங்கள் அனுமதி மறுக்கப்பட்டு எரிக்கப்பட்டன.
- லூதர் சட்டத்திற்கு புறம்பானவர் என்று அறிவிக்கப்பட்டார்.

6. நட்சத்திர சேம்பர் உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்ன? அது ஏன் அவ்வாறு அழைக்கப்பட்டது?

- தனது ஆட்சிக்கு பிரபுக்களால் ஏற்பட்ட அச்சுறுத்தலை நீக்க ஏழாம் ஹென்றி முடிவு செய்தார்.
- அதன்படி கிளர்ச்சி செய்யும் பிரபுக்களை அரச சபையின் விசாரணைக்கு உட்படுத்த ஏழாம் ஹென்றி ஏற்படுத்தினார்.
- நீதிமன்ற அரண்மனையின் மேல் சுவரில் நட்சத்திரங்கள் ஓவியமாக தீட்டப்பட்டிருந்ததால் அவ்வாறு அழைக்கப்பட்டது.

7. இடைக்காலத்தின் பிற்பகுதியில் நிலப்பிரபுத்துவ நடைமுறை ஏன் தோல்வி கண்டது?

- இடைக்காலத்தில் ஐரோப்பாவைத் தாக்கிய கொள்ளைநோய் பிரபுத்துவ ஆட்சியை அதன் நடைமுறையை வலுவிழக்கச் செய்தது.
- இதனால் பிரபுக்கள் தங்கள் வேலையாட்களை இழந்ததோடு வரி வருமானத்தையும் இழந்தனர்.
- சிலுவைப் போர்களின் போது பெரும் எண்ணிக்கையில் பிரபுக்கள் உயிரிழந்தனர்.

8. ரொட்டியும் திராட்சை ரசமும் உண்பது இயேசுவின் சதையும் இரத்தமும் உண்பதற்கு சமம் என்ற சமயச் சடங்கு தான் என்பதை விளக்குக.

- இயேசுநாதரின் புனித இறுதி விருந்தை போன்ற சமய சடங்கை கத்தோலிக்கர்கள் பின்பற்றினர்.
- இயேசுநாதரின் தியாகங்களை நினைவு கூறும் வகையில் கத்தோலிக்கர்கள் இதனை பின்பற்றினர்.
- ரொட்டியும் திராட்சை ரசமும் உண்பது இயேசுவின் சதையும் இரத்தமும் என்று அவர்கள் நம்பி ஏற்றுக் கொள்கின்றனர்.

9. ஸ்பெயினில் சமய விசாரணை நீதிமன்ற அமைப்பு என்ன செய்தது?

- பிராட்டஸ்டன்ட்களை எதிர்கொள்ள இந்த விசாரணை அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.
- சமய விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் இந்நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டனர் .
- சமய விரோதிகளுக்கு சாட்டையடி தொடங்கி உயிருடன் எரிப்பது வரையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

10. யார்க் மற்றும் லான்காஸ்டிரியன் குடும்பங்களுக்கு இடையேயான மோதல் ஏன் ரோஜாப்பூ போர் என்று அழைக்கப்பட்டது? இந்தப் போர் எவ்வாறு முடிவுக்கு வந்தது?

- அவர்கள் முறையே வெள்ளை மற்றும் சிவப்பு ரோஜாக்கள் உடைய அடையாளக் குறிகளை அணிந்தனர், அதனால் இப்பெயர் பெற்றது.
- இந்தஉள்நாட்டுப் போரில் ஹென்றி டியூடர் வெற்றி வாகைசூடி, இங்கிலாந்தில் புதிய அரசராட்சி அமைய வழிவகுத்தார்.
- அவர் யார்க் குடும்பத்தைச் சேர்ந்த எலிசபெத் உடன் திருமண ஒப்பந்தத்தில் ஈடுபட்டார்.

11. டிரென்ட் சபையின் பணி என்ன என்று எடுத்துரைக்கவும்.

- பைபிள் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தியது.
- போப்பாண்டவரின் அதிகாரத்தையும் பாதிரிமார்களின் பிரம்மச்சர்யத்தையும் நிலை நிறுத்தியது.
- அனைத்து தேவாலயங்களிலும் கிறிஸ்து மற்றும் மேரியின் உருவ வழிபாட்டையும் சபை ஆதரித்தது.

12. வரலாற்றில் ஜோன் ஆஃப் ஆர்க் மங்கையினை நினைவு கூறப்படுவது ஏன்?

- நூறாண்டுப் போரில் பிரெஞ்சு அரசர் ஏழாம் சார்லசுக்காக ஜோன் ஆஃப் ஆர்க் பங்கு பெற்றார்.
- அவர் வீரதீரமாகப் போரிட்டு ஆர்லியன்ஸ் போரை வென்றார்.
- எனவே ஆர்லியன்ஸின் பணிப்பெண் என்ற பட்டம் ஜோன் ஆஃப் ஆர்க்கிற்கு வழங்கப்பட்டது.

பாடம் - 11

1. **வட அமெரிக்கா வின் ஐரோப்பியக் காலனிகள் பூர்வ குடி மக்கள் மீது எத்தகை ய தாக்கத்தினை ஏற்படுத்தின?**

- தங்கத்திற்காக சுரங்கங்கள் தோண்ட கட்டாயபடுத்தப்பட்டனர்.
- ஐரோப்பிய நோய்களினாலும், கொடூர பணி சூழலினாலும் இம்மக்கள் பேரழிவுக்குள்ளானார்கள்.
- 11 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இம்மக்கள் உண்மையிலேயே மறைந்து போனார்கள்.

**2. பாஸ்டன் தே நீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன ?**

- பாஸ்டன் படுகொலையைத் தொடர்ந்து 100 கிளர்ச்சியாளர்கள் பூர்வகுடி அமெரிக்கர்களைப் போல வேடம் தரித்தனர்
- அவர்கள் பாஸ்டன் துறைமுகத்தில் தேயிலையைக் கொண்டு வந்திருந்த மூன்று கப்பல்களில் ஏறி 342 பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர்.
- இந்நிகழ்வு பாஸ்டன் தேநீர் விருந்து என அழைக்கப்பட்டது.

**3. அமெரிக்க விடுதலைப் போருக்குத் தாமஸ் பெயினின் அறிவுத்திறன் சார்ந்த பங்களிப்பு என்ன ?**

- ஆங்கிலேயரான தாமஸ்பெயின் 'பொது அறிவு' (1776) எனத் தலைப்பிடப்பட்ட சிறு பிரசுரமொன்றை எழுதினார்.
- அதில் தாமஸ் பெயின் குடியேற்ற நாடுகளின் கோரிக்கைகளை நியாயப்படுத்தி விவாதங்களை எழுதியிருந்தார்.
- இச்சிறு பிரசுரம், மக்களின் மீது கிளர்ச்சியூட்டும் தாக்கத்தைஏற்படுத்தியது.

**4. சரடோகா போரின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.**

- சரடோகா போர் முனையில் ஆங்கிலேயப் படைத்தளபதி ஜெனரல் புர்கோய்ன் சரணடைய நிர்ப்பந்திக்கப்பட்டார்.
- இறுதியில் யார்க்டவுன் என்ற இடத்தில் இங்கிலாந்துப் படைகள் அமெரிக்க படைகளிடம் சரணடைந்தன.
- இவ்வெற்றியோடு வடக்கேயிருந்த குடியேற்றங்கள் சுதந்திரம் பெற்றன.

5. பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதிக்கவும்.

- 1. மதகுருமார்கள், 2. நிலப்பிரபுக்கள், 3. உரிமைகளற்ற சாதாரண மக்கள்.
- மதகுருமார்களும், பிரபுக்களும் பல வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தனர்.
- மூன்றாம் பிரிவைச் சேர்ந்தவர்களே வரிவிதிப்பின் கொடுமைகளை எதிர்கொள்ள நேர்ந்தது.

6. மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைப் பிரகடனத்தின் சாரம்சத்தை அடிக்கோடிட்டுக் காட்டவும்.

- தனிமனித உரிமைகளையும் கூட்டு உரிமைகளையும் வரையறை செய்தது.
- பொது மக்களின் ஒப்புதலின்றி வரிகளைஉயர்த்தக் கூடாதெனவும் குறிப்பிட்டது.
- ""அனைத்து மனிதர்களும் பிறப்பில் சுதந்திரமாகவும் உரிமைகளில் சமமாகவும் உள்ளனர்" என்றது.

7. இலத்தீன் அமெரிக்க விடுதலைக்கு சைமன் பொலிவரின் பங்களிப்பை சுருக்கமாய் வரைக.

- சைமன் பொலிவர் ஒரு வலிமை மிகுந்த இராணுவ, அரசியல் சக்தியாக உருவானார்.
- கிழக்கு ஆன்டிஸ் மலைப்பகுதி வரை தன்னுடைய படைகளை நடத்திச் சென்றார்.
- போயகா போர்க்களத்தில் தனது பகைவர்களை படுதோல்வி அடையச் செய்தார்.

8. தொழிற்புரட்சியின் சிறப்புக் கூறுகளை முன்னிலைப்படுத்திக் காட்டவும்.

- இரும்பு, எஃகு ஆகியவற்றின் பயன்பாடு.
- நிலக்கரி மற்றும் நீராவி போன்ற ஆற்றலுக்கான புதிய மூலப்பொருட்களின் பயன்பாடு.
- உற்பத்தியை அதிகரிக்கச் செய்த புதிய இயந்திரங்களின் கண்டுபிடிப்பு.
- போக்குவரத்திலும் செய்தித் தொடர்புகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள்.

9. சாமுவெல் சிலேட்டர் ஏன் அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தையெனக் கருதப்படுகிறார்?

- சாமுவெல் சிலேட்டர் அமெரிக்காவின் நீர் உருளையால் இயக்கப்பட்ட முதல் ஜவுளி ஆலையை இயக்கினார்.
- அமெரிக்காவின் தொழில் முனைவோர் பலர் சிலேட்டரின் ஆலையைப் போன்றே பல ஆலைகளை உருவாக்கினர்.
- எனவே அமெரிக்க குடியரசுத் தலைவர், சிலேட்டரை“ அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தை” எனப் போற்றினார்.

10. பீட்டர்லூ படுகொலையின் பின்னணி யாது?

- 1819ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தொழிலில் மந்த நிலையும் உணவுப் பொருட்களின் விலையேற்றமும் ஏற்பட்டது.
- எனவே மக்கள் ஹென்றி ஹன்ட் எனும் தீவிரவாதத் தலைவரின் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
- மக்களின் மனநிலையை கண்டு பீதியடைந்த அதிகாரிகள் குதிரைப்படை காவலர்களைக் கொண்டு கூட்டத்தினரைத் தாக்க உத்தரவிட்டனர்.

## பாடம் - 12

1.ஆறு சரத்துகளைக் கொண்ட1838ஆம் ஆண்டின் மக்களின் பட்டயத்தைப் பற்றி எழுதுக.

- அனைவருக்கும் வாக்குரிமை.
- வாக்குச்சீட்டுகள் மூலம் வாக்களித்தல்.
- வேட்பாளர்களுக்கு சொத்துத்தகுதி நிர்ணயிக்கலாகாது.
- மக்களவைக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு நிதி சலுகைகளை வழங்குதல்.
- சமஅளவிலான தேர்தல் மாவட்டங்களையும், பிரதிநிதித்துவத்தையும் வழங்கல்.
- வருடாந்திரப் பாராளுமன்றம்.

2.அறுபது நபர்கள் வழங்கிய அறிக்கை பற்றி நீவீர் அறிந்தது யாது?

- இவ்வறிக்கை 1789இன் பிரெஞ்சு புரட்சி அரசியல் சமத்துவத்தை மட்டுமே ஏற்படுத்தியதென்றது.
- பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தவில்லை என்று அறிவித்தது.
- உழைக்கும் வர்க்கத்தை உழைப்பாளிகளே பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது.

3.எதனால் 1848ஆம் ஆண்டின் ஜூன் 24 முதல் 26 வரையான காலம் ‘இரத்த ஜூன் தினங்கள்’ எனக் கொள்ளப்படுகின்றன?

- லூயி பிளாங்கின் முயற்சியால் உருவாக்கப்பட்ட பட்டறைகளை மூடியதற்கு தொழிலாளர்கள் அரசை எதிர்க்க துணிந்தனர்.
- எனவே 1848ஆம் ஆண்டின் ஜூன் 24-26 ஆம் தேதிகளுக்கிடையே ஆயிரக்கணக்கான மக்கள் பிரான்சில் கொல்லப்பட்டார்கள்.
- பதினோராயிரம் புரட்சியாளர்கள் சிறையிலடைக்கப்பட்டும், நாடு கடத்தப்பட்டும் தண்டிக்கப்பட்டார்கள்.

M.VENKATESAN. M.A., M.PHIL., B.ED., PG ASST (HISTORY ) GHSS AYAPPAKKAM

4.மெட்டர்னிக் சகாப்தத்தில் ஐரோப்பிய கூட்டு (Concert of Europe) எத்தகைய பங்காற்றியது என்பதனை விளக்குக.

- ஐரோப்பாவில் ஒழுங்கை நிலைநிறுத்திடவும், அதிகார சமநிலையைக் காத்திடவும் பாடுபட்டது.
- உள்நாட்டுக் கலவரத்தால் அச்சுறுத்தப்பட்ட நாடுகளின் விவகாரத்தில் தலையிட்டன.
- தங்களின் ஒட்டுமொத்த முடிவை பாதிக்கப்பட்ட நாடுகளின் மீது திணித்தன.

5. இத்தாலியை மெட்டர்னிக் "வெறும் பூகோள வெளிப்பாடே" என ஏன் கூறினார்?

- வியன்னா காங்கிரசால் இத்தாலி எட்டு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது.
- இத்தாலியின் வடக்குப்பகுதி ஜெர்மன்மொழி பேசும் ஆஸ்திரியர்களின் வசம் ஒப்படைக்கப்பட்டது.
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் இத்தாலி 'பன்னிரெண்டு பெருமாநிலங்களையும் பல குறுநிலங்களையும்' உள்ளடக்கியதாக இருந்தது.
- எனவேதான் இத்தாலி 'வெறும் பூகோள வெளிப்பாடே' என்று மெட்டர்னிக் குறிப்பிட்டார்.

6.இரவலர் சட்டங்கள் பற்றி விவரமாக எழுதுக.

- பிரிட்டனில் எலிசபெத் அரசியின் ஆட்சிக்காலத்தில் இரவலர் சட்டங்கள் இயற்றப்பட்டது.
- இதன்படி வயது முதிர்ந்தோருக்கும், நோயாளிகளுக்கும், ஏழை சிறார்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது.
- மேலும் ஆற்றலிருந்தும் வேலை வாய்ப்பில்லாமல் தவித்தோருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது.

7.1864இல் துவங்கப்பட்ட முதல் பன்னாட்டு உழைக்கும் ஆண்களின் சங்கம் ஆற்றிய பங்கை விளக்குக.

- பன்னாட்டு உழைக்கும் மக்களின் கூட்டமைப்பை ஏற்படுத்துவதே அதன் நோக்கமாக விளங்கியது.
- இப்பன்னாட்டு உழைப்பாளரமைப்பில் மிதவாதிகள் கலந்து விடாமல் தடுத்தது.
- ஃபெர்டினான்ட் லசால், பகுனின் போன்ற சோஷலிசவாதிகள் நுழைந்து விடாமலும் இது முனைந்து செயல்பட்டது.

8. கார்பொனாரி இத்தாலிய ஐக்கியத்திற்கு செய்த தொண்டுகளை முன்வைத்து குறிப்பு வரைக.

- சுதந்திர கருத்துக்களையும், நாட்டுப்பற்றையும் வலியுறுத்தியது.
- தாராளமயவாத கருத்துக்களையும், தேசியவாதத்தையும் இக்குழுக்கள் உயிர்த்தெழச் செய்தன.
- இதன் விளைவாக நேப்பிள்ஸ், பியட்மாண்ட், லம்பார்டி ஆகியப் பகுதிகளில் புரட்சி வெடித்தது.

9. ஃபிராங்கோய்ஸ் பபேஃப் என்பவர் யார்?

- பிரெஞ்சுப் புரட்சி நடந்தகாலத்தில் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்த அரசியல் கிளர்ச்சியாளர் ஆவார்.
- புரட்சி விவசாயிகள், தொழிலாளர்களின் தேவைகளை வெளிக் கொணரவில்லை என்றார்.
- தனியுடைமையை ஒழித்து நிலங்களைப் பொதுவுடைமையாக்க வேண்டும் என்று வாதிட்டார்.

10. ஸோல்வரெய்ன் (Zollverein) எனப்படுவதன் முக்கியத்துவம் யாது?

- பிரஷ்யா ஸோல்வரெய்ன் என்ற சுங்க ஐக்கியத்தை ஏற்படுத்தியது.
- பெரும்பாலான ஜெர்மானிய பகுதிகள் இதில் இணைந்தன.
- இதனால் இப்பகுதிகள் ஒரு பொதுப் பொருளாதார நிர்வாகத்தின் கீழ் வரும் சூழல் உருவானது.

11.போலியான பொருளாதார பகட்டுக்காலம் பற்றி நீவீர் அறிவதைகூறுக.

- உழைக்கும் வர்க்கம் தீவிரமாக ஒன்று திரட்டப்பட்ட சகாப்தம் துவங்கிய காலம் ஆகும்.
- சோஷலிசமும், தொழிலாளர் இயக்கங்களும் பல நாடுகளில் பரந்து விரிந்து ஏற்றம் பெறலாயின.
- தொழில்மயத்தின் அதிவேகப் பரவலால் கூலி அதிகரித்தது.

12.அமெரிக்கப் பொருளாதார வரலாற்றில் 1873ஆம் ஆண்டின் முக்கியத்துவம் யாது?

- 1873 இல் உலகளாவிய பொருளாதார பெருமந்தம் ஏற்பட்டது.
- இப்பொருளாதார பெருமந்தம் அமெரிக்காவையும் மிகக் கடுமையாகப் பாதித்தது.
- இக்காலகட்டத்தில் அமெரிக்க இருப்புப்பாதை நிறுவனம் திவாலானது.

M.VENKATESAN. M.A., M.PHIL., B.ED., PG ASST (HISTORY ) GHSS AYAPPAKKAM

பாடம் - 13

1. ஏகாதிபத்தியத்தை வரையறுத்து ஜான் ஹாப்சன் முன்வைத்த கருத்தை விளக்குக.

- ஏகாதிபத்தியம் என்பது தொழிலை கட்டுப்படுத்துவோர் தங்கள் செல்வங்கள் சென்று சேரும் பாதையை விசாலப்படுத்துவது என்றார்.
- உள்ளூரில் விற்கமுடியாத பொருள்களையும், சந்தைப்படுத்த முடியாத மூலதனத்தையும் பயன்பாட்டிற்குக் கொண்டுவர முயற்சிப்பர்.
- இதற்காக அயல்நாட்டு சந்தைகளையும், அயல்நாட்டு நிதியையும் பயன்படுத்துவார்கள்.

2. ஜெர்மனி பிரான்சை தனிமைப்படுத்தமுனைந்ததேன்?

- பிராங்கோ-பிரஷ்யப் போரில் பிரான்ஸ் அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை இழந்தது.
- இதற்கு பிரான்ஸ் பழிவாங்கக்கூடும் என்று பிஸ்மார்க் எதிர்பார்த்தார்.
- அதனால் பிரான்சை தனிமைப்படுத்த அவர் தீர்மானம் கொண்டார்.

3. பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையே 1904இல் கையெழுத்திடப்பட்ட நாடுகளுக்கிடையே நட்புறவின் (Entente Cordiale) முக்கியத்துவம் யாது?

- மொராக்கோ, எகிப்து சார்ந்த பிணக்குகள் தீர்க்க பட்டன.
- மொராக்கோவில் தன்னிச்சையாக செயல்பட பிரான்ஸ் அனுமதிக்கப்பட்டது.
- பிரிட்டன் எகிப்தை ஆக்கிரமித்தமைக்கு பிரான்சின் அங்கீகாரத்தைப் பெற்றது.

4. பால்கன் சிக்கலின் விளைவுகள் உள்ளடக்கிய சிறப்புக் கூறுகளை எழுதுக.

- முதலாவதாக பல்கேரியர்கள் தாங்கள் வஞ்சிக்கப்பட்டதாக உணர்ந்து அதற்காக செர்பியர்களை பழிவாங்க துடித்தனர்.
- இரண்டாவதாக செர்பியர்கள் மிதமிஞ்சிய வெற்றிக்களிப்பில் திளைத்தார்கள்.
- ஆஸ்திரியர்களுக்கு எதிரான போராட்டங்கள் செர்பியாவிலும், போஸ்னியாவிலும் மிகுந்த தீவிரவாதத்தன்மை கொண்டதாக மாறியது.

5. "மூவர் தலையீடு" எனப்படுவது யாது?

- ஷிமனோசெகி உடன்படிக்கையின்படி ஜப்பானிற்கு லியோடுங் தீபகற்பம் உள்ளிட்ட சில பகுதிகளை சீனா வழங்கியது.
- ஜப்பானின் இந்த திடீர் வளர்ச்சியைக் கண்டு ஐரோப்பிய சக்திகள் அஞ்சின.
- எனவே பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் ஜப்பானை லியோடுங் தீபகற்பத்தை ஒப்படைக்கும்படி செய்தன.

6. முதல் உலகப்போரின் காலத்தில் கிழக்கு திசையில் வான் ஹிண்டன்பர்க் ஆற்றியப் பங்கை விளக்குக.

- ரஷ்யப்படைகள் பிரஷ்யாவின் கிழக்குப்பகுதி வரை ஊடுருவிச் சென்றன.
- ரஷ்ய படைகளை ஜெர்மனிய தளபதி வான் ஹிண்டன்பர்க் எதிர்கொண்டார்.
- டானென்பர்க்போரில் வான் ஹிண்டன்பர்க்கின் போர்த்திறத்தால் ரஷ்யா பேரிழப்புகளைச் சந்தித்தது.

7. ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக.

- மிக முக்கியத்துவம் வாய்ந்த கடற்போரான இது டென்மார்க்கின் ஜட்லாந்து தீபகற்பத்திற்கு அருகில் நடந்தது.
- இப்போர் முடிவுபடாத ஒரு போராக இருந்தது.
- ஜட்லாந்து போர் முதல் உலகப்போரின் மிகப்பெரும் கடற்போராக நினைவில் கொள்ளப்படுகிறது.

8. நிகிலிசம் என்றால் என்ன?

- பல்லாண்டுகால சமூக அமைப்பை எதிர்க்கும் உணர்வின் பிரதிநிதித்துவமே நிகிலிசமாகும்.
- நிகிலிசம் நாட்டின் அரசு, கிறித்தவ ஆலயம், குடும்பம் போன்ற நிறுவனங்கள் கொண்டிருந்த அதிகாரத்தை மறுத்தது.
- அதன் நம்பிக்கைகள் விஞ்ஞான அடிப்படையிலான உண்மையைச் சுற்றியே அமைந்திருந்தன.

9. கிரீசிற்கும் பல்கேரியாவிற்குமிடையே 1925இல் எழுந்த சர்ச்சையை பன்னாட்டு சங்கம் எவ்வாறு தீர்த்து வைத்தது?

- 1925இல் கிரீஸ் பல்கேரியா மீது படையெடுத்தது.
- பன்னாட்டு சங்கம் போர் நிறுத்த ஆணையை வெளியிட்டு ஆக்கிரமிப்பை நிறுத்தியது.
- விசாரணை மேற்கொண்ட பின் கிரீசை நஷ்டஈடு வழங்கஆணையிட்டது.

10. லேட்டரன் உடன்படிக்கை எவ்வாறு முசோலினியின் அதிகாரத்திற்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கியது?

- முசோலினி வாட்டிகன் நகருக்கு தனிநாடு அங்கீகாரம் வழங்கி ரோமன் கத்தோலிக்க திருச்சபையைத் தன் பக்கம் ஈர்த்தார்.
- இதற்கு கைமாறாக கத்தோலிக்க திருச்சபை இத்தாலியப் பேரரசை அங்கீகரித்தது.
- இத்தாலியின் தேசியசமயமாக ரோமன் கத்தோலிக்க மரபு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

11. மூன்றாவது ரெய்ச் என்றால் என்ன?

- மூன்றாவது ரெய்ச் என்று குறிப்பிடப்படுவது ஹிட்லரின் நாஜி அரசு ஆகும்.
- ஜெர்மனியில் பாராளுமன்ற மக்களாட்சி முறைக்கு இது முற்றுப்புள்ளி வைத்தது.
- இதனால் ஜெர்மனி முழுமையாக ஒரு மையப்படுத்தப்பட்ட அரசாக மாற்றப்பட்டது.

12. பிரெஞ்சுக்காரர்கள் ரூர் பகுதியை ஆக்கிரமித்த பிறகு ஜெர்மனியில் உருவான இரு திரைமறைவு இயக்கங்கள் யாவை?

- பெர்லின் நகரில் முன்னாள் படைவீரர்களை கொண்ட இயக்கத்தை லூடன்டார்ஃப் ஏற்படுத்தியிருந்தார்.
- மற்றொன்று மூனிச் நகரில் முன்னாள் படைத்துறை அலுவலர் ஒருவரின் தலைமையில் செயலாற்றி வந்தது.
- அவர் தேசிய சோஷலிச ஜெர்மன் தொழிலாளர் கட்சியை நிறுவிய அடால்ஃப் ஹிட்லர் ஆவார்.

## பாடம் - 14

1. கெல்லாக் -பிரையாண்ட் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புக.

- கெல்லாக் -பிரை யாண்ட் ஒப்பந்தம் 1928 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.
- பன்னாட்டு சங்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு உறுப்பினராகவில்லை என்ற போதும் கூட்டத்தில் கலந்து கொண்டது.
- இவ்வுடன்படிக்கையின் படி உலகநாடுகள் அனைத்தும் ‘போரை கைவிடுவது என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டன.

2. பன்னாட்டு சங்கத்திலிருந்து 1933ஆம் ஆண்டில் ஜெர்மனி ஏன் வெளியேறியது?

- ஆயுதக்குறைப்பு மாநாட்டில் பிரான்சிற்கு இணையாக ஜெர்மனியும் மறுஆயுதமயமாக்கல் கோரிக்கை விடுத்தது.
- பிரெஞ்சுக்காரர்கள் இந்தகோரிக்கைக்கு உடன்பட மறுத்துவிட்டனர்.
- எனவே பிரான்சின் மறுப்பிற்கு பதிலடியாக ஹிட்லர் பன்னாட்டு சங்கத்திலிருந்து ஜெர்மனியை விலக்கிக் கொண்டார்.

3. ரோம் -பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமையப் பெற்றது எது?
- முசோலினியின் எத்தியோப்பியப் படையெடுப்பை பிரிட்டனும் பிரான்சும் கண்டித்தன.
- இது ஹிட்லருக்கு இத்தாலியோடு நெருங்கிய நட்பை வளர்த்துக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.
- இதுவே ரோம்-பெர்லின் அச்சின் துவக்கமாக அமைந்தது.

4. மூனிச் ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?
- மூனிச் மாநாட்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் பிரதம அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.
- சூடட்டன்லாந்தை ஜெர்மானியப் படைகள் ஆக்கிரமித்துக் கொள்ளலாம்.
- செக்கோஸ்லோவாக்கியாவின் பகுதிகளை போலந்திற்கும், ஹங்கேரிக்கும் பிரித்துக் கொடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

5. டங்கிர்க் வெளியேற்றம் குறித்து நீவீர் அறிவது யாது?
- இரண்டாம் உலகப்போரில் பிரெஞ்சு துருப்புகள் டங்கிர்க் கடற்கரைக்கு விரட்டப்பட்டன.
- அங்கிருந்து அவர்கள் படகுகளிலும், சிறு கப்பல்களிலும் புறப்படும் படியான நிலை ஏற்பட்டது.
- அவ்வாறு டங்கிர்க்கிலிருந்து வெளியேற்றப்பட்ட வீரர்களே சுதந்திர பிரெஞ்சுப்படையின் கருவாக செயல்பட்டார்கள்.

6. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியதன் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி எழுதுக.
- அமெரிக்கா ஜப்பானின் மீது போர்ப்பிரகடனம் செய்தது.
- முழுமையான உலகப்போருக்கு வழிவகுத்தது.
- பிரிட்டனும், சீனாவும் அமெரிக்க ஐக்கிய நாட்டோடு கைகோர்த்தன.

7. அட்லாண்டிக் பட்டயத்தின் சிறப்புக் கூறுகளைப் பட்டியலிடுக.
- மக்களின் ஒப்புதல் இல்லாமல் பிரதேச சீரமைப்புகள் ஏற்படுத்தலாகாது.
- அரசைத் தேர்ந்தெடுக்க முழு உரிமை கொண்டவர்கள் குடிமக்களே.
- கடல்கடந்து செல்வதற்கான சுதந்திரத்தைஉறுதிப்படுத்துதல்.
- ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நாடுகளை ஆயுதக்குறைப்பிற்கு உட்படுத்துதல்

8. நான்கிங் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை ஆய்க.
- முதலாம் அபினிப்போரின் இறுதியில் நான்கிங் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட து.
- இவ்வுடன்படிக்கை பிரிட்டனுக்கு சீனாவின் கதவுகளைத் திறந்துவிட்டது.
- சீனா ஹாங்காங்கை விட்டுக் கொடுத்ததோடு இழப்பீடாக ஒரு தொகையையும் வழங்கியது.

9. போய்டி ஓடோமா பற்றிய குறிப்பு வரைந்து அதன் தோல்விக்கான காரணங்களை குறிப்பிடுக.
- கிழக்கிந்திய தீவுகளில் தெளிவான தேசியவாதத்தை வெளிப்படுத்திய முதல் அமைப்பு போய்டி ஓடோமா ஆகும்.
- ஜாவாவின் குடிமைப்பணியாளர்களையும் மாணவர்களையும் உள்ளடக்கிய அமைப்பான இது ஒரு கலாச்சார அமைப்பாகமாறியது.
- ஆனால் சற்று காலத்தில் போய்டி ஓடோமா செயலிழந்தது சரேகத் இஸ்லாம் எனும் அமைப்பு வளர்ந்தது.

10. பிலிப்பைன்ஸில் 1902இல் நிறுவப்பட்ட அமெரிக்க ஆட்சியின் உடனடி விளைவுகள் யாவை?
- முதன்மையான காலனிய நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன:
- ஆங்கில வழி கல்வி முறை, தேர்வுகள் அடிப்படையில் குடிமைப்பணி, நீதித்துறையை உருவாக்கப்பட்டன.
- தேர்தல் மூலம் நகராட்சி மற்றும் மாகாண அரசுகள் நிறுவப்பட்டன.

11. டச்சு-இந்தோனேஷிய உடன்படிக்கையின் பின் நேர்ந்த முன்னேற்றங்களை விவாதத்திற்கு விவாதிக்க.
- ஜாவா மற்றும் சுமத்ராவை விடுதலை பெற்ற குடியரசாக டச்சுக்காரர்கள் ஏற்றுக்கொண்டனர்.
- பிற தீவுகளை கூட்டாட்சி முறையில் இணைத்து இந்தோனேஷிய ஐக்கிய நாடு உருவாக்கப்பட்டது.
- எனினும் டச்சுக்காரர்கள் இருமுறை இந்தோனேஷியாவின் அமைதியைத் தகர்க்க முயன்றனர்.

12. கவைட் கிளர்ச்சியின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.
- கவைட் கிளர்ச்சியை காட்டுமிராண்டித் தனமாகக் கையாண்ட செயலானது பிலிப்பைன்சில் தேசியவுணர்வை வளர்த்தெடுக்க பெரிதும் உதவியது.
- பிலிப்பைன்ஸ் நாட்டின் அறிவார்ந்த மக்கள் கைது செய்யப்பட்டனர்.
- குறுகியகால விசாரணைக்குப் பின்னர் மூன்று குருக்கள் பொதுவெளியில் தூக்கிலிடப்பட்டு தியாகிகளானார்கள்.

## பாடம் - 15

1. அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.
- அமெரிக்காவின் உளவு நிறுவனமான மத்திய புலனாய்வு முகமை 1947இல் நிறுவப்பட்டது.
- சோவியத் யூனியனின் உளவு நிறுவனமான KGB 1954இல் உருவாக்கப்பட்டது

2. கம்யூனிசத்தைக் கட்டுக்குள் வைத்தல் எனும் கோட்பாட்டை விளக்குக.
- போரினால் சீரழிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தைப் புனரமைத்துக் கம்யூனிசத்தை கட்டுப்படுத்த அமெரிக்கா விரும்பியது.
- இதற்காக ட்ரூமன் கோட்பாட்டையும் மார்ஷல் திட்டத்தையும் முன் வைத்தது.
- மேலும் 1948 இல் ஐரோப்பியப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம் உருவாக்கப்பட்டது.

3. ஐ.நாசபையில் நிறைவேற்றப்பட்ட“ அமைதிக்காக இணைகிறோம்” எனும் தீர்மானத்தின் சிறப்பினைக் குறிப்பிடவும்.
- அமெரிக்காவின் முன்முயற்சியில், ஐ.நா பொதுசபை அவசரமாகக் கூடி இத்தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இதன்மூலம் பாதுகாப்பு சபையானது ஒரு நெருக்கடியில் உடன்பாட்டை எட்டமுடியாவிட்டால், பொது சபை இராணுவத்தை பயன்படுத்தும் பரிந்துரையைச் செய்யலாம்.
- இத்தீர்மானம் சட்டத்திற்குப் புறம்பானது என சோவியத் ரஷ்யா நினைத்தது.

4. ‘கோமிங்பார்ம்’ குறித்து நீங்கள் அறிவதென்ன?
- சோவியத்ரஷ்யா கோமின்பார்ம் எனும் அமைப்பை உருவாக்கியது.
- இவ்வமைப்பில் ஐரோப்பிய நாடுகளின் அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர்.
- இவ்வமைப்பு கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளுடனான வணிக உறவுகளைத் தடுக்க முயன்றது.

5. பனிப்போர் காலகட்டத்தைச் சேர்ந்த‘மறைமுக’ போர்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
- மறைமுக போர்களுக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகள், கொரியப் போரும் வியட்நாமியப் போரும் ஆகும்.
- இவ்விரு போர்களிலும் வடகொரியாவிலும், வடவியட்நாமிலும் இருந்த கம்யூனிச அரசுகளுக்குச் சோவியத் யூனியன் ஆதரவளித்தது.
- அமெரிக்கா தென் கொரியாவிற்கும் தென் வியட்நாமிற்கும் துணையாக நின்றது

6. ஹங்கேரியச் சிக்கலின் பின்னணி யாது?
- ஹங்கேரியில் இம்ரி நேகி மீண்டும் அதிபராவதை ரஷ்யா ஏற்றுக் கொண்டது.
- அவர் பலகட்சி முறையை அறிமுகம் செய்து ஒரு கூட்டணியாட்சியை நிறுவினார்.
- இதனால் கோபம் கொண்ட ரஷ்யா ஹங்கேரிக்குள் படைகளை அனுப்பி கிளர்ச்சியை ஒடுக்கியது.

7. ஷுமன் திட்டம் என்றால் என்ன?

- பிரான்சின் வெளியுறவுத்துறை அமைச்சரான ராபர்ட்ஷுமன் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையே சமரசம் ஏற்பட்டால் அது இருநாடுகளுக்கும் நன்மை என்றார்.
- இரு நாடுகளின் நிலக்கரி மற்றும் எஃகு ஆகியவற்றின் கூட்டு உற்பத்தியை, உயர்மட்டஆணையம் மூலம் நிர்வகிக்கப்பட வேண்டுமென முன்மொழிந்தார்.
- பொருளாதார ஒருங்கிணைப்புக்கான இத்திட்டம் பரஸ்பர ஆர்வத்தை உருவாக்கி இரு நாடுகளையும் தானாகவே இணைத்தது.

8. பிரெஸ்த்ட்ரோகியா கோட்பாட்டின் பொருட் சுருக்கதைக் கூறுக.

- சோவியத் ரஷ்யாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் கோர்பசேவ் பிரெஸ்த்ட்ரோகியா பற்றி அறிவித்தார்.
- அரசியல், பொருளாதார மறுகட்டமைப்பின் அவசியம் குறித்து பிரெஸ்த்ட்ரோகியா விளக்குகிறது.
- இதன் மூலம் கோர்பசேவ் சோவியத் ரஷ்யாவில் பல நிறுவனங்களின் மீதிருந்த மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்தினர்.

## மூன்று மதிப்பெண்கள் - பாடம் - 9

1. குத்தகை சீர்திருத்தங்களின் நோக்கங்கள் யாவை?

- குத்தகையை முறைப்படுத்துவது.
- குத்தகைதாரர்களின் உரிமைகளை பாதுகாப்பது.
- நிலவுடைமையாளர்களிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்தல்.
- நிலத்திற்கான உரிமையை குத்தகைதாரர்களுக்கு அளித்தல்.

2. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை.

- இந்தியா உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது.
- உற்பத்தித்திறன் அதிகரித்தது.
- விவசாயிகளிடமிருந்த உபரி உணவு தானியங்களை அரசு சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைத்தது.
- மக்களுக்கான உணவு பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டது.

3. மத்திய அரசு 1980களில் கொண்டு வந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை விளக்குக.

- கிராமப்புற குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு அவர்களுக்கு சிலசொத்துக்களை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இதன்படி மக்கள் வறுமையிலிருந்து வெளியே வர பசுக்கள் அல்லது ஆடுகள் வழங்கப்பட்டன.
- சிறிய கடைகள் வைக்கவோ வணிகத் தொடர்பான வியாபாரங்கள் செய்யவோ உதவிகள் வழங்கப்பட்டன.
- இத்திட்டத்தில் உதவியைப் பெறும் குடும்பத்தின் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு மானியங்களும் மாறுபட்டன..

.

4. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?

- வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணத்தை நிறுவன அடிப்படையிலான காரணி, தொழில்நுட்பம் சார்ந்தகாரணி என பிரிக்கலாம்.
- நிறுவனம் சார்ந்த காரணிகள் என்பது, நிலவுடைமை வர்க்கத்தை சேர்ந்தோருக்கும் விவசாயத் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தோருக்குமிடையே நிலவிய சமூக பொருளாதார சிக்கல்.
- தொழில்நுட்பக் காரணிகள் என்பது சிறந்த விதைகள், ரசாயன உரங்கள், டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரம், நீர்ப்பாசனவசதிகள் போன்றவற்றை பயன்படுத்தமை ஆகும்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



5. பொதுத்துறை நிறுவனங்களின் குறைந்த செயல்பாட்டிற்கான காரணிகள் யாவை?

- கட்டுமானப் பணிகளை முடிப்பதில் ஏற்படும் தாமதம் அதிக மூலதன முதலீட்டை ஏற்படுத்தின.
- நிர்வாகச் செலவுகள் அனைத்து நேரங்களிலும் கட்டுக்கடங்கி இருப்பதில்லை.
- பொதுத்துறை நிறுவனங்களில் தேவைக்கு அதிகமானோர் பணியமர்த்தப்பட்டனர்.
- அதிகமான தொழிலாளர்களால் நிறுவனங்களை இயக்குவதற்கான செலவு அதிகரித்தது.

## பாடம் - 10

1. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?

- இத்தாலியர்கள் தாங்கள் ரோமானிய மூதாதையர்களின் வழித் தோன்றல்கள் என்ற நம்பிக்கையைப் பாதுகாத்து வந்தனர்.
- தங்கள் பாரம்பரியம் குறித்து அவர்கள் பெருமை கொண்டார்கள்.
- இத்தாலியில் பெருமளவுக்கு சமயச்சார்பின்மை கலாச்சாரம் நடைமுறையில் இருந்தது.
- லத்தீன் மொழியை ரோமானிய மூதாதையர்கள் எழுதியது போன்று அவர்கள் எழுதக் கற்றுக் கொண்டனர்.

2. மறுமலர்ச்சி காலத்தில் இங்கிலாந்தில் ஏற்பட்ட இலக்கிய சாதனைகளை குறிப்பிடவும்.

- ஆங்கில மறுமலர்ச்சியில் எலிசபெத் காலம் பல அறிஞர்களை உருவாக்கியது.
- வில்லியம் ஷேக்ஸ்பியர், கிறிஸ்டோபர் மர்லோவ், பிரான்ஸிஸ் பேக்கன் ஆகியோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.
- டிடோ, தி குயீன் ஆஃப் கார்தேஜ், டம்பர்லெய்ன் தி கிரேட் போன்ற ஆகிய முக்கிய படைப்புகளை கிறிஸ்டோபர் மார்லோவ் உருவாக்கியுள்ளார்.
- ஒத்தெல்லோ, ஹாம்லெட், கிங்லியர், ரோமியோவும் ஜூலியட்டும் போன்ற முக்கிய படைப்புகளை வில்லியம் ஷேக்ஸ்பியர் உருவாக்கியுள்ளார்.

3. இத்தாலிய மற்றும் ஆங்கிலேய கடல் பயணிகளின் சாதனைகள் என்ன?

- இத்தாலிய கடற்பயணியான ஜான் கேபட் கனடாவை கண்டுபிடித்து அதனை ஆங்கிலேயக் காலனியாக மாற்றினார்.
- இத்தாலிய கடற்பயணியான ஜியோவனி டா வெர்ராசானோ பிரான்ஸ் நாட்டுக்காக நிலப்பகுதிகளைஆராய்ந்தார்.
- கிழக்கு கனடாவில் பிரான்ஸ் நாட்டுக்காக மாகாணங்களை இணைத்தார்.
- ஹென்றி ஹட்சன் என்ற ஆங்கிலேய கடற்பயணி வட அமெரிக்காவில் இருந்து பசிபிக் பெருங்கடல் பகுதிக்கு பாதைகாண முயன்றார்..

4. வர்த்தகப் புரட்சியின் எதிர்மறை விளைவுகள் என்ன?

- வர்த்தகப் புரட்சியின் முக்கிய எதிர்மறை விளைவாக அமைந்தது அடிமைத்தனம் மீண்டும் புத்துயிர் பெற்றதேஆகும்.
- வர்த்தகப் புரட்சியால் ஸ்பானிய, போர்த்துகீசிய மற்றும் ஆங்கிலேய காலனிகளில் சுரங்கம் மற்றும் தோட்டவிவசாயம் வளர்ச்சி கண்டது
- இதனையடுத்து அடிமைகளை திறமையற்ற தொழிலாளர்களாக ஆளெடுக்கும் நடவடிக்கைகள் தொடங்கின.
- அடிமை வர்த்தகம் மூலமாக 1 கோடியே10 லட்சத்துக்கும் அதிகமான ஆப்பிரிக்கர்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டனர்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

5. ஜெனோவாவில் பிராட்டஸ்டன்ட் இயக்கத்தை ஒருங்கிணைப்பதில் ஜான் கால்வின் ஆற்றிய பங்கைஆராய்க.

- கால்வின் ஒரு மிகப்பெரிய ஒருங்கிணைப்பாளர் அவர் ஜெனீவா நகரை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.
- கிறித்துவ சமய நிறுவனங்கள் என்ற புத்தகத்தில் தன் கருத்துக்களை தெரிவித்தார்.
- பைபிள் போதனையின் அடிப்படையில் கட்டுக்கோப்பான சமூகத்தை படைக்க முயன்றார்.
- கால்வீனியம் என்ற சமய பிரிவு அவரது வாழ்நாளிலேயே பிரபலம் அடைந்தது.

6. ஐரோப்பாவில் எதிர்சீர்திருத்த இயக்கத்துக்கு இயேசு சபையின் பங்களிப்பு பற்றி விவாதிக்கவும்.

- மக்களுக்கு கத்தோலிக்க சமயத்தைப் பயிற்றுவிக்க கல்வியை ஒரு சாதனமாக இந்த அமைப்பு பயன்படுத்தியது.
- கத்தோலிக்க சமயத்தை மேம்படுத்துவதற்காக அவர்கள் பல்வேறு கல்வி நிறுவனங்களைஅமைத்தனர்.
- இயேசு சங்கம் தேவாலயத்துக்கு உண்மையான சிறந்த தொண்டர்களை உருவாக்குவதில் வெற்றி பெற்றது.
- ஐரோப்பாவில் தேவாலயங்களின் தரத்தை உயர்த்த ஜெசூட்கள் உதவினார்கள்.

7. 1492இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.

- 1492 இல் கொலம்பஸ் பாலோஸ் துறைமுகத்திலிருந்து மூன்று சிறிய கப்பல்கள் மூலமாகப் பயணம் மேற்கொண்டார்.
- இரண்டு மாதங்கள் பயணத்துக்குப் பிறகு இந்தியா என்று அவரால் நம்பப்பட்ட நிலப்பகுதியை அவர் வந்தடைந்தார்.
- ஆனால் உண்மையில் அது அமெரிக்கா எனும் ஒரு புதிய கண்டமாகும்.
- தான் கண்டுபிடித்த நிலப்பகுதி இந்தியா என்று அவர் நம்பியதால் அவர்கள் இந்தியர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

8. போர்த்துகீசிய கடல்பயணி பெட்ரோ காப்ரல் இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பிடுக.

- வாஸ்கோடகாமாசென்ற வழியைப் பின்பற்றி இந்தியாவுக்குப் பயணித்த காப்ரல் கோழிக்கோட்டை சென்றடைந்தார்.
- அதன் ஆட்சியாளர் சாமரின் ஒரு கோட்டையைக் கட்டி வர்த்தகம் செய்ய காப்ரலை அனுமதித்தார்.
- பின்னர் தெற்கில் உள்ள இந்திய துறைமுக நகரான கொச்சினுக்கு அவர் புறப்பட்டுச் சென்றார்.
- கண்ணனூரில் ஒரு துறைமுகத்தை நிறுவிய அவர் நறுமணப் பொருட்கள் நிரப்பப்பட்ட ஆறு கப்பல்களுடன் போர்த்துகலுக்கு பயணம் மேற்கொண்டார்.

## பாடம் - 11

1. 1783இல் கையெழுத்திடப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் முக்கியச் சரத்துக்களை விவாதிக்கவும்.

- குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்தையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவானதையும், இங்கிலாந்து அங்கீகரித்தது.
- மேற்கிந்திய தீவுகள், இந்தியா, ஆப்பிரிக்கா ஆகியவற்றில் இங்கிலாந்திற்குச் சொந்தமாயிருந்த சில பகுதிகளை பிரான்ஸ் பெற்றது.
- ஸ்பெயின் இங்கிலாந்திடமிருந்து புளோரிடாவைப் பெற்றது.
- ஹாலந்தும் இங்கிலாந்தும் போருக்கு முன்பிருந்த நிலையை அப்படியே பின்பற்றின .

2. அமெரிக்கபுரட்சியின் முக்கியத்துவத்தைபகுப்பாய்வு செய்க.

- மக்களாட்சி, குடியரசு போன்ற கோட்பாடுகள் மேலும் விரிவாகப் பரவலாயின.
- அரசியல், சமூக மாற்றங்கள் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் அடிப்படையாக கொண்டிருந்தன.
- கல்வியின் முக்கியத்துவம் சிறப்பிடத்தைப் பெற்றது.
- கூட்டாட்சிக் கோட்பாடு பரவலானது.

3. " 1789ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே கருத்துக்களின் களத்தில் ஒரு புரட்சி நடந்தது" – விளக்குக.

- பிரெஞ்சுப் புரட்சி வெடிப்பதற்காக சமூகத்தைதயார் செய்ததில் அறிவார்ந்த மக்கள் முக்கியப் பங்கு வகித்தனர்.
- வால்டேர், ரூசோ ஆகியோரின் எழுத்துக்கள் புரட்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தன.
- மாண்டெஸ்கியூ அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை எதிர்த்தார்.
- ரூஸோ ஆள்வோர்க்கும் ஆளப்படுவோருக்குமான உறவு ஓர் ஒப்பந்தத்தால் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென வாதிட்டார்.

4. "செப்டம்பர் படுகொலைகள்" எதனால் ஏற்பட்டது?

- முடியாட்சி தூக்கி எறியப்பட்ட பின்னர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் எதிர்புரட்சியாளர்கள் தீட்டிய சதியொன்றில் இணையப் போவதாக மக்கள் நம்பினர்.
- இதன் விளைவாக மக்கள் கூட்டம் சிறைச்சாலைகளைத் தாக்கின.
- அரச குடும்ப ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டனர்.
- செப்டம்பர் படுகொலைகள் என அழைக்கப்பட்ட இந்நிகழ்வில் மொத்தம் 1,200 கைதிகள் கொல்லப்பட்டனர்.

5. தென் அமெரிக்காவில் முதன்முதலாகப் பிரேசிலில் அரசியலமைப்பு சார்ந்தமுடியாட்சி அரசு அமைந்ததற்கான சூழ்நிலைகளைஎடுத்துரைக்கவும்.

- 1808 இல் நெப்போலியன் போர்த்துகலின் மீது படையெடுத்த போது போர்த்துகலின் அரசர் டாம் ஜோவோ தனது காலனியான பிரேசிலுக்குத் தப்பியோடினார்.
- ஆனால் டாம் ஜோவோ அதிகாரத்திற்கு எதிராக பிரேசிலில் சவால்கள் தோன் றியது.
- எனவே காலனியான பிரேசிலை தனது மகன் டாம் பெட்ரோவின் கைகளில் ஒப்படைத்து வி ட்டு போர்த்துகல் சென்று விட முடிவு செய்தார்.
- 1822இல் பிரேசில் போர்த்துகல்லிடமிருந்து விடுதலை பெற்றது.
- தென்அமெரிக்கா வில் அரசியல் அமைப்பிற்கு கட்டுப்பட்ட முதல் முடியரசாக அது மாறியது.

6. தொழிற்புரட்சியின் இரண்டாம் கட்டத்தில் ஜெர்மனியில் நடந்தது என்ன?

- பத்தொன்பதாம் நூற்றாண்டி ன் இறுதியில் ஜெர்மனி, மிகப் பெருமளவில் தொழில்மயமான நாடாக உருவானது.
- தொழி ற்புரட்சியி ன் தாயகமான இங்கிலாந்தை மிஞ்சி அமெரிக்காவின் போட்டியாளராகத் தன்னை நிலை நாட்டியது.
- டெய்ம்லர், பென்ஸ்ஆகிய இரு மோட்டார் வாகனங்கள் ஜெர்மனியிலும், உலகத்திலும் பிரபலமான அடையாளச் சின்னங்களாயின.
- ஜெர்மனி இரும்பு எஃகுத் தொழிலில் தனது முத்திரையைப் பதித்தது.

## பாடம் - 12

1. பிரான்ஸ்தும்மினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் – தெளிவுபடுத்துக.

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் நடந்தபல முன்னேற்ற நிகழ்வுகள் ஐரோப்பிய கண்டம் முழுதும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.
- ஐரோப்பாவில் எழுந்த மக்களாட்சி உணர்வையும், தேசியவாதப் போக்கையும் ஒடுக்க முனைந்தவர் மெட்டர்னிக் ஆவார்.
- அவர் கூற்றானது: "பிரான்ஸ் தும்மினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் பிடிக்கும்.'
- அதன்படி பிரான்சில் மும்முறை புரட்சி வெடித்த ஆண்டுகளான 1789, 1830, மற்றும் 1848களில் பிரான்ஸ் தும்மியதாகவே கருத்தில் கொள்ள வேண்டும்.

M.VENKATESAN. M.A., M.PHIL., B.ED., PG ASST (HISTORY ) GHSS AYAPPAKKAM

2. "சோஷலிசகருத்துக்கள் உருப்பெற தொழில்புரட்சியே முகாந்திரம் அமைத்தது" – ஆதாரப் பின்புலத்தோடு உறுதிப்படுத்துக.

- ஆரம்பகட்டத்தில் ஒருங்கிணைக்கப்படாமலிருந்த தொழிலாளர்கள் தங்கள் முதலாளிகளின் கருணையை முழுதும் நம்பி வாழ்ந்தனர்.
- ஒருங்கிணைந்த அமைப்பு ஏற்படாத வரையில் நிரந்தரமான முன்னேற்றம் என்பது சாத்தியமில்லை என்று அவர்கள் விரைவிலேயே உணர்ந்தார்கள்.
- எனவே அவர்கள் தொழிற்சங்கங்களை ஏற்படுத்த விழைந்தனர்.
- இது சோஷலிசமாக வடிவம் கொண்டு நாடுகளைச் சாடவும், தொழிலாளர் நலன் காக்கவும் வழிகாட்டியது.

3. தனது தொழிற்சாலையில் பணியிலிருந்த ஊழியர்களின் முன்னேற்றத்திற்கு இராபர்ட் ஓவன் மேற்கொண்ட முன்னோடி தன்மையிலான நடவடிக்கைகளை மதிப்பிடுக.

- அவரது தொழிற்சாலையில் பத்து வயதிற்கு குறைந்த குழந்தைகளைப் பணியமர்த்த அவர் மறுத்தார்.
- காலப்போக்கில் அவர் தனியுடைமையையும், லாப நோக்கையும் விமர்சித்தார்.
- தொழில் மற்றும் வேளாண் உற்பத்தியை கூட்டாகச் செயல்படுத்தும் ஒரு கூட்டுறவு சமூகத்தை அவர் வலியுறுத்தினார்.
- இராபர்ட் ஓவன் ஒரு பெரும் கற்பனைவாத சோஷலிச கோட்பாட்டை உருவாக்கினார்.

4. பிரான்சில் 1830இல் நடந்த ஜூலைபுரட்சி ஐரோப்பாவின் பிறபகுதிகளை எவ்வாறெல்லாம் பாதித்ததென்பதை எடுத்தெழுதுக.

- ஐரோப்பாவின் பிற பகுதிகளில் கிளர்ச்சி தொடர்ந்து வெடித்தவாறே இருந்தது.
- புரட்சி நெதர்லாந்தில் வெற்றி பெற்றதையடு த்து , அங்கே பெல்ஜியம் பிரிக்கப்பட்டு தனி சுதந்திர நாடாக்கப்பட்டது.
- கிரேக்கர்கள் பெரும்சக்திகளின் ஆதரவைப் பெற்று துருக்கியரிடமிருந்து விடுதலை அடைந்தார்கள்.
- ஆனால் ரஷ்ய சார் மன்னருக்கு எதிரான போலந்து நாட்டினரின் போராட்டம் தோல்வியை அடைந்தது.

5. இங்கிலாந்தோடும், பிரான்சோடும் முழுமையான தேசங்களாக இத்தாலியும், ஜெர்மனியும் ஏன் உருப்பெற்று வெளிப்பட முடியவில்லை என்பதற்கான காரணங்களைப் பட்டியலிடுக.

- புனித ரோமானியப் பேரரசு என்பது பெயரளவில் மட்டுமே பேரரசாக விளங்கியது.
- ஜெர்மனி முந்நூறுலிருந்து நானூறு வரையான தனிநாடுகளைக் கொண்டதாக விளங்கியது.
- மன்னர்களே இந்நாடுகளை நிலப்பிரபுத்துவத்திலிருந்து காப்பாற் றி தேசங்களாக வடிவம் கொடுத்தார்கள்.
- தேசிய அரசுகளாக ஏற்றம் பெறத் தேவையான சூழல் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் இத்தாலியிலும் ஜெர்மனியிலும் ஏற்பட்ட து.

6. பாரிஸ்கம்யூனை நோக்கி வழிநடத்திச் சென்ற சம்பவங்களின் அடிச்சுவட்டை ஆராய்க.

- தேசிய மன்றத்தில் பெரும்பான்மையாக மன்னராட்சி ஆதரவாளர்கள் வீற்றிருந்தமை பாரிஸ்நகர மக்கள் மனதைக் கசப்படையச் செய்தது.
- மேலும் தலைமைக்கு தையர்ஸ்என்ற 71 வயது மனிதரை நியமித்தமை குடியரசின் மீது மக்களை ஏமாற்றங் கொள்ளச் செய்தது.
- பாரிஸ் மீண்டும் ஆயுதமேந்தியது.
- முறையான இராணுவம் பிரஷ்யாவுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் கலைத்து விடப்பட்டமையால் பாரிசின் மக்களே ஆயுதமேந்தலானார்கள்.

7. ஏழைமக்களும் உழைக்கும் வர்க்கமும் ஏற்றம்பெற பாரிஸ் கம்யூன் எடுத்த நடவடிக்கைகளை விவாதத்திற்கு உட்படுத்துக.

- அடுமனையில் இரவுப் பணியைத் தடை செய்தது.
- தொழில் பட்டறைகளோ, தொழிற்சாலைகளோ உரிமையாளரால் மூடப்பட்டிருந்தால் அதனைத் தொழிலாளர்களைக் கொண்டு திறந்தது.

- விதவைகளுக்கு ஓய்வூதியம் வழங்கவும் குழந்தைகளுக்குக் கட்டணமில்லாக் கல்வியைக் கொடுத்தது.
- முற்றுகை காலத்தில் வாங்கப்பட்ட கடன்களை வசூலிக்கவிடாமல் தடுத்தது.

8. பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் நீண்டகால பெருமந்தகாலத்தில் உருவான தொழிலாளர் வர்க்கப் போராட்டங்கள் பற்றி குறிப்பு வரைக.

- பிரிட்டனில் ஹோம்ஸ்டெட் எஃகு பட்டறையில் நடந்த போராட்டம் துப்பாக்கிச் சண்டை வரை போனது.
- அமெரிக்க இருப்புப்பாதை தொழிற்சங்கம் பங்கு பெற்ற புல்மேன் வேலை நிறுத்தப் போராட்டம் நிர்வாகத்தால் ஒடுக்கப்பட்டது.
- பிரிட்டனில் 'மகளிர் தீப்பெட்டி தொழிலாளர்' போராட்டம் வெற்றியடைந்தது.
- லண்டனின் துறைமுகத்தில் கப்பல் செப்பனிடும் பட்டறையில் தொழிலாளர் போராட்டம் வெடித்தது.

## பாடம் - 13

1. முதல் மொராக்கோ சிக்கல் எவ்வாறு நிகழ்ந்தது?

- இங்கிலாந்தோடு ஏற்பட்ட புரிதலை முன்னிறுத்தி பிரான்ஸ் மொராக்கோவில் தனது திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுக்க நினைத்தது.
- ஒரு பிரெஞ்சு தூதுக்குழு மொராக்கோவின் ஃபெஸ் நகரை வந்தடைந்து.
- அதை பிரான்சின் பாதுகாப்பிற்குட்பட்ட பகுதியாகவே கருதி செயல்பட்டது.
- இதற்கு ஜெர்மனி தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. எனவே இந்தசர்ச்சையை ஐரோப்பிய மாநாடு ஒன்றனுக்கு எடுத்துச் செல்ல பிரான்ஸ் உடன்பட்டது.

2. அகழிப்போர் எவ்வாறு நடத்தப்பட்டது?

- முதல் உலகப்போர், வீரர்களைத் தங்கள் உயிரை பாதுகாக்கும் பொருட்டு நிலத்தைத் தோண்டி அதனுள் அடைக்கலம் தேடவைத்தது.
- அகழி முறையானது இரண்டு முதல் நான்கு அகழிகள் ஒன்றுக்கொன்று இணையாக செல்வதேயாகும்.
- அகழிகளை நேர்கோட்டில் இல்லாமல் வளைந்து நெளிந்து வடிவமைத்திருந்தனர்
- இதன்படி அகழியை எதிரிகள் சுட்டாலும் சில அடிகளுக்கு மேல் தோட்டா செல்ல முடியாது.

3. மிக ஆபத்தான U-படகுகள் மற்றும் Q-கப்பல்கள் பற்றி நீவீர் அறிந்தது என்ன?

- முதல் உலகப்போரின் காலத்தில் ஜெர்மனி கொண்டிருந்த மிக அச்சுறுத்தும் ஆயுதம் U-படகுகளாகும்.
- பிரிட்டனின் கப்பல்கள் அனைத்தையும் மூழ்கடிக்கும் உத்தியை ஜெர்மானியர்கள் கடைபிடித்தார்கள்.
- Q-கப்பல்கள் பிரிட்டனின் ஜெர்மனிக்கான பதிலடியாகும்.
- பிரிட்டன் இக்கப்பல்களின் வாயிலாக ஜெர்மனியின் தாக்குதலைத் தூண்டச் செய்து பின்னர் பதிலடி கொடுக்கும் உத்தியைக் கையாண்டது

4. முதல் உலகப்போரில் அமெரிக்கா நுழைந்தபிறகு நிகழ்ந்தவற்றை வரிசைக்கிரமமாக எடுத்துக் கூறுக.

- அமெரிக்காப் போரில் இறங்கியது நேசநாடுகளின் வெற்றியை முன்பே உறுதி செய்தது போலாயிற்று.
- முதலில் சரணடைய முன் வந்த நாடு பல்கேரியாவாகும்.
- துருக்கியர்கள் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட விரும்பினர்.
- ஜெர்மனி தனித்த நிலையில் போரை முன்னெடுத்துச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டது

5. ரஷ்யப்புரட்சி அந்நாட்டிற்கு வெளியில் ஏற்படுத்திய பாதிப்புகளை விளக்குக.

- புரட்சி உலகம் முழுவதிலும் வாழும் மக்களின் நினைவுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- பல்வேறு நாடுகளிலும் பொதுவுடைமை கட்சி உருவாக்கப்பட்டது
- சோவியத் ஐக்கியம் காலனி ஆட்சிக்குட்பட்ட நாடுகளை தங்களின் விடுதலைக்காகப் போராட அறிவுறுத்தி தேவையான உதவிகளைச் செய்தது.
- நிலவுடைமை சீர்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம் போன்றவை உலகம் முழுவதும் விவாதப் பொருளானது.

6. ரஷ்யாவில் 1905இல் நிகழ்ந்த புரட்சியின் காரணங்களையும், போக்கையும் ஆராய்க.

- காலனிய விரிவாக்கப் போட்டியில் ரஷ்யா மஞ்சூரியாவிற்குள் நுழையும் பொருட்டு 1904இல் ஜப்பானை தூண்டியது போராக சென்று முடிந்தது.
- இப்போரில் ரஷ்யாவின் தோல்வி அந்நாட்டினுள் வேலைநிறுத்தங்களையும் கலவரங்களையும் உருவாக்கியது. சார் மன்னர் மீதான எதிர்ப்பு வலுத்தது.
- நிக்கோலஸ் ஒரு அரசியல் சாசனத்தை வழங்கவும் டூமா என்ற பாராளுமன்றத்தை உருவாக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டார்.
- இடதுசாரி கட்சியினர் செயின்ட்பீட்டர்ஸ்பர்க்நகரில் தொழிலாளர் பிரதிநிதி அவையை உருவாக்கினர்.

7. பன்னாட்டு சங்கம் வெற்றிகரமாக முடித்து வைத்த சிக்கல்கள் பற்றி குறிப்பு வரைக.

- ஆலந்து தீவுகளின் இறையாண்மை மீது ஸ்வீடனும், பின்லாந்தும் உரிமை கோரி சர்ச்சையைக்கிளப்பின.
- பன்னாட்டு சங்கம் அத்தீவு பின்லாந்தையே சென்று சேர நெறி ஏற்படுத்தியது.
- மேல்புற சைலேசியாவை முன்னிறுத்தி போலந்தும், ஜெர்மனியும் சர்ச்சையைக் கிளப்பிய போது சங்கம் அதில் தலையிட்டு வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.
- கிரீஸ் பல்கேரியா மீது படையெடுத்த போது சங்கம் போர் நிறுத்த ஆணையை வெளியிட்டு ஆக்கிரமிப்பை நிறுத்தியது.

Padasalai

8. பொருளாதார பெருமந்தம் எவ்வாறு அரசியல் தளத்தில் தாக்கத்தை வெளிப்படுத்தியது என்பதனை விளக்குக.

- இங்கிலாந்தில் 1931இல் நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி தோற்கடிக்கப்பட்டது.
- அமெரிக்காவில் குடியரசு கட்சி மந்தத்திற்குப் பின் தொடர்ச்சியாக இருபது ஆண்டுகளுக்கு ஆட்சியமைக்க முடியாமல் போனது.
- பாசிச கட்சிகள் ஜெர்மனியிலும், இத்தாலியிலும் அரசு அதிகாரத்தைத் தங்கள் வசமாக்கிக் கொண்டன.
- அர்ஜென்டினா, பிரேசில், சிலி ஆகிய நாடுகளிலும் அரசு மாற்றம் நிகழ்ந்தது.

## பாடம் - 14

1. ஸ்டாலின்கிராடை ஆக்கிரமிப்பதற்கு ஹிட்லர் ஏன் அதிக அக்கறை கொண்டார்? அது அவரின் "வாட்டர்லூவாக" மாறிப் போனது எவ்வாறு என்பதனை சுட்டுக.

- மிகப்பெரும் தொழில் நகரான ஸ்டாலின்கிராட் வெற்றிக்கனியாக தங்களுக்கு கிடைக்கும் என்று ஹிட்லர் எண்ணியிருந்தார்.
- எண்ணெய் வளம் மிக்க காகசஸ் பகுதியின் மீதும் அவரது கண்கள் படர்ந்திருந்தன.
- ஜோசப் ஸ்டாலினின் பெயர் கொண்ட நகரை ஆக்கிரமிப்பது தனது பெருமையை உயர்த்தும் என்று ஹிட்லர் கருதினார்.
- ஆனால் ஜெர்மானிய இராணுவத்தால் நீண்டகாலத்திற்கு ஸ்டாலின்கிராடை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந்த பிறகும், ஹிட்லர் பின்வாங்க மறுத்தார்.

M.VENKATESAN. M.A., M.PHIL., B.ED., PG ASST (HISTORY ) GHSS AYAPPAKKAM

2. நாடுகள் ஜெர்மனி மீது குண்டுவீசி தாக்கியது பயங்கர தாக்குதல் பிரச்சாரங்களுக்கு அடையாளமாக அமைந்தது - விளக்குக.

- ஜெர்மனியின் ட்ரெஸ்டன் நகரை முற்றிலுமாக அழித்தது.
- இத்தாக்குதல்கள் ஜெர்மனிக்கு எதிரான 'திகிலூட்டும் குண்டு வீச்சுக்களாகவே' அடையாளப்படுத்தப்பட்டன.
- இச்சமயத்தில் 6,00,000 ஜெர்மன் குடிமக்கள் கொல்லப்பட்டார்கள்.
- படிப்படியாக ஜெர்மானியப் படைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன.

3. ஒரு ஏகாதிபத்திய சக்தியாக ஜப்பானின் திட்டங்கள் யாவை?

- ஜெர்மனியின் அணுகுமுறையை கிழக்கு ஆசியாவில் ஜப்பான் பின்பற்றியது.
- தைவானையும், கொரியாவையும் காலனிகளாக உருவாக்கிக் கொண்டதோடு மஞ்சூரியாவையும் கட்டுப்படுத்தியது.
- அதன் பேராசை நிறைந்த பார்வை டச்சு கிழக்கிந்தியப் பகுதிகள் மீதும், மலேயா, சிங்கப்பூர் போன்ற பகுதிகள் மீது விழுந்தது.
- இப்பேராசை இந்தோ-சீனாவில் அமையப்பெற்ற பிரெஞ்சு காலனிகள் மீதும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் வசமிருந்த பிலிப்பைன்ஸ் பகுதி மீதும் விழுந்தது.

4. ஹக் கிளர்ச்சியின் முக்கியத்துவம் யாது?

- பிலிப்பைன்சின் பொதுவுடைமைவாத விவசாயிகள் ஹக் என்றழைக்கப்பட்டனர்
- அரசின் படைகளால் ஹக்குகளின் பகுதிகள் தாக்குதலுக்கு உள்ளானதால் அவர்கள் கொரில்லாபோர் முறையை கையாண்ட னர்.
- ஹக்குகள் அதை தற்காப்பு அடிப்படையில் மட்டுமே எதிர் கொண்டார்கள்.
- பிலிப்பைன்ஸ் அரசு அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதரவைப் பெற்று "ஹக் கிளர்ச்சியை" ஒடுக்கியது.

5. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.

- பெரும் சக்தி என்ற நிலையில் இருந்து ஜெர்மனி வீழ்ந்தது.
- ஐரோப்பா தனது அந்தஸ்தையும், கௌரவத்தையும் இழந்தது.
- பொருளாதாரம் சரிந்து நொறுங்கியது.
- உலகின் இரு ஆதிக்க சக்திகளாக அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத் ரஷ்யாவும் உருவானது.
- போரின் முக்கியத்துவம் வாய்ந்த விளைவு காலனிய நாடுகளில் நிகழ்ந்த மாற்றமேயாகும்.

6. சீனாவில் நிகழ்ந்த பாக்ஸர் கிளர்ச்சி பற்றிய குறிப்புகளைத் தருக.

- பாக்ஸர்கள் பெரும்பான்மையானோர் ஷான்டுங் மாகாணத்தை பிறப்பிடமாக கொண்ட விவசாயிகளேயாவர்.
- பாக்ஸர்களின் முக்கிய குறிக்கோள் மஞ்சு வம்சத்தை முடிவிற்குக் கொண்டு வருவதாகும்.
- முறைகேடாக சலுகைகளைப் பெற்று வந்த மேற்கத்தியர்களை சீனாவைவிட்டு அப்புறப்படுத்த முயன்றனர்.
- பாக்ஸர்கள் தேவாலயங்களையும், அயல்நாட்டினரின் வீடுகளையும் தீக்கிரையாக்கினர்.

7. சீன தேசிய அரசியலில் கோமின்டாங் கட்சியின் பங்கை விவாதத்திற்கு உட்படுத்துக.

- சன் யாட்-சென் டோக்கியோ நகரில் உருவாக்கிய அரசியல் கட்சி கோமின்டாங் கட்சி என்று ஆனது.
- இவ்வமைப்பின் உந்து சக்தியாக விளங்கிய சன் யாட்-சென் ஒரு குடியரசை விரும்பினார்.
- சன் யாட்-சென் மறைந்தபின் கோமின்டாங் கொள்கைகள் பொதுவுடைமை சிந்தனையை உள்ளடக்கியதாக இல்லை.
- கோமின்டாங் நிலக்கிழார்கள் மற்றும் முதலாளிகளின் ஆர்வங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருந்தது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



8. இந்தோனேஷிய விடுதலைக்கு சுகர்னோ ஆற்றியப் பங்கை மதிப்பிடுக.

- சுகர்னோ இந்தோனேஷிய தேசிய கட்சியை நிறுவினார்.
- இந்த கட்சி, மேற்கத்திய வாழ்க்கை முறையைக் கொண்டிருந்த மதச்சார்பற்ற வர்க்கத்தினரால் ஆதரிக்கப்பட்டது.
- ஆனால் 1931ஆம் சுகர்னோ கைது செய்யப்பட்டு அவரது கட்சியும் கலைக்கப்பட்டது.
- ஜப்பானின் ஆதரவுடன் டச்சுக்களை வெளியேற்றி இந்தோனேசியாவின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தினார்.

## பாடம் - 15

1. அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்பட்ட நேட்டோவுக்கான பதில் நடவடிக்கையே சோவியத் ரஷ்யாவின் வார்சா உடன்படிக்கை விளக்குக.

- மேற்கு ஜெர்மனி நேட்டோ அமைப்பில் உறுப்பினரானதால் சோவியத் ரஷ்யா எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டது.
- சோவியத் யூனியனும் அதன் நட்பு நாடுகளும் பரஸ்பர நட்பு, மற்றும் பரஸ்பர உதவி எனும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன.
- போலந்தின் தலைநகரான வார்சாவில் இது கையெழுத்திடப்பட்டதால் இது வார்சா உடன்படிக்கை எனப் பெயரிடப்பட்டது.
- உறுப்பு நாடுகளில் ஏதேனும் ஒரு நாடு வெளிநாட்டுப் படைகளால் தாக்கப்படுமேயானால் ஏனைய உறுப்பு நாடுகள் தாக்கப்பட்ட நாட்டைப் பாதுகாக்க உதவிக்கு வரவேண்டுமென இவ்வுடன்படிக்கை கூறியது.

Padasalai

2. ஐ.நாசபையின் சாசனம் முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பல்வேறு கட்டங்கள் குறித்து எழுதுக.

- டம்பார்டன் ஓக்ஸ் எனும் மாளிகையில் சீனா, சோவியத் யூனியன், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி உலக அமைப்புக்கான ஓர் செயல்திட்டத்தைஉருவாக்கினர்.
- மாஸ்கோ பிரகடனம் பன்னாட்டு சங்கத்திற்குப் பதிலாகப் பன்னாட்டு அளவில் ஒரு அமைப்பு உருவாக்கப்படவேண்டியதன் அவசியத்தைஅங்கீகரித்தது.
- யால்டாமாநாட்டில் பாதுகாப்பு சபையில் வாக்களிக்கும்முறை குறித்து பற்றிய கேள்விகள் எழுப்பப்பட்டன.
- சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் இவை தொடர்பான விவாதங்களும் பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் இறுதி செய்யப்பட்டது.

3. நேட்டோ உருவாக்கப்பட்டதின் பின்னணியைக் கண்டறியவும்.

- அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டிருந்தாலும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் தாங்கள் பாதுகாப்பாக இல்லை என்றே உணர்ந்தன.
- செக்கோஸ்லோவாக்கியாவில் கம்யூனிஸ்டுகள் பெற்ற வெற்றி அவர்களின் அச்சத்தைஅதிகரித்தது.
- இதனைத் தொடர்ந்து மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒரு கூட்டுப்பாதுகாப்புத் தீர்வை ஏற்படுத்திக் கொள்வதில் விருப்பம் கொண்டன.
- இப்பின்னணியில்தான் நேட்டோ அமைப்பு உருவாக்கப்பட்டது
- இதன் உறுப்புநாடுகள் அனைத்தும் தங்களில் யாராவது ஒருவர் தாக்கப்பட்டால் அத்தாக்குதல் அனைவர் மேலும் தொடுக்கப்பட்ட தாக்குதலாகக் கருதுவதற்கு ஒத்துக்கொண்டன.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

4. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக

- 1956 இல் எகிப்தின் குடியரசுத்தலைவராக இருந்தகமால் அப்துல் நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார்.
- இக்கால்வாய் ஆங்கிலோ – பிரெஞ்சு சூயஸ் கால்வாய்கழகம் எனும் தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமாக இருந்தது.
- இதன் விளைவாக இஸ்ரேலிய, பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் படைகள் சினாய் தீபகற்பம் மீது படையெடுத்தன.
- ஐ.நா.சபையின் படைகள் இஸ்ரேலிய, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப்படைகளை 1957இல் மார்ச் மாதத்தில் வெளியேற்றின.

5. நேட்டோவைப் போல ஏன் சீட்டோ (SEATO) பிரபலமடையவில்லை?

- சீட்டோ (SEATO) எனும் இவ்வமைப்பு ஆசிய பசிபிக்பிராந்தியத்தில் நேட்டோவின் பிரதியாக அமைந்ததாகும்.
- ஆனால் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய இரண்டு தென்கிழக்கு ஆசிய நாடுகள் மட்டுமே இதில் உறுப்பினராக சேர்ந்தன .
- ஏனைய நாடுகள் இவ்வுடன்படிக்கையில் பங்கேற்கமறுத்துவிட்டன.
- சீட்டோ ஒரு ஆலோசனை மன்றமாக மட்டுமே செயல்பட்டது.
- உள்நாட்டில் ஏற்படும் ஆபத்துக்களைப் பொறுத்தமட்டிலும் சம்பந்தப்பட்ட நாடுகளே அவற்றை எதிர்கொள்ள வேண்டும்.

## 5 - மதிப்பெண்கள் பாடம் - 9

1. ஊரக மறுசீரமைப்பு தொடர்பாக இந்திய அரசு பின்பற்றிய நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்துக.

- ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP) கிராமப்புற ஏழைகளின் சுய வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கான திட்டமாக மறுசீரமைக்கப்பட்டது.
- ஒவ்வொரு ஆண்டும் 100 நாட்களுக்கு ஊதியத்துடன் கூடிய வேலையைக் கொடுப்பதன் மூலமே இதை வெற்றிகரமாகச் செய்தது.
- ஒவ்வொரு வருடமும் மூன்று மாதங்களுக்கு வேளாண் பணிகள் இல்லாத காலங்களில் பிற வேலைகள் வழங்கப்பட்டன.
- இதன்படி கிராமப்புறங்களில் சாலைகள், கால்வாய்கள், சிறிய நீர்ப்பாசன வேலைகள், அமைத்தல் போன்ற பணிகள் வழங்கப்பட்டன.
- இப்பணியில் ஒப்பந்ததாரர்களை ஈடுபடுத்தக்கூடாது.
- வேலை செய்வோரில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்களாக இருத்தல் வேண்டும்.
- ஆண்கள் பெண்கள் இருவருக்கும் ஒரேமாதிரியானஊதியம் வழங்கப்படவேண்டும்.
- மக்கள் நலத்திட்டங்களைமுறையாக நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- விவசாயத் தொழிலாளர்கள் நகரங்களுக்குக் குடிபெயர்வது இதனால் குறைக்கப்பட்டது.

2. நிலச் சீர்திருத்தங்கள் அவற்றின் நோக்கங்களில் தோல்வியடைந்தது ஏன் என்பதை விளக்குக.

- 1972 வரை ஒரு 'நிலஉரிமையாளர்' எவ்வளவு நிலங்களைச் சொந்தமாக வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.
- ஆனால் 1972க்குப் பின்னர் அடிப்படை அலகானது 'குடும்பம்' என மாற்றப்பட்டது.
- இதனால் நிலஉரிமையாளர் தனது குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்டஅளவு நிலங்களுக்கு உரிமையுடையவர்கள் என உரிமை கோர முடிந்தது.
- நிலங்களின் அளவு நிலஉச்சவரம்பு நிர்ணயம் செய்த நிலத்தின் அளவை விட மிகக் குறைவாகவே இருந்தது.
- நிலத்தின் தரம் ஒரே மாதிரியாக இல்லாததால் நிலஉச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நிலங்களின் அளவை நிர்ணயம் செய்வது சிக்கல்கள் நிறைந்த பணியாக இருந்தது.

- நீர்ப்பாசன நிலங்கள், மானாவரி நிலங்கள், ஒருபோக நிலங்கள் மற்றும் இருபோக நிலங்கள் ஆகியனவற்றை வேறுபடுத்திப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.
- குத்தகை சீர்திருத்தச் சட்டங்கள் அறிவிக்கப்பட்டபோது, பெரும்பாலான நிலவுடைமையாளர்கள் நிலங்களைத் திரும்பப் பெற்று 'சொந்தமாக விவசாயம்' செய்வதாக கூறினர்.
- குத்தகைதாரர்கள் தங்கள் நிலங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களே என்றும் கூறினர்.
- ஒரு முழுமையான நடைமுறைப்படுத்தக் கூடிய நிலஉச்சவரம்புத் திட்டம் இல்லாத சூழலில் குத்தகை சீர்திருத்தங்கள் பயனற்றுப் போயின.

3. சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.

- இந்தியாவில் 1951இல் 18.3 விழுக்காட்டிலிருந்த எழுத்தறிவு நிலை 2011இல் 74 விழுக்காடாக உயர்ந்துள்ளது.
- ஆண்களில் 82 விழுக்காட்டினரும் பெண்களில் 65 விழுக்காட்டினரும் எழுத்தறிவு பெற்றுள்ளனர்.
- தொடக்கக்கல்வி முதல் உயர்நிலைப் பள்ளி வரையிலான பள்ளிகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்தது.
- 2014-15இல் நாட்டில் 12.72 லட்சம் தொடக்கப் பள்ளிகளும் 2.45 லட்சம் இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும், 38,498 கல்லூரிகளும் செயல்பட்டன.
- 43 மத்தியப் பல்கலைக் கழகங்களும், 316 மாநிலப் பல்கலைக்கழகங்களும் 122 நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களும் 181 மாநில தனியார் பல்கலைக்கழகங்களும் செயல்பட்டன.
- நகர மற்றும் கிராமப்புறங்களில் இடைநிற்கும் குழந்தைகள் பெரும்பாலும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தோராகவே இருந்தனர்.
- பின்தங்கிய மாநிலங்களிலும், பகுதிகளிலும் பள்ளிக்கல்வியின் நிலை மோசமாகவே இருந்தது.
- இடைநிற்றல் பிரச்சனையை தீர்க்க அரசாங்கத்தினால், அனைவருக்கும் கல்வித்திட்டம், அனைவருக்கும் இடைநிலைக்கல்வித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டம் போன்றவை ஏற்படுத்தப்பட்டன.

4. முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.

- முதலாவது ஐந்தாண்டு திட்டம் (1951-56) வேளாண்மையை வளர்ப்பதிலும், வேளாண் உற்பத்தியிலும் கவனம் செலுத்தியது.
- மொத்த முதலீட்டில் 31 விழுக்காடுகள் வேளாண்மைக்கும் நீர்பாசனத்திற்கும் ஒதுக்கப்பட்டது.
- இதற்குப் பின்னர் தொழில் துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.
- மொத்த முதலீட்டில் வேளாண்மைக்கான பங்கு 20 விழுக்காட்டிற்கும் 24 விழுக்காட்டிற்கும் இடையே இருந்தது.
- இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் (1956-61) பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கு கனரகத் தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியது.
- முதலாவது திட்டத்தில் 6 விழுக்காடாக இருந்த தொழில் துறையின் பங்கு இரண்டாவது திட்டத்திற்குப் பின்னர் 24 விழுக்காடாக உயர்ந்தது.
- முதலிரண்டு திட்டங்களும் ஓரளவிற்கு மிதமான 4 விழுக்காடு வளர்ச்சியை இலக்காகக் கொண்டிருந்தன.
- இதைப் பொருளாதார நிபுணர்கள் "இந்து வளர்ச்சி விகிதம்" எனஅழைத்தனர்.
- இந்தவளர்ச்சி விகிதங்கள் அடையப்பட்டதால் அவை வெற்றி பெற்ற திட்டங்களாகக் கருதப்பட்டன

5. இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.

- கணிதம் மற்றும் அறிவியல் ஆகிய துறைகளில் ஆய்வுகளை ஊக்குவிப்பதற்காக டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டது.

- புனே தேசிய வேதியியல் ஆய்வகம், புதுதில்லி தேசிய இயற்பியல் ஆய்வகம் ஆகியவை நாடு விடுதலை பெற்ற காலத்தில் முதன் முதலாக அமைக்கப்பட்டவை ஆகும்.
- அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் எனும் ஒரு குடையின் கீழ் பெரும்பாலான ஆய்வு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.
- இவ்வமைப்பு இயந்திரங்கள், மருந்துகள் விமானங்கள் ஆகியவை குறித்த மேம்பட்ட ஆய்வினை முன்னெடுக்கிறது.
- அணுசக்தி ஆணையமானது அணு அறிவியலின் வளர்ச்சிக்கு மையமாகத் திகழ்கிறது.
- வேளாண்மை துறையில் நடைபெறும் ஆய்வுகளை இந்திய வேளாண் ஆய்வுக்கழகம் ஒருங்கிணைக்கிறது.
- இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் பொறியியலின் வெவ்வேறு பிரிவுகளுக்காக நிறுவப் பெற்ற சிறப்பு நிறுவனங்களாகும்.
- முதல் IIT கரக்பூரில் நிறுவப்பெற்றது. அதனைத் தொடர்ந்து டெல்லி, பம்பாய், கான்பூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் IIT உருவாக்கப்பட்டன.

## பாடம் - 10

1. இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும்.

- 13 மற்றும் 14 ஆம் நூற்றாண்டுகளிலேயே தாந்தே, பெட்ரார்க் என்ற இரண்டு பெரும் இத்தாலிய மொழி கவிஞர்களை பிளாரன்ஸ் உருவாக்கியிருந்தது.
- இடைக்கால கலாச்சாரத்தின் சுருக்கமாக தாந்தேயின் தெய்வீக இன்பியல் திகழ்கிறது.
- மனிதர்களின் அன்பு, நாட்டுப்பற்று, இயற்கை மீதான ஆர்வம் என பல கருப்பொருட்களையும் அது உள்ளடக்கியிருந்தது.
- பெட்ராரக் லத்தீன் மற்றும் இத்தாலிய மொழிகள் இரண்டிலும் படைப்புகளை உருவாக்கினார்.
- மனிதநேயவாதிகளுள் முன்னோடியான இவர் 'இத்தாலிய மறுமலர்ச்சி இலக்கியத்தின் தந்தை' என்று கருதப்படுகிறார்.
- ஜியோவனி பொக்காசியோ 100 கதைகளின் தொகுப்பை டெக்கமரான் என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டார்.
- நிக்கோலோ மாக்கியவல்லியின் 'தி பிரின்ஸ்' என்ற படைப்பு ஆட்சியாளர்களுக்கு அரசியல் வழிகாட்டியாக அமைந்தது.
- தாம் ஆளும் நாட்டின் அதிகாரம் மற்றும் பாதுகாப்பை பராமரிப்பது ஒரு ஆட்சியாளரின் தலையாய கடமை என்று அவர் கருத்து கொண்டிருந்தார்.

2. இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகியவை தேசிய அரசுகளாக உருவெடுத்தமை பற்றி ஒருங்கிணைந்தமுறையில் ஆராயவும்.

<u>ஸ்பெயின் தேசிய அரசாக உருவெடுத்தல் :</u>

- மூர்களின் கட்டுப்பாட்டில் அராகன், காஸ்டைல் போன்ற ஸ்பெயினின் பெரும்பாலான பகுதிகள் இருந்தன.
- மூர்களை விரட்டி அடிக்க ஒன்றிணைந்து போராடிய பெர்டிணாண்டும், இஸபெல்லாவும் ஸ்பெயினை இணைக்கவும் கடினமாக உழைத்தனர்.
- மன்னர், சபையில் இருந்து பிரபுக்களை நீக்கி அவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். இதன் மூலம் ஸ்பெயின் ஒரு தனி நாடாக உருவெடுத்தது.

<u>இங்கிலாந்து தேசிய அரசாக உருவெடுத்தல் :</u>

- அரச சிம்மாசனத்தை அடைய யார்க் குடும்பம் மற்றும் லன்காஸ்டர் குடும்பம் என இரண்டு அரச குடும்பங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது.
- இந்த உள்நாட்டுப்போரில் ஹென்றி டியூடர் வெற்றி வாகைசூடி, இங்கிலாந்தில் புதிய அரசராட்சி அமைய வழிவகுத்தார்.
- அவர் யார்க்குடும்பத்தைச் சேர்ந்த எலிசபெத் உடன் திருமண ஒப்பந்தத்தில் ஈடுபட்டார். இதன் மூலம் இங்கிலாந்து ஒரு தேசிய அரசாக உருவெடுத்தது.

பிரான்ஸ் தேசிய அரசாக உருவெடுத்தல் :

- பிரான்சின் வளமிக்க மேற்குப் பகுதிகளும், பர்கண்டியும் நீண்ட காலத்துக்கு ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்தது.
- நூறாண்டு போரின் முடிவில் ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு விரட்டிய பிறகு, பதினோறாம் லூயி பர்கண்டி திரும்பினார்.
- இறுதியாக பர்கண்டி 1483ஆம் ஆண்டு பிரான்சின் கட்டுப்பாட்டின் கீழ்வந்தது. இதன் மூலம் பிரான்ஸ் ஒரு தேசிய அரசாக உருவெடுத்தது.

3. கிழக்குப் பகுதிக்கு புதிய கடல் வழித்தடங்களை கண்டுபிடிப்பதில் போர்த்துகல் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளின் முன்முயற்சிகளை விவரிக்கவும். நவீனஉலகின் பொருளாதார வரலாற்றில் ஏன் இது மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக கருதப்படுகிறது?

- கானரி, மெடீரா, அசோர் ஆகிய தீவுகளை முதல் ஆய்விலேயே சிறிய நாடான போர்த்துகல் கண்டுபிடித்தது.
- மாலுமி ஹென்றியால் அனுப்பப்பட்ட மாலுமிகள் ஆப்பிரிக்காவின் கடற்கரைப் பகுதியான கினியாவைச் சென்றடைந்தனர்.
- பார்தோலோமியோ டயஸ் நன்னம்பிக்கை முனையை சுற்றி வந்தார்.
- 1492 இல் கொலம்பஸ் அமெரிக்க நிலப்பகுதியை வந்தடைந்தார்.
- வாஸ்கோடகாமா மொசாம்பிக் தீவை சென்றடைந்தார்.
- இந்தியாவின் ஒரு பகுதியை அடைந்த வாஸ்கோடகாமா இந்தியாவுடனான நேரடி வர்த்தக வாய்ப்புகளை திறந்துவிட்டார்.
- வாஸ்கோடகாமா சென்ற வழியைப் பின்பற்றி இந்தியாவுக்குப் பயணித்த காப்ரல் கோழிக்கோட்டை சென்றடைந்தார்.
- கிழக்குப் பகுதிகளுக்கான இந்த புதிய கடல் வழி கண்டுபிடிப்புகள் கீழை நாடுகளுடன் ஐரோப்பியர்கள் நேரடியாக வாணிபம் செய்ய வழிவகுத்தது.

4. பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை? ஜெர்மனியில் மார்ட்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார்?

- பாவமன்னிப்பு வழங்கும் முறைக்கு பணம், வேண்டியவர்களுக்கு வேலைவழங்குவது, தேவாலயப் பணிகளை பணத்துக்கு விற்பது ஆகியன தாக்குதலுக்கு உள்ளானது.
- பிஷப் பதவிகளில் அனுபவம் இல்லாத இளைஞர்கள் நியமிக்கப்பட்டனர்.
- பல்வேறு தேவாலயங்களில் இருந்து வருமானம் பெற்ற பாதிரிமார்கள் அவற்றில் எந்த தேவாலயத்துக்கும் சென்றதில்லை.
- விவசாயிகள் தேவாலயத்தை அடக்கி ஆளும் நிலப்பிரபுவாகப் பார்த்தனர்.
- ரோமுக்கு பயணம் மேற்கொண்ட மார்ட்டின் லூதர் தேவாலயத்தின் ஊழல் மற்றும் ஆடம்பரம் குறித்து வருந்தினார்.
- 95 குறிப்புகள் என்ற தலைப்பில் ரோமானிய தேவாலயத்திற்கு எதிராக அவர் 95 புகார்களைஎழுதினார்.
- பைபிள் மட்டுமே உன்னதமானது; போப்பாண்டவரோ அல்லது பிஷப்புகளோ இல்லை என்று அவர் வாதிட்டார்.
- கடவுளின் மீது இருக்கும் ஒருவரது நம்பிக்கையைப் பொறுத்துதான் இரட்சிப்பை அடைய முடியும் என்று அவர் கூறினார். இவ்வாறாக பிராட்டஸ்டன்ட் கிளர்ச்சி துவங்கியது

## பாடம் - 11

1. அமெரிக்கவிடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

காரணங்கள் :

- நாவாய் சட்டங்கள், சர்க்கரை வரி முத்திரைச் சட்டம், டவுன்ஷெண்ட் சட்டம், தேயிலை வரி, பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள் ஆகியவற்றை தனது அமெரிக்க குடியேற்றங்கள் மீது இங்கிலாந்து திணித்தது.

- மேற்கண்ட பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள் நீக்கப்பட வேண்டுமென குடியேற்றங்களின் பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர்.
- அவர்கள் இங்கிலாந்து அரசர் மூன்றாம் ஜார்ஜுக்கு கோரிக்கை மனுவொன்றை ஒரு ஆலிவ் கிளையோடு அனுப்பி வைத்தனர். ஆனால் அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

போக்கு :

- ஆங்கிலேயப் படைகளுக்கு வில்லியம் ஹோவ் தலைமை தாங்க அமெரிக்கப் படைகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையேற்றார்.
- சரடோகா போர் முனையில் ஆங்கிலேயப் படைத்தளபதி ஜெனரல் புர்கோய்ன் சரணடைய நிர்ப்பந்திக்கப்பட்டார்.
- இறுதியில் யார்க்டவுன் என்ற இடத்தில் இங்கிலாந்துப் படைகள் அமெரிக்க படைகளிடம் சரணடைந்தன.

விளைவுகள் :

- இங்கிலாந்து பிரதமர் நார்த் பிரபு தனது பதவியை ராஜினாமா செய்தார்.
- இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்குமிடையே பாரிசில் அமைதி உடன்படிக்கை கையெழுத்தானது.
- ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவரானார்

2. பாஸ்டில் சிறைதகர்ப்பு முதல் ரோபஸ்பியர் கொல்லப்பட்டது வரையிலுமான பிரெஞ்சுப் புரட்சியின் போக்கினை வரைக.

- தேசிய சட்டமன்றம், நிலமானிய முறையை ஒழித்தது.
- 1789 இல் மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைப் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 1791இல் தேசிய சட்டமன்றம் அரசியலமைப்பை உருவாக்கியது. அதன்படி அரசரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.
- மக்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து விவாதம் செய்ய அரசியல் குழுக்களை உருவாக்கத் தொடங்கினர்.
- அவ்வாறு உருவாகி பாரிஸ் நகரில் புகழ்பெற்று விளங்கிய குழு ஜேக்கோபியன் குழு என்பதாகும்.
- 1792 செப்டம்பர் 2இல் அரச குடும்ப ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்ட அனைவரும் கேள்வி முறையின்றி கொல்லப்பட்டனர்.
- புதிய சட்டமன்றமான தேசியப்பேரவை முடியாட்சியை ஒழித்து பிரான்ஸ் ஒரு குடியரசு என அறிவித்தது.
- 1793 ஜனவரி 21இல் அரசர் பதினாறாம் லூயி மக்கள் தீர்ப்பாயத்தின் முன்னர் கொண்டு வரப்பட்டு கில்லட்டின் கொலைக்கருவியில் கொல்லப்பட்டார்.
- அரசாங்கமும், சமூகத்தின் அடித்தளமும் அளவுக்கு மேலாக தீவிரமயமாக்கப்பட்டதால் ஜேக்கோபியன் குழுவின் தலைவரான ரோபஸ்பியரும் தூக்கிலிடப்பட்டார்.

3. “அமெரிக்க புரட்சியும் பிரெஞ்சுப் புரட்சியும் ஹைட்டியில் புரட்சி ஏற்படத் தூண்டுகோலாய் அமைந்தன”. இக்கூற்றைஉறுதிப்படுத்தவும்.

- செயின்ட் டோமிங்கோ என்றறியப்பட்ட ஹைட்டி, கரீபியன் கடலில் இருந்த வளமான பிரெஞ்சு காலனி ஆகும்.
- பாஸ்டைல் சிறைச்சாலை வீழ்ச்சியை தொடர்ந்து பிரான்சுக்கெதிராக ஆயுதமேந்திய போராட்டம் நடைபெற்றது
- வின்செண்ட் ஒஜ் என்பவர் காலனிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்களுக்காக பாரிஸ் நகர சட்டமன்றத்தின் ஆதரவை நாடினார்.
- 1790 இன் இறுதியில் அவர் தலைமையில் கிளர்ச்சி நடைபெற்றது. ஆனால் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு அவர் தூக்கிலிடப்பட்டார்.
- 1790 இன் இறுதியில் டூசையின்ட் எல்’ ஓவர்ச்சர் என்பவர் பல பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்.
- இவருடைய கட்டுபாட்டின் கீழிருந்த பகுதிகளை மீட்பதற்கு நெப்போலியன் 12,000 படைவீரர்களை கப்பலில் அனுப்பி வைத்தார்.

- டூசையின்ட் கொல்லப்பட்டாலும் நெப்போலியனின் படைகள் , டெசலைன்ஸ் என்பவரால் தோற்கடிக்கப்பட்டன.
- ஹைட்டி 1804இல் செயின்ட் - டோமிங்கோ கருப்பின மக்களின் சுதந்திர நாடானது.

4. தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?

<u>இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்டதற்கான காரணங்கள்.</u>

- தொழிற்சாலைகளில் முதலீடு செய்யத் தேவையான மூலதனம் தாராளமாகக் கிடைத்தது
- அதன் அரசியல் உறுதித்தன்மை தொழில்களின் வளர்ச்சிக்குச் சாதகமான சூழலை உருவாக்கியது.
- நிலக்கரி, இரும்பு போன்ற மூலவளங்கள் இங்கிலாந்தில் அதிக அளவில் கிடைத்தது.
- தனது கடற்கரைப்பகுதி முழுவதிலும் இங்கிலாந்து சிறப்பான துறைமுகங்களைக் கொண்டிருந்தது.

<u>தாக்கம்</u>:

- ஆலைகள் இயந்திரமயமானதின் விளைவாக உற்பத்தி மிகப் பெருமளவிற்குப் பெருகியது. அதனால் செல்வமும் பெருகியது.
- ஆயிரக்கணக்கான கைவினைஞர்களும் நெசவாளர்களும் வேலை இழந்தனர்.
- பெண்கள், குழந்தைககளிடமிருந்து மலிவான விலையில் உழைப்பு பெறப்பட்டதால் ஆண்கள் வேலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.
- ஆலை முதலாளிகள், ஆலைத் தொழிலாளர்கள் என இரண்டு வர்க்கங்கள் உருவாயின .

## பாடம் - 12

1. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முக்கியத்துவம் பெற்ற கூட்டு சிந்தனையாளர்களை(Collectivist Thinkers) அடையாளப்படுத்தி அவர்கள் சோஷலிச சிந்தனையை செழுமையாக்க ஆற்றிய பங்கைக் கூறுக.

- கற்பனையுலகு குறித்த சிந்தனையாளரான எட்டியன் - கேப்ரியல் மொராலி சமூகத்தைப் பொதுவுடைமை அமைப்பாக மாற்றவேண்டி ஒரு முன்மொழிவை வெளிப்படுத்தினார்.
- கார்ல் மார்க்சும் . ஃபிரெட்ரிக் ஏங்கல்சும் கற்பனைவாத சோஷலிசம் என்ற சொல்லாடலைப் பயன்படுத்தினார்கள்.
- கற்பனைவாத சோஷலிசம் மாதிரி சமூகத்தைப் பரிந்துரைத்தது.
- சமூகக் கட்டமைப்பில் சமய குருக்களின் இடத்தை விஞ்ஞானிகளைக் கொண்டு நிரப்ப வேண்டும் என்று செயின்ட்சீமோன் பரிந்துரைத்தார்.
- சார்லஸ்ஃபூரியர் சமூக சூழலே மனித இனத்தின் கவலைகளுக்கு முதல் காரணம் என்று நம்பினார்.
- இராபர்ட் ஓவன் சமூக சமத்துவத்தையும், கூட்டுறவையும் முன்னிறுத்தி ஒரு பெரும் கற்பனைவாத சோஷலிச கோட்பாட்டை உருவாக்கினார்.
- தேசிய அரசுகளின் இடத்தில் தன்னாட்சி கொண்ட கூட்டு சமூகங்களின் கூட்டமைப்பு தோன்ற வேண்டுமென பிரௌதன் வலியுறுத்தினார்.
- அரசு அதிகாரத்தின் துணை இல்லாமல் சோஷலிச சமூகத்தை எட்ட முடியாது என்று லூயி பிளாங்க் வாதிட்டார்.

2. 1848ஆம் ஆண்டில் நடந்தபிரெஞ்சுப் புரட்சி ஐரோப்பாவின் பிறபகுதிகளில் அரசியல் தோல்விகளை ஏற்படுத்தியமை குறித்து விவாதித்து எழுதுக.

- ஐரோப்பாவின் இடைத்தரகராக கருதப்பட்ட மெட்டர்னிக் வியன்னாவை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார்.
- ஹங்கேரி நாடும், பொஹிமியாநாடும் தேசிய விடுதலை அடைந்து விட்டதாகப் பிரகடனப்படுத்திக் கொண்டன.
- மிலான் ஆஸ்திரியர்களை வெளியேறச் செய்தது.
- வெனிஸ் விடுதலை பெற்ற குடியரசாக மாறியது.
- சார்டினியாவின் மன்னரான சார்லஸ் ஆல்பர்ட் ஆஸ்திரியாமீது போர்ப்பிரகடனம் செய்தார்.

- சர்வாதிகாரப்போக்கு சிறிது காலம் மறைந்தது போன்ற பிம்பம் ஏற்பட்டது. ஆனால் உண்மையில் அவ்வாறு நிகழவில்லை.
- கோடைக்காலம் நெருங்கும் வேளையில் மன்னர்கள் புரட்சியாளர்கள் மீது தாக்குதலைத் தொடுக்கஆரம்பித்தனர்.
- பெர்லின், வியன்னா, மிலான் போன்ற பகுதிகளில் பரவிக்கொண்டிருந்த மக்களாட்சி கோரிய இயக்கங்களை ஒடுக்கினர்.

3. இத்தாலிய இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது?

- நெப்போலியனின் ஆட்சி ஒரே சீரான நிர்வாகத்தை வழங்கியமையால் இத்தாலியில் முதன்முறையாக ஒருமைப்பாட்டுணர்வு ஏற்பட்டது.
- சுதந்திர கருத்துக்களையும், நாட்டுப்பற்றையும் வலியுறுத்திய கார்பொனாரி போன்ற இரகசிய குழுக்கள் அதிகமாகப் பரவியது.
- மாஸினி, கவூர், கரிபால்டி ஆகிய மூவரும் இத்தாலிய ஒருங்கிணைவிற்கான முக்கிய ஆளுமைகள் ஆவர்.
- பொதுவாக்கெடுப்பின் வாயிலாக பியட்மாண்ட்-சார்டினிய இராஜ்ஜியத்தோடு பார்மா, மொடினா, டஸ்கனி ஆகியவை இணைக்கப்பட்டன.
- சிசிலி, நேப்பிள்ஸ், மற்றும் போப்பாண்டவரின் பகுதிகளில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டு அவை பியட்மாண்ட்-சார்டினியாவோடு இணைக்கப்பட்டன.
- ஆஸ்திரியவுடனான போரின் முடிவில் தூரிச் உடன்படிக்கையின்படி லம்பார்டியை பெற்றது.
- ஆஸ்திரியப்-பிரஷ்யப் போரில் பிரஷ்யாவோடு இத்தாலி இணைந்து செயல்பட்டமையால் அது வெனிஷியாவை பரிசாகப் பெற்றுக் கொண்டது.
- பிரெஞ்சுப் படைகள் பிராங்கோ- பிரஷ்யப் போரில் பின்னடைவைச் சந்தித்து ரோமைவிட்டு அகன்ற போது இத்தாலி ரோமை இணைத்துக் கொண்டது.

4. ஒருங்கிணைந்தஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது?

- பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மானியப் பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்ற நோக்கோடு பிஸ்மார்க் அதனை வலுப்படுத்தினார்.
- ஒருங்கிணைவை அடைவதற்கு அவர் 'இரத்தமும், இரும்பும்' என்ற வலுவான கொள்கையைக பின்பற்றினார்.
- ஜெர்மானிய ஒருங்கிணைவை ஆஸ்திரியாவுடனும் பிரான்சுடனும் மோதாமல் அடைவது சாத்தியமில்லை என்று அவர் புரிந்துகொண்டிருந்தார்.
- இராஜதந்திர நகர்வுகளின் வாயிலாக ஆஸ்திரியாவுடனும் பிரான்சுடனும் முரண்போக்கை பின்பற்றினார்.
- ஆஸ்திரியாவை வெனிஷியப் பகுதியைவிட்டு அப்புறப்படுத்த விரும்பிய அவர் பியட்மாண்ட்-சார்டினியாவின் ஆதரவைப் பெற்றார்.
- ஆஸ்திரிய-பிரஷ்யப் போர் வெற்றியின் மூலம் பிரஷ்யாவின் தலைமையில் வடக்கு ஜெர்மானியக் கூட்டமைப்பை ஏற்படுத்தினார் .
- தெற்கு ஜெர்மானிய மாகாணங்களை ஒன்றிணைக்கும் பொருட்டு பிரஷ்யாவிற்கும், பிரான்சிற்குமிடையே பிளவை ஏற்படுத்தினார்.
- பிராங்கோ-பிரஷ்யப் போர் முடிவில் வடக்கு மற்றும் தெற்கு ஜெர்மனியை இணைத்து ஜெர்மனி ஐக்கியத்தை முழுமைபடுத்தினார்.

பாடம் - 13

1. முதல் உலகப்போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.

<u>காரணங்கள் :</u>

- ஐரோப்பாவின் பெரும் சக்திகள் இரு எதிரெதிர் முகாம்களாக உருவெடுத்து நின்றன.
- அவை மூவர் கூட்டணி (ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி) என்றும், முக்கூட்டு நட்பு (பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா) என்றும் அழைக்கப்பட்டன.

- ஜெர்மனி பிரான்ஸ் இடையேயான மொரோக்கோ தொடர்பான சிக்கலில் இங்கிலாந்து பிரான்ஸை ஆதரித்தது.
- ஆஸ்திரியா தன் பாதுகாப்பில் இருந்த போஸ்னியாவையும் , ஹெர்ஸிகோவினாவையும் திடீரென இணைப்பதாக அறிவித்தது.
- பால்கன் பகுதியில் நடைப்பெற்ற இரண்டு போர்கள் அதில் பங்கு பெற்ற நாடுகளை முதல் உலகப் போருக்கு இட்டுச் சென்றது.
- ஆஸ்திரிய- ஹங்கேரியின் , ஆர்ச்டியூக் ஃபிரான்ஸ் ஃபெர்டினான்ட் செர்பிய நாட்டைச் சேர்ந்த பிரின்சிப் என்பவரால் படுகொலை செய்யப்பட்டார்.

<u>விளைவுகள் :</u>

- பாரிசில் அமைதி மாநாடு கூட்டப்பட்டது.
- ஜெர்மன் அரசு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.
- நேசநாடுகள் ஆஸ்திரியா , ஹங்கேரி , பல்கேரியா, துருக்கி ஆகியவற்றுடன் தனித்தனியான உடன்படிக்கைகள் செய்து கொண்டன.
- உலக அமைதியை பாதுகாக்க பன்னாட்டு சங்கம் நிறுவப்பட்டது .

2. “மார்க்ஸ் தீப்பொறியை வழங்கவும், அதை லெனின் தீபமாக ஏற்றினார்” - தெளிவுபடுத்துக.

- சோஷலிசப்புரட்சிக்கு, உழைக்கும் மக்களின் இருப்பும், நடுத்தர மக்களின் இருப்பும் கட்டாய முன்தேவை என மார்க்சும், ஏங்கல்சும் கருதினர்.
- கார்ல் மார்க்சின் சிந்தனைகளால் உந்தப்பட்ட லெனின் வெகுஜன நடவடிக்கையின் மூலமாகவே விடுதலை அடையமுடியும் என்று நம்பினார்.
- சார் மன்னரின் திறமையற்ற ஆட்சி, ஜப்பானிடம் பெற்ற தோல்வி, ஞாயிறு படுகொலை, முதல் உலகப்போரில் பெற்ற தோல்வி ஆகியன ரஷ்யாவில் புரட்சிக்கு வழிவகுத்தன.
- புரட்சியின் மூலம் ரஷ்யாவில் மென்ஸ்விக் அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. அதனை வீழ்த்த லெனின் திட்டம் தீட்டினார்.
- “அனைத்து அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே” என்ற அவரின் தாரகமந்திரம் அனைவரையும் அவர் பக்கம் திருப்பியது.
- போர்களால் பாதிக்கப்பட்ட மக்களை ‘ரொட்டி, அமைதி, நிலம்’ என்ற முழக்கம் ஈர்த்தது.
- லெனின் போல்ஷ்விக் மத்தியகுழுவிடம் உடனடியாக ஒரு புரட்சியை நடத்துமாறு அறிவுறுத்தினார்.
- அதன்படி குளிர்கால அரண்மனை, பிரதம அமைச்சரின் தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசின் முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள் யாவும் கைப்பற்றப்பட்டன.

3. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் கடுமையானதாகவும், அவமானப்படுத்தக் கூடியதாகவும் தெரிந்தது - இக்கூற்றினுக்கான ஆதாரப் பின்புலத்தை உறுதிப்படுத்துக.

- அல்சேசையும், லொரைனையும் ஜெர்மனி பிரான்சிடம் ஒப்படைத்தது.
- சார் பள்ளத்தாக்கின் நிலக்கரி சுரங்கங்கள் பிரான்சிடம் வழங்கப்பட்டது.
- ஜெர்மானிய காலனிகள் யாவும் பன்னாட்டு சபையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.
- ஜெர்மனி நிராயுதபாணியாக்கப்பட்டு அதன் நீர்மூழ்கிக் கப்பல்களையும், போர்கப்பல்களையும் பறிமுதல் செய்யப்பட்டது.
- இராணுவப் பயன்பாட்டிற்காகவோ, கப்பற்படையின் தேவைக்கென்றோ ஜெர்மனி விமானங்களைக் கொண்டிருக்கக்கூடாது எனப்பட்டது.
- மேலும் அதன் தரைப்படை 100,000 என்ற எண்ணிக்கையைத் தாண்டக்கூடாதென்றும் வரையறுக்கப்பட்டது.
- ஜெர்மனியும், ஆஸ்திரியாவும் ஐக்கியமாதல் தவிர்க்கப்பட்டது.
- ஜெர்மனி ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை அங்கீகரிக்க வற்புறுத்தப்பட்டது.
- ஜெர்மனியும் அதன் கூட்டு நாடுகளுமே போரில் ஏற்பட்ட இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் பொறுப்பெனக் கூறப்பட்டது.

M.VENKATESAN. M.A., M.PHIL., B.ED., PG ASST (HISTORY ) GHSS AYAPPAKKAM

4. முசோலினியும், ஹிட்லரும் பாசிச அரசுகளை முறையே இத்தாலியிலும் ஜெர்மனியிலும் நிறுவ சாதகமான சூழல் எழுந்தமையை விளக்குக.

இத்தாலியில் பாசிச அரசு நிறுவப்பட்டதற்கான சூழல்கள் :

- முதல் உலகப்போரின் முடிவில் எழுந்த ஒழுங்குமுறை சீர்கேடுகளை சரிசெய்ய பாராளுமன்ற முறையிலான அரசு திணறியது.
- ஜனநாயக கட்சியின் தலைவர்கள் தீர்க்கமான உறுதியோடு செயலாற்ற தவறியமையே முசோலினியின் வெற்றிக்கு வழிவகுத்தது.
- பொதுவுடைமைவாதிகளுக்கும், அவர்களின் எதிர்தரப்பினருக்குமிடையே எழுந்த பிணக்குகள் உள்நாட்டுப் போருக்கான சூழலை ஏற்படுத்தியது.
- இச்சூல்நிலையில் பாசிசவாதிகள் ரோமில் நடத்திய பேரணியே, மன்னர் மூன்றாம் இம்மானுவேல், முசோலினியை ஆட்சியமைக்க அழைக்க வழிவகுத்தது.

ஜெர்மனியில் பாசிச அரசு நிறுவப்பட்டதற்கான சூழல்கள் :

- சமூக ஜனநாயகவாதிகளோடு பொதுவுடைமைவாதிகள் இணைந்துப் பணியாற்ற விரும்பாததால் குடியரசு கட்சியின் அரசு வீழ்ச்சியுற்றது.
- இதனைத் தொடர்ந்து தொழிலதிபர்கள், வங்கி உரிமையாளர்கள், அரசப்பாரம்பரியப் பின்புலம் கொண்டவர்கள் ஆகியோர் ஹிட்லரை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்வைத்துக் கொள்ளவிரும்பினர்.
- அவர்கள் குடியரசுத்தலைவர் வான் ஹின்டன்பர்கை அணுகி ஹிட்லரை பிரதம அமைச்சராகப் பணித்தார்கள்.
- பின்னர் ஹிட்லரின் நாஜி அரசு ஜெர்மனியில் பாராளுமன்ற மக்களாட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

பாடம் - 14

1. இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.

- முதல் உலகப்போரின் முடிவில் ஜெர்மனியின் மீது பல கடுமையான விதிமுறைகள் சுமத்தப்பட்டன.
- அதன் கட்டுப்பாட்டில் இருந்த காலனிய நாடுகள் பிரித்தெடுக்கப்பட்டதால் அதன் படையளவு மோசமாக சுருங்கியது.
- அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை பிரான்சிடம் விட்டுக் கொடுத்தது.
- சார் பள்ளத்தாக்கில் பிரான்ஸ் தற்காலிகமாகப் படைகளை நிறுத்திக் கொள்ள ஜெர்மனி நிர்ப்பந்திக்கப்பட்டது.
- தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியான சைலேசியாவை போலந்திடம் ஒப்படைக்கவும் ஜெர்மனி கட்டாயப்படுத்தப்பட்டது.
- மேலும் 6,600 மில்லியன் பவுண்டுகள் போர் இழப்பீடாக ஜெர்மனியிடம் கோரப்பட்டது.
- ஆஸ்திரியா, ஜெர்மனியிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டது.
- இத்தகைய மோசமான சரத்துக்கள் பின்னாளில் ஜெர்மனியில் நாஜி கட்சியின் அரசியல் வெற்றிக்கு வழிவகுத்தது.

2. இரண்டாம் உலகப்போர் ஏற்படஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிக்குக் காரணமாவார்கள் என்பதனை ஆய்ந்து கூறுக.

- வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி 1935இல் ஸார் பகுதியில் பொது வாக்கெடுப்பு நடத்தி அதனை ஜெர்மனியோடு இணைத்தார்.
- வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தை மீறி 1936இல் ஹிட்லர் மீண்டும் ரைன்லாந்தில் இராணுவத்தை குவித்தார்.
- ஹிட்லரின் நிர்ப்பந்தத்தால் ஆஸ்திரியாவில் நாஜி அரசு ஏற்படுத்தப்பட்டது.

- அதன்பின் ஜெர்மானிய படைகள் வியன்னாவிற்குள் நுழைந்து அந்நாட்டின் மீது கட்டுப்பாட்டை நிறுவ ஆரம்பித்தன.
- சூடட்டன்லாந்தில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னரே ஹிட்லர் சூடட்டன்லாந்தை இராணுவத்தை கொண்டு ஆக்கிரமித்தார்.
- மூனிச் மாநாட்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் பிரதம அமைச்சர்கள் இதற்கான அனுமதியை வழங்கினார்கள்.
- செக்கோஸ்லோவாக்கியாவிற்குள் ஏற்பட்ட முரண்போக்கை காரணம்காட்டி ஹிட்லர் அங்கு ஜெர்மானியப் படைகளை அனுப்பினார்.
- ஐரோப்பா முழுவதையும் ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்டிருந்த ஹிட்லர் 1939 செப்டம்பர்1இல் போலந்தின் மீது தாக்குதல் நடத்தினார்.
- போலந்திலிருந்து ஜெர்மனியை வெளியேற பிரிட்டன் விடுத்த இறுதி எச்சரிக்கை புறக்கணிக்கப்பட்டதால் இரண்டாம் உலகப்போர் மூண்டது.

3. சீனாவில் பொதுவுடைமை அரசு உருவாக மாசே-துங்கின் பங்களிப்பை விவரித்து எழுதுக.

- 1918ஆம் ஆண்டில் மார்க்சியத்தைப் படிப்பதற்கான ஒரு சங்கம் பீகிங் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டது.
- அதன் பயிலரங்குகளில் பங்கெடுத்த மாணவர்களில் இளம் உதவி நூலகரான மாசே-துங்கும் ஒருவர்.
- சீனாவில் கோமின்டாங் அரசு ஊழல் மலிந்ததாகவும், வன்முறை கும்பல்களின் பிடியில் சிக்கியும் சீரழிந்தது.
- கோமின்டாங்கின் பிடி நகர்புறங்களில் இறுக்கமாக இருப்பதை உணர்ந்த மாவோ, விவசாயக்குடிகளை ஒன்று திரட்டுவதில் தனது கவனத்தைச் செலுத்தினார்.
- கியாங்ஸிக்கும் ஹுனானுக்குமிடைப்பட்ட காடுகளால் சூழப்பெற்ற மலைப்பகுதிகளில் அவர் தஞ்சமடைந்தார்.
- பின்னர், மாவோ பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஹுனானை விட்டு அகல முடிவுசெய்தார்.
- இதையடுத்து 1934இல் பொதுவுடைமை இராணுவம் மேற்கொண்டதே 'நீண்டபயணம்' என்றழைக்கப்படுகிறது.
- நீண்ட பயணத்தின் விளைவாக மாவோ சீனாவில் மக்களின் ஆட்சியாளர் ஆனார்.

4. இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் பொதுவான மற்றும் வேறுபட்ட கூறுகளை ஒப்பிட்டாய்ந்து எழுதுக.

<u>பொதுவான கூறுகள்:</u>

- இரண்டு நாடுகளுமே ஐரோப்பிய நாடுகளின் காலனியாக இருந்தன.
- இரண்டு நாடுகளிலும் காலனி ஆதிக்கத்திற்கு எதிராக பொதுவுடைமைவாதிகள் குரல் கொடுத்தனர்.
- இரண்டாம் உலகப்போரின்போது இரண்டு நாடுகளுமே ஜப்பானின் ஆக்கிரமிப்பில் சிக்கின.
- இரண்டு நாடுகளுமே இரண்டாம் விடுதலைப் போருக்குப்பின் விடுதலை பெற்றன.

<u>வேறுபட்ட கூறுகள்:</u>

| | |
|---|---|
| பிலிப்பைன்ஸ், ஸ்பானிய காலனிய ஆட்சி நாடாகும். | இந்தோனேஷியா, டச்சு காலனிய ஆட்சி நாடாகும். |
| தேசியவுணர்வு பிறபகுதிகளில் தோன்றுவதற்கு முன்பே பிலிப்பைன்ஸ்வாசிகளிடம் தோன்றியது. | தேசியவாத இயக்கம் இந்தோனேஷியாவில் மிகவும் தாமதமாக உருவானது. |

| | |
|---|---|
| பிலிப்பைன்ஸில் கவைட் கிளர்ச்சியை காட்டுமிராண்டித்தனமாகக் கையாண்ட செயலானது தேசியவுணர்வை வளர்த்தெடுக்க பெரிதும் உதவியது. | இந்தோனேஷியாவில் தேசியவாதத்தை வெளிப்படுத்திய முதல் நிகழ்வென்பது உயர் முயற்சி எனும் அமைப்பு உருவாக்கப்பட்டதிலிருந்தே துவங்குகிறது. |
| அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதரவோடு 1946 இல் பிலிப்பைன்ஸ் விடுதலை பெற்ற நாடானது. | ஐ. நா சபையின் பாதுகாப்புக்குழு கொடுத்த அழுத்தம் காரணமாக 1949 இல் இந்தோனேஷியா விடுதலை பெற்ற நாடானது. |

பாடம் - 15

1. அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும்.

- ❖ அடிப்படை மனித உரிமைகளை மதித்தல்.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் மதித்தல்.
- ❖ அனைத்து நாடுகளின் இறையாண்மையையும் அவற்றின் எல்லைப்பரப்பு ஒருமைப்பாட்டையும் மதித்தல்.
- ❖ அனைத்து இனங்களும், அனைத்து நாடுகளும் சமம் என அங்கீகரித்தல்.
- ❖ அடுத்தநாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமலும் குறுக்கீடு செய்யாமலும் இருத்தல்.
- ❖ ஒருநாடு மற்றநாடுகளுக்கு எதிராக நெருக்கடிகளை தருதல் என்பதைப் பயன்படுத்தக்கூடாது.
- ❖ அனைத்துப் பன்னாட்டுப் பிரச்சனைகளுக்கும் அமைதியான வழியில் தீர்வு காணப்படவேண்டும்.
- ❖ பரஸ்பர அக்கறை, ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- ❖ நீதி மற்றும் பன்னாட்டு கட்டுப்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.

2. அரபு-இஸ்ரேலிய முரண்பாட்டின் தோற்றத்தை விவாதிக்கவும். தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் எவ்வாறு இரு நாடுகளுக்கிடையே 1967இல் பெரும் போர் ஏற்படக் காரணமாயிற்று என்பதை விளக்கவும்.

- ❖ 1947 நவம்பரில் பாலஸ்தீனத்தை அராபியர் நாடு, யூதர்கள் நாடு என இரண்டாகப் பிரிப்பதற்கு ஐ.நா.சபை வாக்களித்து முடிவு செய்தது.
- ❖ எனவே பாலஸ்தீனத்தில் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே போர் மூண்டது.
- ❖ பாலஸ்தீனத்திலிருந்து ஆங்கிலப்படைகள் வெளியேறிய பின்னர் இஸ்ரேல் தன்னை சுதந்திர நாடாக அறிவித்தது.
- ❖ இஸ்ரேல் உருவாக்கப்பட்டதன் தொடக்கத்திலிருந்தே ஐ.நா. சபை அரசியல் முடிவுகள் எடுப்பதில் ஓரளவே ஈடுபாடு கொண்டது.
- ❖ 1966 வாக்கில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு புதிய ரக போர் விமானங்களையும் ஏவுகணைகளையும் வழங்கத்தொடங்கியது.
- ❖ 1967ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கும் சிரியாவிற்கும் இடையில் பீரங்கிப் பரிமாற்றங்கள் இருந்தன.
- ❖ சிரியாவின் கடற்கரைக்குச் சற்றுதொலைவில் அமெரிக்காவின் ஆறாவது கப்பற்படை நிலைகொண்டது.
- ❖ இதனைத் தொடர்ந்து எகிப்து டைரன் நீர்ச்சந்தி வழியாக இஸ்ரேலின் கப்பல்கள் பயணப்படுவதற்குத் தடைவிதித்தது. எனவே இஸ்ரேல் எகிப்தைத் தாக்கியது.

3. "பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்கள் தொடர்பு கொண்டுள்ள பிரச்சனைகளில் ஐ.நாசபை மௌனமான பார்வையாளராகவே இருந்தது "பனிப்போர் காலத்து அனுபவங்களின் வாயிலாக இக்கூற்றை விளக்கமாக எடுத்துரைக்கவும்.

- ❖ 1956 நவம்பர் 5 இல் பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் படைகள் எகிப்தின் துறைமுக நகரமான செய்த்தில் இறங்கின.
- ❖ பொது சபை அமெரிக்காவின் முன்முயற்சியில் அவசரக் கூட்டமொன்றைக் கூட்டி எகிப்தின் மீதான படையெடுப்பைக் கண்டனம் செய்தது.

Padasalai

- இதனால் இஸ்ரேல், கிரேட்பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் போரை நிறுத்தின.
- இம்ரி நேகி பலகட்சி முறையை அறிமுகம் செய்து ஒரு கூட்டணியாட்சியை ஹங்கேரியில் நிறுவினார்.
- இதனால் கோபம் கொண்டசோவியத் ரஷ்யா ஹங்கேரிக்குள் நவம்பர் 4இல் படைகளை அனுப்பி கிளர்ச்சியை ஒடுக்கியது.
- இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல்களை முற்றிலுமாகத் தீர்த்து வைப்பதற்கு, பன்னாட்டு அமைதி மாநாட்டை தனது ஆதரவில் நடத்த ஐ.நாசபை மீண்டும் மீண்டும் முயற்சித்தது.
- மேற்கண்ட பிரச்சனைகளில் பாதுகாப்பு சபையின் நிரந்தர நாடுகள் தங்களது மறுப்பானையை பயன்படுத்தி சிக்கலை நீட்டித்தன
- மேலும் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்களே பிரச்சனைகளில் ஈடுபட்டவர்களாக இருந்ததால் ஐ.நா.சபை ஒரு மௌனமான பார்வையாளராகவே இருந்தது.

4. போரிஸ் யெல்ட்சினின் அரசியல் வளர்ச்சியைக் குறிப்பாக சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் அவர் வகித்தபங்கின் மீது கவனம் குறித்து விவரிக்கவும்.

- போரிஸ் யெல்ட்சின் 1961இல் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்த இவர் 1968இல் கட்சியின் முழுநேர ஊழியரானார்.
- பின்னர் கட்சியில் முக்கியப் பதவிகளை வகிக்கத் தொடங்கினார்.
- மாஸ்கோ கட்சி அமைப்பிலுள்ள ஊழல்களைக் களைவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1986இல் யெல்ட்சின் பொலிட்பீரோவின் உறுப்பினராக உயர்த்தப்பட்டார்.
- விரைவில் அவர் மாஸ்கோவின் மேயராக நியமிக்கப்பட்டார்.
- கட்சி கூட்டங்கள் சீர்திருத்தப்பணிகள் மிக மெதுவாக நடைபெறுவதாக இவர் விமர்சனம் செய்ததால் கோர்பச்சேவின் எதிர்ப்பைச் சம்பாதித்தார்.
- நிர்வாகம் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும், பொருளாதாரம் சீர்திருத்தப்பட வேண்டும் என்றார்.
- சோவியத் யூனியனின் மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஒரு இடத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றார்.
- கோர்பச்சேவின் விருப்பத்திற்கு எதிராக சோவியத் பாராளுமன்றம் யெல்ட்சினை ரஷ்யகுடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.
- இவரே சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் 1991இல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவரானார்.